
# தங்க மலர்



யா/ கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
கனிஷ்ட வித்தியாலயம்
மல்லாகம்

## சிறப்பு மலர்

## 2015

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கமலர் வெளியீடும் பரிசளிப்பு விழாவும்

# 2015

## யா/கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயம் மல்லாகம்

## J/ DR.THANGAMMA APPAKUDDI KANISTAA VIDYALAYAM MALLAKAM

09-03-2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| நூல்: | தங்க மலர் |
| வெளியீட்டுத்திகதி: | 09.03.2015 |
| நூலின் அளவு: | B5 |
| தாளின் தன்மை: | 80 g |
| எழுத்தின் தன்மை: | 12 |
| பக்கங்கள்: | 80+viii |
| பிரதிகள்: | 200 |
| அச்சுப்பதிவு: | நீற் நிறுவனம்,<br>உரும்பிராய். |
| வெளியீடு: | மலர்க்குழு |
| மலர்க்குழு: | கௌரவ ஆலோசகர்:<br>திரு. சி. சிவகுமாரன் (அதிபர்) |
| மலர் ஆசிரியர்: | திருமதி.சி.பரமசிவம் |
| மலர்க்குழு: | திருமதி.பா.தவக்குமார்<br>செல்வி. ந.சாரதா<br>திருமதி.ஜெ.தயாளினி<br>திருமதி.சு.சிவலிங்கம்<br>திருமதி.ர.ஜெயசங்கர் |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது ஆலயம்



## எமது அன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மகுடவாசகம்:-* *கல்வியே கருந்தனம்*

School Motto:- Education is the most wealth.

*தூரநோக்கு:-*

*சமநிலை ஆளுமையுடைய பிரஜைகளை உருவாக்குதல்.*

**Vision:-**

**Creating citizen of balance Personality.**

*பணிக்கூற்று:-*

*கற்றலுக்குரிய கவிநிலையினூடாக அடைவு மட்டத்தை உயர்த்துதல்.*

Mission:-

Through the learning Situation enhance the output level



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கீதம்

வாழ்த்திடுவோம் எங்கள் வண்டமிழ்ச் சாலையை
வளர் இளம் சிறுவர் நாம் கூடி
அருளொடு விளங்கிடும் ஐங்கரனைத் தினம்
அன்புடன் நாம் என்றும் துதிப்போம்
பெருமைகள் அளித்திடும் பெற்றோரைப் பேணியே
பெரியோர்கள் மனங்களில் நிற்போம்.
( வாழ்த்திடுவோம்)

பல்கலை ஓங்க நற்பண்புகள் வளர்ந்திடப்
பாலர்கள் நாம் இங்கு நல்
கல்வியைக் கனிஷ்ட வித்தியாசாலையில்
களிப்பொடு கருத்தினிற் கொள்வோம்.
( வாழ்த்திடுவோம்)

மல்லாக மக்களின் மனங்களில் உறைந்திடும்
மழலை நற்செல்வர்கள் நாமே
பல்லாண்டு காலங்கள் பாரினிற் சிறந்த நற்
பயன்பெற மகிழ்வுடன் உழைப்போம்.
(வாழ்த்திடுவோம்)

வாழிய வாழிய எங்கள் நற்கழகம்
வாணியின் அருளுடன் நீடு
வளர தமிழ் கலை வளம் பொங்கி
வாழிய எங்கள் கலைத்தாய்
வாழ்க.. வாழ்க.. வாழ்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறை நுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெருந் தமிழணங்கே

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையா ளமுந் துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்த ஒன்றுபல ஆயிடினும்
ஆச்சரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து திசையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துமே

*மனோன்மணியம்*
பேராசிரியர் பொ. சுந்தரம்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே
வானமளந்த தனைத்து மளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ் கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்க
துலங்குக வையகமே
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே
வான மறிந்த தனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழியவே!

மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் கீதம்

முத்து முத்தான சித்திரங்கள் - இலங்கை
முற்றத்தில் சிந்திய இரத்தினங்கள்
பற்றும் பாசமும் வைத்தவற்றை -நல்ல
பாதையிற் சேர்க்கும் பணி எமதே!

முத்து

அன்னை மடியில் அரவணைதத - பிள்ளை
பள்ளி வரும் பிஞ்சுப் பாலகனாம் - அவன்
தன்னந் தனிமையைப் போக்கி - உள்ளத்தில்
நம்பிக்கை அன்பையும் ஊட்டிடுவோம்

முத்து

எண்ணும் எழுத்தும் உணரத்திடுவோம் - உள்ளத்
தேவைகள் அறிந்து பூர்த்தி செய்வோம் - அவன்
ஒழுங்குடன் ஒழுக்கமும் பேணி நல்ல
சிந்தனை ஆற்றலைத் தூண்டிடுவோம்

முத்து

கற்பித்தல் கற்றல் நிகழ்ந்திடவே - நல்ல
கட்டுப் பாட்டுடன் வகுப்பறையில் - தினம்
பெற்ற கடமையைப் பேணியேற்றே - ஞாலம்
போற்றும் சமூகத்தை நாம் படைப்போம்

முத்து

இயற்றியவர்
**சங்கீதபூஷணம் பொன்.வாமதேவன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலரின் உள்ளே ....


| | |
|---|---|
| 1. ஆசிச் செய்திகள் | 01-03 |
| 2. அதிபரின் உள்ளத்திலிருந்து... | 04 |
| 3. பிரதிஅதிபரின் உள்ளத்திலிருந்து.... | 05 |
| 4. மலராசிரியரின் அகத்திலிருந்து.... | 06 |
| 5. பாடசாலை வரலாறு | 07 |
| 6. யா/மல்லாகம் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயமும் சிவத்தமிழ்ச்செல்வி அம்மையாரும் | 14-15 |
| 7. இலங்கையில் முதலாம்தர பாடசாலைக் கல்வி ஏற்பாடு வளர்ச்சியும் குறைபாடுகளும் | 16-20 |
| 8. ஆசிரியர்களின் நவீன வகிபங்குப் பரிமானமாக "உளவளத்துணையாளர்" | 21-24 |
| 9. ஆரம்பப் பிள்ளைகள் | 25-26 |
| 10. பாசாலைக் கல்விமுறையின் செயன்முறையினை வினைத்திறனுடன் வழிநடாத்துவதற்கான கலைத்திட்டத்தின் வகிபாகம் | 27-30 |
| 11.ஆரம்பக் கல்வியில் பெற்றோரின் பங்களிப்பு | 31-32 |
| 12.குருவும் சீடரும் | 33-34 |
| 13.ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கற்றல் சூழலை ஒழுங்கமைத்தல் | 35-36 |
| 14.சிறுவர்கள் துஷ்பிரயோகமும் பெற்றோர் பாடசாலைகளின் பங்களிப்பும் | 37-38 |
| 15.ஆரம்பக் கல்விக்கான பிள்ளைநேய அணுகுமுறை | 39-44 |
| 16. வெற்றிகரமான பாடசாலைகள் வினைத்திறனுடனும் விளைதிறனுடனும் காணப்படவேண்டும் | 45-48 |
| 17.மறைந்தும் எம் உள்ளத்திலிருந்து மறையாத ஆசிரியர் அமரர் செல்வி.பகவதி நவரத்தினம் | 49 |
| 18.மாணவர் ஆக்கங்கள் | 50-61 |
| 19.ஆசிரியர் குழாம் | 62 |
| 20 அதிபர்களின் சேவைக்கால விபரம் | 63 |
| 21. புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் | 64 |
| 22. புலமைப் பரிசில் பரீட்சை புள்ளிவிபரம் | 65 |
| 23.போட்டிகளும் மாணவர்களின் வெற்றிகளும் | 66-72 |
| 24.School Learning Improvement Grant to Schools | 73-75 |
| 25.ஆசிரியர் வரவு(வரைபடம்) | 76 |
| 26.மாணவர் வரவு (வரைபடம்) | 77 |
| 27.பாடசாலை நில வரைபடம் | 78 |
| 29.நன்றிக்குரியவர் வரிசையில்.... | 79 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி

யா/கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவை முன்னிட்டு "தங்கமலர்" வெளியிடப்படுவதனையிட்டு மகிழ்வடைவதுடன், அம்மலர் சிறப்புற அமைய எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எமது வலயத்தில் வகை III பாடசாலையாக சிறார்களின் கல்வியை முன்னெடுத்துச் செல்லும் இப் பாடசாலை ஆரம்பக்கல்வியில் தனது சிறந்த வெளியீடுகளை வெளிக்கொணர வேண்டும் என்பதுடன், இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும், பாலகர்களின் திறன்களை வெளிக்கொணர வேண்டும்.

இம் மலர் வெளியீடு பாடசாலையின் கடந்த கால வரலாற்றினையும், பாடசாலையின் அம்சங்களையும் வெளிக்கொணரும் ஒரு ஊடகமாக அமைந்திருக்க வேண்டும் என்பதுடன் தொடர்ந்து வரும் காலங்களிலும் இவ்வாறான வரலாற்று ஆவணங்கள் மலர வேண்டும் என்றும் வாழ்த்துகின்றேன்.

இம் மலரின் உருவாக்கத்திற்கும், வெளியீட்டுக்கும் முன்னின்றுழைத்த அனைத்து ஆசிரியர், மாணவர் மற்றும் பாடசாலைச் சமூகத்தினருக்கும் எனது ஆசிகளையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்வதுடன், மலர் வெளியீடும் சிறப்புற அமையவும் வாழ்த்துகின்றேன்.

செல்வரட்ணம் சந்திரராஜா,
கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம் வலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின்**
**தலைவரும்,**
**இளைப்பாறிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபருமாகிய**
**செஞ்சொற்செல்வர் கலாநிதி.ஆறு.திருமுருகன் அவர்கள்**
**வழங்கிய**



# ஆசிச்செய்தி.

"கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யாவை"

-திருவள்ளுவர்

கல்விச் செல்வமே நிலையான செல்வம் ஏனையவை எவையும் நிரந்தரமல்ல என்ற உண்மைகளை எம்முன்னோர் நன்கு உணர்ந்தனர். கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து எம் சமூகத்தை வளர்த்தனர். மல்லாகம் திருவூரில் இன்று பெருமை பெற்று விளங்கும் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயத்தில் தமது ஆரம்பக் கல்வியைக்கற்று இன்று வளமாக வாழ்ந்தவர்கள் பலர். இப்பாடசாலை எங்கள் தேவஸ்தானத்தின் பெருந்தலைவராக விளங்கிய அன்னையின் நாமத்தால் இன்று விளங்குவது சைவத்தமிழுக்கு பெருமைதரும் விடயமாகும். இப்பாடசாலையின் சிறப்பினை வெளிப்படுத்தும் தங்கமலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மிகவும் ஆனந்தமடைகிறேன்

இப்பாடசாலை சகலதுறைகளிலும் சாதனைபடைத்து மிளிரவேண்டும் என துர்க்காதேவியை வேண்டி வாழ்த்துகிறேன். எமது சமூகம் பண்புள்ள, பக்தியுள்ள, அறம்சார் நெறிமுறையில் வாழ பள்ளித்தளங்கள் தம் தூயபணியைத் தொடர வேண்டி ஆசிகூறி அமைகிறேன்.

**கலாநிதி. ஆறு .திருமுருகன்**
**தலைவர்,**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

தெல்லிப்பழைக் கோட்டத்தில் புகழ்பூத்த முதற்தரப் பாடசாலையாக விளங்கும் யா/ கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயமானது "தங்கமலர்" என்னும் சஞ்சிகையை வெளியிடுவதில் உள்ளம் பூரிப்படைகின்றேன்.

கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் தனக்கென இடத்தைப் பிடித்துக் கொண்டமைக்கு எடுத்துக்காட்டுக்களே பல உள்ளன. மாணவர்களது கற்றல் செயற்பாடுகள் மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் வெற்றிவாகை சூடிக்கொண்டேயிருக்கின்றது. சகல துறைகளிலும் முன்னின்று வளர்ச்சி பெறுகின்றது.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அதிசிறப்புப் பெறுபேற்றை எமது கோட்டத்திற்குப் பெற்றுத்தந்து பெருமை தேடித்தந்துள்ளது. மாணவர்களது விடாமுயற்சி, அதிபரின்கடும் உழைப்பு, ஆசிரியர்களின் அர்ப்பணிப்புச்சேவை, துடிப்புள்ள பாடசாலைச் சமூகம் ஆகிய அனைத்து சக்திகளும் ஒன்றிணைந்து பாடாசலை வளர்ச்சிக்கு கருவூலமாக இருப்பது கண்கூடு.

மேலும் தங்கமலர் மலர்ந்து மணம் பரப்பி மாணவச் செல்வங்களை மேம்படுத்துவதுடன் இப்பாடசாலையானது தொடர்ந்தும் சகல துறைகளிலும் வளர்ச்சி பெற வேண்டி இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

திரு. பொ. சண்முககுலகுமாரன்
**கோட்டக்கல்விப் பணிப்பாளர்**
**தெல்லிப்பழை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை அபிவிருத்திச்சபை செயலாளரின் வாழ்த்துச் செய்தி



இவ்வருடம் வெளிவரும் "தங்கமலர்" சஞ்சிகைக்கு எனது ஆசிச்செய்தியை வழங்குவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். தங்கமலரானது சகல மட்டத்திலான வாசகர்களைக் கவரும் அமைப்பில் பெறுமதியான ஆக்கங்களைக் கொண்டு வெளிவருதல் பாராட்டுக்குரியதாகும்.

ஒழுக்க விழுமியங்களைப் பேணிக்கல்விபயிலும் எமது மாணவமணிகளினாலும், அர்ப்பணிப்பு நிறைந்த ஆசிரிய குழாத்தினாலும், அரவணப்பு நிறைந்த, ஆளுமைமிக்க, அன்புள்ளம் கொண்ட அதிபரின் வழிநடத்தலினாலும், நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாகச் கல்வி வளரச்சியில் மேம்பட்டு வளர்ச்சியடைவது மிகையாகாது.

விழா சிறக்கவும் மலர் மலர்ந்து யாவரது கைகளிலும் நறுமணம் வீசவும் திருவருளைப் பிரார்த்தித்து எனது நல்லாசியை மலரினில் வழங்குகின்றோம்.

**திரு. சபீந்திரன்,**<br>
செயலாளர்.<br>
**பாடசாலை அபிவிருத்திச்சபை**

## வாழ்த்துச் செய்தி



ஆரம்பக்கல்வியின் தேவையறிந்து சிறுவர்களுக்கு கல்வியுடன் ஆளுமையையும், நல்லொழுக்கப் பண்புகளையும் ஊட்டி அவர்களின் எதிர்காலவாழ்விற்கு சிறந்த அடித்தளமிடும் இப்பாடசாலை தெல்லிப்பளைக் கோட்டத்திலுள்ள ஆரம்ப பாடசாலைகளுக்கெல்லாம் முன் மாதிரியாக திகழ்வது கண்டு பெருமகிழ்வடைகின்றேன்.

இவ் வித்தியாலயம் தன் வளர்ச்சிப் பாதையில் மேலும் பல வெற்றிகள் பெற்று சிறப்படைவதுடன் இந்நூலும் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றேன்.

பல வெற்றிகள் பெற்று சிறப்படைவதுடன் இந்நூலும் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றேன்.

திருமதி. ஜெ.தயாளினி<br>
**மலர்க்குழு,**<br>
பழைய மாணவர் சங்க செயலாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிபரின் உள்ளத்திலிருந்து....................

அறிவுப்பசி நீக்கி அஞ்ஞான இருளகற்றி மல்லாகம் பதி தனிலே மாண்புடைய சமுதாய உருவாக்கத்திற்காக யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் உதித்தது. தற்போது யா/கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயம் என்ற நாமத்துடன் பரிணமித்து வீறுநடை போடுகின்றது எமதுபாடசாலை.

எமதுவித்தியாலயத்தின் பெருமைகளையும், திறமைகளையும், சாதனைகளையும், படைப்புக்களையும் ஆவணப்படுத்தும் நோக்கிலும், உலகறியச் செய்யும் முகமாகவும் ,பரந்த நல்லறிவும், மாண்பும், மேன்மையும் உள்ள உள்ளங்களின் எண்ணங்களையும் ஓர் ஆவணமாக்க வேண்டுமென்ற எண்ணத்துடனும் இன்று "தங்கமலர்" எனும் நாமம் தாங்கி மலர்வதில் நான் மிகவும் மகிழ்வடைகின்றேன்.

யா/கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயமாகப் பெயர் மாற்றம் பெற்று ஆறாண்டுகள் உருண்டோடிவிட்ட நிலையில் அதன் வரலாறுகள், சாதனைகள் தாங்கிமுதல் மலராக "தங்கமலர்" வெளிவருகிறது.

இம் மலரானது மாணவர்களின் அறிவுத் தேடல், புத்தாக்கத்திறன், தன்னம்பிக்கை ஆகியவற்றைப் புலப்படுத்துவதாக அமைகின்றமை பாராட்டத்தக்கது. இம் மலர் மலர்ந்து மணம் பரப்ப எனது வாழ்த்துக்களையும், நல்லாசிகளையும் வழங்குவதோடு இந் நூல் மலர சகல வழிகளிலும் உதவிகள் நல்கிய அனைத்து உள்ளங்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

திரு.சின்னத்துரை சிவகுமாரன்.<br>
**அதிபர்**<br>
**யா/கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி**<br>
**கனிஷ்ட வித்தியாலயம்**<br>
**மல்லாகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது அதிபர்




**திரு. சி. சிவகுமாரன்**
**B.A,Spc Tr (Tamil) Dip.in Edu. (Merit) M.Ed, SLPS - III**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது பிரதி அதிபர்



**திருமதி. பா. தவக்குமார்**

பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி SLTS - II - I

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *பிரதி அதிபரின் உள்ளத்திலிருந்து....*

யா/கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டு நூற்றாண்டு காலங்களாகி விட்டன. எனினும் பாடசாலையின் வரலாறுஇ நிகழ்வுகள்இ சாதனைகள்இ தொடர்பான விடயங்களை ஆவணப்படுத்தும் நோக்கில் முதலாவது மலர் 2007ம் ஆண்டு வெளிவந்தமை யாவரும் அறிந்த விடயம் தற்பொழுது இரண்டாவது மலர் "தங்க மலர்" எனும் பெயரில் வெளிவருவதை இட்டு நான் மிக மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்நூலில் பாடசாலையின் வரலாறு பெருமைகள்இ மாணவர்கள் ஈட்டிய சாதனைகள் மாணவர்களது ஆக்கங்கள் நிறைந்துள்ளன. வருங்கால மாணவ சமூகம் இந்நூலினைப் படித்து நூலின் வழி நிற்க எனது நல்லாசிகள் உரித்தாகட்டும். இம் மலர் மலர்ந்து மணம் பரப்ப இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

திருமதி.பாக்கியலக்சுமி தவக்குமார்
**பிரதி அதிபர்**
**யா/கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி,**
**கனிஷ்ட வித்தியாலயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலராசிரியரின் அகத்திலிருந்து...



1832ஆம் ஆண்டு நிறுவிய எங்கள் பாடசாலை பெருவிருட்சமாக ஊரெங்கும் விழுதுகளைப் பரப்பி நிற்கின்றது. ஆரம்பத்திலிருந்து இன்றுவரை செயற்றிறன் மிக்க அதிபர்களையும் , ஆசிரியர்குழாமையும் கொண்டு விளங்குகின்றது. இவ் அதிபர் ஆசிரியர்களது அயராத உழைப்பினாலும், விடாமுயற்சியினாலும் பாடசாலை உயர் வடைந்துள்ளது.

இவ்வாறாக அர்ப்பணிக்கும் அதிபர், ஆசிரியர், கல்வி சாராஊழியர் மற்றும் பாடசாலையின் வளர்ச்சிக்காக அரும்பாடுபடும் அனைத்து உள்ளங்களையும் சிரம் தாழ்த்தி மலர்க்குழு சார்பில் வணங்குகின்றேன்.

எமது அதிபர் திரு.சி.சிவகுமாரன் அவர்கள் பாடசாலைக்கு பெருமை தேடித்தருபவர். தங்கமலரானது மாணவரின் அடைவுகள், மாணவரின் ஆக்கங்கள், கல்விப்புலப்பெரியோர்களின் ஆக்கங்களையும் அள்ளித் தருகின்றது. இதிலிருந்து மாணவர்களின் எழுத்தாற்றல், சிந்தனையாற்றல் வளரும் என்பதில் சந்தேகமில்லை.

மலருக்கு ஆசிகள், வாழ்த்துக்கள் வழங்கி பாடாசாலைக்கும் ஆசிகள் கிடைக்க வேண்டுமென இறைவனை வேண்டுகின்றேன். பாடசாலை வளரச்சியடைய ஆக்கங்ளை வழங்கிய சான்றோருக்கு நன்றி கூறுகின்றேன். தங்கள் ஆக்கங்களைக் கண்டு மகிழ்வுறும் மழலைச்செல்வங்களின் ஆக்கங்களுக்கு நன்றி கூறுவதுடன் சாதனைகளை நிலைநாட்ட இன்றே திடசங்கற்பம் கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்கின்றேன்

பாடசாலையின் செயற்பாடுகளை அழகுணர்வுடன் ஒப்புவித்தவர்களுக்கும், ஒத்துழைப்பு வழங்கிய ஆசிரியர்குழாத்திற்கும் கணினி மயப்படுத்தி நூல்வடிவமாக்கிய நீற் நிறுவனத்தினருக்கும் நன்றிகள்.

நூல் வெளியிட உழைத்த அனைத்து உள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி. சி.பரமசிவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையின் வரலாறு

இந்து சமுத்திரத்தின் திலகமெனத் திகழும் இலங்கைத் தீவின் சிகரமாக மிளிரும் யாழ்ப்பாணத்தில் மல்லாகம் கிராமத்தில் நீதிமன்ற வீதியில் அமைந்து பிஞ்சு உள்ளங்களின் அறிவுக் கண்களுக்கு ஒளியூட்டும் நிலையமாக மானிட வாழ்க்கைக்கு வளமூட்டும் சிறந்த கல்விப்பணி ஆற்றிவரும் நீண்ட வரலாற்றுப் பெருமை மிகுந்த ஓர் ஆரம்பப் பாடசாலையாக யா/ கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயம் விளங்குகின்றது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தின் கல்வியானது ஆங்கில ஆட்சியாளரால் நிறுவனமயப்படுத்தப்பட்டுப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்ட போது உருவான ஒரு சில முதன்மைப் பாடசாலைகளில் இதுவும் ஒன்றாகும்.

"நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லோர்க்கும் பெய்யும் மழை" என்ற ஔவைப்பிராட்டியின் வரிகளுக்கு இணங்க தில்லையம்பலச் சட்டம்பியாரினால் 1832ம் ஆண்டு பத்து மாணவர்களுடன் "அமெரிக்கமிஷன் பாடசாலை"என்ற நாமத்துடன் தோற்றுவிக்கப்பட்டு "கலட்டிப் பாடசாலை"என்ற புனைபெயருடன் படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்த பாடசாலை 1953ம் ஆண்டில் க.பொ.த. சாதாரணதர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுத் தரமுயர்ந்த போதிலும் 1972ம் ஆண்டு மல்லாகம் மகாவித்தியாலயத்துடன் இணைந்து இயங்கி வந்தது.

இருப்பினும் மீண்டும் பாடசாலை முன்னர் அமைந்திருந்த இடத்திலேயே ஆரம்பவகுப்புக்களைக் கொண்டதாக "யா/ மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்" எனும் பெயருடன் இயங்கி வந்தது. கல்வி உலகில் அன்று முதல் இன்றுவரை சகல துறைகளிலும் முதன்மை பெற்று விளங்கும் எமது பாடசாலை கடந்த 2009.03.09 தொடக்கம் யா/ கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயம் எனும் நாமம் தாங்கி தனது சாதனைகளையும், புகழையும் உலகமெங்கும் பரப்பிய வண்ணம் இயங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பாடசாலை அன்று முதல் இன்றுவரை முகாமைத்துவ நுட்பங்கள் நிறைந்த அர்ப்பணிப்புடன் பாடசாலையை வளர்க்க வேண்டும் என்ற நோக்கத்துடன் நிர்வகித்த பல அதிபர்களின் அயராத சேவையினால் பாடசாலை படிப்படியாக வளர்ச்சி அடைந்து வருகின்றமை யாவரும் அறிந்ததே. தற்பொழுது சிறந்த திட்டமிடலுடன் அர்ப்பணித்துச் சேவையாற்றும் அதிபர், ஆசிரியர்களின் அயராத உழைப்பினால் மாணவர்கள் பாடவிதான, இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் ஏனைய வசதி படைத்த பெரிய பாடசாலைகளுடன் போட்டியிட்டு வெற்றிபெற்றுப் பல சாதனைகள் படைத்துப் புகழ் பெற்று விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

சிறந்த திட்டமிடலுடன் கூடிய முகாமைத்துவத்தின் கீழ் சேவையை மதித்து அர்ப்பணிப்புடனும், கடமையுணர்வுடனும் சேவையாற்றும் ஆசிரியர்களினது அயராத உழைப்பினால் கடந்தவருடம் (2014) தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சையில் இருபத்தொரு (21) மாணவர்கள் சித்திபெற்று வலிகாமம் கல்வி வலயத்தில் சிறந்த பெறுபேறு பெற்ற ஆரம்பக் கல்விப் பாடசாலையாக விளங்கியதுடன் தெல்லிப்பழைக் கோட்டத்தில் முதற்தரப் பெறுபேறுபெற்ற பாடசாலையாக விளங்குகின்றமை யாவரும் அறிந்ததொன்றாகும்.

*பாடசாலையின் மைதானமும் மைதான நிதியமும்*

இது வரை காலமும் பாடசாலைக்கு மைதானம் இல்லாதிருந்தமை பாரியகுறைபாடாக இருந்தது. அதனை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று பாடசாலைச் சமூகத்தினர் முன் வந்து பாடசாலைக்கு அருகில் ஒரு காணியை வாங்குவதற்குத் திட்டமிட்டனர். வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்கு இவ்விடயத்தைச் சுட்டிக் காட்டிய போது அவர் அதற்கான அனுமதியை NP/03/06/Donation இலக்க 23.07.2013 திகதிய கடிதத்தின் மூலம் வழங்கியுள்ளார். அதன் பின்னர் மைதானம் கொள்வனவு செய்வதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இது வரை பெற்றோர் சார்பில் ரூபா முந்நூற்று இருபதாயிரத்து ஐந்நூறு (ரூபா 320500) பணம் ஐம்பத்தொரு பெற்றோர்களால் வழங்கப்பட்டுள்ளது. இம் மைதானத்தை எமது பாடசாலையின் பழைய மாணவர் திரு.சி.விக்கினராஜா அவர்கள் தனது சொந்தப் பணத்திலேயே இம் மைதானத்தை வாங்கி அன்பளிப்புச் செய்ய முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிரந்தர ஆசிரியர்கள்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பள்ளி ஆசிரியர்களும் முகாமைத்துவ குழுவும்



கல்வியியற் கல்லூரி ஆசிரியர்கள்



கணினி ஆசிரியர்கள்



கல்விசாரா ஊழியர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது வித்தியாலயத்தின் உருவாக்கத்திலும், அதன் வளர்ச்சியிலும் எமது பழைய மாணவரும், இலங்கை வங்கியின் ஓய்வுபெற்ற முகாமையாளரும், அரிமாக்கழக உறுப்பினருமாகிய திரு.சி.விக்கினராஜா அவர்களது பங்கும் பணியும் அளப்பரியது. இவர் எமக்கு ஆற்றும் சேவைகளை இயம்பாமல் இருக்கமுடியாது.

எமது பாடசாலையில் அமைந்துள்ள மேல்மாடிக் கட்டடம் அமைய இருந்த காணித் துண்டத்தை தன் சொந்தப் பணத்தில் வாங்கித் தந்து பாடசாலைத் தோற்றத்தைப் பொலிவுறச் செய்த பெருமகன்.

இங்கு கல்வி கற்கின்ற வறிய மாணவர்களில் 60 மாணவருக்கு தன் சொந்தப் பணத்திலேயே இலங்கைவங்கி - காங்கேசன்துறைக் கிளையில் சேமிப்பு வைப்பினை ஆரம்பித்து வழங்கியதன் மூலம் வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு வழிகாட்டியவர்.

இப் பிரதேசத்திலுள்ள அனைத்து மாணவர்களும் கற்கக் கூடியதாக எமது பாடசாலைகளில் வார இறுதி நாட்களில் தன் சொந்தச் செலவில் ஆங்கில வகுப்புக்களை இலவசமாக நடத்தி வருகின்றமை பாராட்டப்படக் கூடிய விடயமாகும். எமது கலைமகள் முன்பள்ளியின் விளையாட்டுப் போட்டிக்காக ஐம்பதாயிரம் ரூபா (50000) பணத்தினை நிலையான வைப்பிட்டு அதன் வட்டிப்பணம் மூலம் முன்பள்ளி விளையாட்டுப் போட்டி சிறப்புற நிகழ உதவியவர்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக நாம் கொள்வனவு செய்யவுள்ள மைதானத்தைத் தன் சொந்தப் பணத்திலேயே (ரூபா **இருபது இலட்சம்** வாங்கி எமக்கு அன்பளிப்புச் செய்ய முன்வந்துள்ளமை எமக்குக் கிட்டிய பேரதிஸ்டமே. எமது பாடசாலைக்கு மட்டுமன்றி எமது அயற் பாடசாலைகளுக்கும், முன்பள்ளிகளுக்கும் தன்னாலான ஒத்துழைப்புக்களை நல்கி வருகின்றார். தன்னிடம் வறுமையுரைத்து வந்த பொறியியல்பீட மாணவனிற்கு அவனது கல்வித் தேவைக்கு உதவி வழங்குகிறார்.

சிறந்த சமூக சேவகியாம் அன்னையிடம் கற்றிட்ட இம் மகனிற்குச் சமூக சேவைகள் பற்றி எடுத்தியம்புவதோ இயல்பாம். இவர் நரம்பில் அன்றே அன்னையார் உணர்த்தியதன்றோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பாடசாலையில் நிறைவேற்றப்பட வேண்டிய தேவைகள்.*

1. பிள்ளைநேயப் பாடசாலை அம்சங்கள் உள்ளடங்கிய 120X30 வகுப்பறை மாடிக் கட்டடத் தொகுதி.
2. நூலகக் கட்டடத் தொகுதி.
3. நூலகத் தளபாடங்கள்.
4. கணணிகள், கணணித் தளபாடங்கள்.
5. மின்பிறப்பாக்கி.
6. பல்லூடகக் கருவியும் அதற்கான திரையும்.
7. போட்டோப் பிரதி இயந்திரம்.
8. றோணியோ இயந்திரம்.
9. உள்ளக ஒலி பெருக்கி வசதி.
10. முன்பள்ளிக் கட்டடம்.
11. முன்பள்ளித் தளபாடங்கள்.

*கலைமகள் முன்பள்ளி.*

எமது வித்தியாலய நிர்வாகத்தின் கீழ் இயங்கிவரும் கலைமகள் முன்பள்ளி மல்லாகம், தெல்லிப்பழைப் பிரதேசத்தில் வாழும் பாலகர்களுக்கு முன்பள்ளிக் கல்வி புகட்டும் கேந்திர நிலையமாக மிளிர்கின்றது. பொறுப்பாசிரியர் செல்வி.இ.பரம்சோதி அவர்களின் சிறந்த வழிநடத்தலின் கீழ் திருமதி.பி.ரங்கேஸ்வரி, திருமதி.த.வாசுகி, திருமதி. ரேணுகா ஆகிய ஆசிரியர்கள் கல்வி அறிவூட்டுகின்றனர். தற்பொழுது 80இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்.

சுருங்கக் கூறின் சமூகம், கலை, கலாசார விழுமியங்களைக் கலந்து ஆரம்பக்கல்வி அறிவூட்டி சிறந்த தூரநோக்கு, விசாலமான சிந்தனைத் திறன், பன்முகப் பார்வைத் திறன் ஆன்மிக ஒழுக்க மரபுகள் போன்ற ஆளுமைப் பிரமாணங்களுக்குரிய அடித்தளத்தை (இளமைப் பருவப் புத்தெழுச்சிபொங்கிப் பிரவாகிக்கின்ற) பிஞ்சு உள்ளங்களில் விதைத்து அதன் தொடர் வளர்ச்சிகள் ஏனைய இடைநிலைப் பாடசாலைகள், உயர் கல்வி நிறுவனங்களின் பெறுபேறுகளை வெளிக் கொண்டு வருவதற்கும் அவர்களின் ஆற்றுகைத் திறன்கள், இயைபாக்கத் திறன்கள் சமூகமட்டத்திற்குள் முடங்கிப் போகாமல் தேசிய, சர்வதேசமட்டத்திற்கு வியாபித்துச் செல்வதற்குரிய கலங்கரை விளக்கமாக இப் பாடசாலை செயற்பட்டு வருகின்றது என்றால் மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழு வருடங்களாக கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள்



திருமதி ச. நகுலேஸ்வரன்



திருமதி யோ. தயாளன்



திருமதி த. சிவகுமார்



திருமதி த. ஜெயரதி

### 2013 கல்வியியற் கல்லூரி உள்ளக ஆசிரியர்



செல்வி நா. தீபாஜினி



செல்வி கு. சிந்துஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகவதி நவரட்ணம் நிதியம் ஒன்றை ஆரம்பித்து அதன் மூலம் எமது பாடசாலையில் ஆங்கில தினப் போட்டியில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு வருடாந்தம் ஆங்கில தின விழா மூலம் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றனர்.

இந் நிதியத்திற்காக ரூபா ஐம்பதாயிரம் (ரூபா50000) ஐ 09.01.2013 அன்று மக்கள் வங்கி காங்கேசன்துறைக் கிளையில் நிரந்தர வைப்பாக இட்டு அதன் மூலம் பெறப்படுகின்ற வட்டியால் மேற்படி மாணவர்கள் கௌரவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

***தில்லையம்பலச் சட்டம்பியார்***

எமது பாடசாலையில் ஆசிரியராகவும் அதிபராகவும் கடமையாற்றிய முன்னாள் அதிபர் அமரர் தில்லையம்பலம் அவர்களின் ஞாபகார்த்தமாக அமைந்துள்ள கட்டடம் புனரமைக்க வேண்டிய நிலையிலுள்ளது. இலண்டனில் வாழுகின்ற இவரது பேரப் பிள்ளையாகிய திருமதி.லீலாதேவி பாலசுப்பிரமணியம், திருமதி.கமலாதேவி கார்த்திகேசு ஆகியோர் தமது தெல்லிப்பழை யிலுள்ள காணியை விற்று ரூபா இருபது இலட்சம் (2000000) பணத்தினை மண்டப புனரமைப்பின் ஆரம்ப நிதியாக வழங்கியுள்ளனர். இம் மண்டப புனரமைப்பிற்கு சுமார் எழுபத்து மூன்று இலட்ச ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மிகுதிப் பணம் கிடைக்குமிடத்து மண்டபப் புனரமைப்பு ஆரம்பிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லாகம் யா/ கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயமும் சிவத்தமிழ்செல்வி அம்மையாரும்

திரு.சிவபாலன்



மல்லாகம் யா/கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயம் பெயர் மாற்றம் பெற்று ஆறாவது ஆண்டு விழாவையும் பரிசளிப்பு விழாவையும் இன்று கொண்டாடுகிறது.இவ் வித்தியாலயம் மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் என்ற பெயரில் 175 ஆண்டுகள் கல்விப் பணியாற்றியது. 2007ல் வரலாற்றுப் பதிவாக சிறப்பு மலர் ஒன்றை வெளியிட்டு பெருவிழாவைக் கொண்டாடியது.

மல்லாகம்பதி திருக்கோயில்களாலும், பாடசாலைகளாலும், இங்கு வாழ்ந்த பேரறிஞர்களாலும் பெருமை பெற்றது. இங்கு தமிழ்த் தொண்டு ஆற்றிய சரித்திரப் பேரறிஞர் திரு.வி. கனகசபைப்பிள்ளை, தமிழ்அறிஞர் ச.அம்பிகைபாகன், பெரியார் சரவணமுத்து, இந்துசாதனம் ஆசிரியர் நமசிவப்பிரகாசம் போன்ற ஒருசில அறிஞர்களை மறக்கமுடியாது.

சிவத்தமிழ்செல்வி அம்மையார் தமது ஆரம்பக் கல்வியைக் கற்று பெருமை பெற்றார். இப்பாடசாலையை தமது வாழ்நாள் முழுவதும் தமது உயிரினும் மேலாக மதித்தவர். எனவே இப் பாடசாலையின் வளர்ச்சிப் பணிக்கு தமது உதவிக்கரங்களை நீட்டி ஆற்றிய தொண்டுகளை பாடசாலை ஆவணங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

சிவத்தமிழ்செல்வி அம்மையார் 15/06/2008ல் சிவபதம் எய்தினார். அம்மையார் தெல்லிப்பளை துர்க்கைஅம்மன் கோவில் இன்றைய எழுச்சி நிலைக்கு வித்திட்ட பெருமை கொண்டவர். இவரின் அருமை பெருமைகளை அறிந்து இப்பாடசாலையின் கல்விச்சமூகம் இப் பாடசாலையின் பெயரை அம்மையாரின் பெயரில் மாற்றம் செய்ய பல முக்கியஸ்தர்கள் முயற்சிசெய்தனர் - செயற்பட்டனர். வெற்றி கண்டனர். இக்காலத்தில் அதிபராக இருந்த திரு.மா. ஆனந்தகுமார் உள்ளிட்ட பாடசாலை ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள் யாவரும் ஒன்றுதிரண்டு கல்விஅமைச்சர், மாகாணக் கல்விப்பணிப்பாளர்கள், கல்வித் திணைக்களங்கள் யாவற்றுக்கும் விண்ணப்பம் செய்தனர். இவற்றுக்கு வலிகாமம் வலயக்கல்விப்பணிப்பாளர் திரு.ச. கைலாசநாதன் அவர்களும் முயற்சி செய்தார்கள். இவ்வித்தியாலய முன்னாள் அதிபர்களும் ஓய்வு பெற்று இருந்தாலும் முன்னின்றனர்.

இந்த விண்ணப்பங்கள் யாவும் கல்விநிர்வாக மாற்றத்தினால் தாமதமாகியது. இதனால் மனமுடைந்த அதிபரான திரு.மா. ஆனந்தகுமார் அவர்கள் எம்மோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்து கதைத்து தாங்கள் அனுப்பிய ஆவணங்களை காண்பித்தார். பிரதிகளையும் தந்து இருந்தார். யாவும் செய்வதறியாது இருந்தேன். கோயிலுக்கு கும்பிடப் போக தெய்வம் குறுக்கே வந்தது போல எனது பேரன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய கல்விபண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் திரு.இ.இளங்கோவன் அவர்கள் துர்க்கை அம்மன் கோவிலுக்கு வருகை தந்தார். அவர்களுடன் முன்னாள் பல்கலைக் கழக துணைவேந்தர் நா. சண்முகலிங்கம், திருமதி செல்வின் போன்றவர்களும் வருகை தந்தனர். கனிஸ்ட வித்தியாலய பெயர் மாற்றத்தைப்பற்றி மிகவிநயமாக விண்ணப்பம் செய்தேன் . சிவத்தமிழ்செல்வி அம்மையாரை நன்கு தெரிந்த செயலாளர் ஐயா தம் பணியை நிறைவேற்றித் தந்தார். அக்காலத்தில் எங்கள் வடபுலதின் கல்விப்புலம் பற்றிய ஆழமான அனுபவத்தைக் கொண்டவர் இவர். இங்குள்ள பாடசாலைகளின் அபிவிருத்திப்பணியில் தம்மை முற்றுமுழுதாக ஈடுபடுத்திக் கொண்ட பெருமகன, இவர் இப் பாடசாலையின் பரிசளிப்பு விழாவிற்கு வருகை தந்து பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

சிவத்தமிழ்செல்வி அம்மாவின் பெயரில் மாற்றம்பெற்றமை துர்க்கை அம்மன் திருவருளேயாகும் என்பர் யான் ஒரு கருவியாகப் பயன்பட்டேன் ஒழிய என்னால் எதுவும் நடைபெறவில்லை என உணர்வு பூர்வமாக குறிப்பிடுவார்.

இத்துணை சிறப்புவாய்ந்த யா/கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட்ட வித்தியாலயம் கல்விப்பணியில் வலிவடக்குப் பகுதியில் கொடிகட்டிப் பறக்கின்றது. இதற்கு இவ்விதியாலயத்தின் ஆசிரியர்களும் கல்விச் சமூகமும், பெற்றோர்களும் இன்றைய அதிபர் திரு. சி.சிவகுமாரன் அவர்களும் எனக் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

மேலும் தெல்லிப்பழை துர்க்கை அம்மன்சந்நிதியில் 1981ம் ஆண்டு சென்னை சைவசித்தாந்த மகாசமாசத்தின் பவளவிழா சிறப்பாக நடைபெற்றது. அவ்விழாவிலே பேருரையாற்றிய முன்னைநாள் யாழ்பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்கள் குறிப்பிடும் போது "ஒரு குழந்தையை நீ எதற்குப் படிக்ப்போகின்றாய் என்று ஒருவர் கேட்டபோது அதற்கு அக் குழந்தை நான் தங்கம்மா அப்பாக்குட்டிக்கு படிக்கப்போகின்றேன் என்று கூறிற்றாம். நான் டாக்டருக்கு அல்லது இஞ்சினியருக்கு படிகப் போகின்றேன் என்று கூறுவது போல அக்குழந்தையின் மறுமொழி அமைந்தது என்று பேசினார். அத்தகைய புகழ்மிக்க அம்மையாரின் பெயரைக் கொண்ட இவ்வித்தியாலயத்தில் கல்வி கற்கும் பேறுபெற்ற மாணவர்கள் அத்தனைபேரும் பெரிய பாக்கியசாலிகளே. சித்தமிழ்செல்வி அம்மா ஏழைப் பெண்பிள்ளைகளின் கல்விப்பணிக்கு ஆரம்பித்த துர்க்காபுரம் மகளிர் இல்லம் கல்வியில் பெரும் பேறு பெறுகின்றனர். இவ் இல்லப்பணிகளுக்கு புலம்பெயர் நாடுகளில் வாழும் மக்கள் ஆதரவுகள் கிடைத்தவண்ணம் இருக்கின்றன. இதேபோன்று இப்பாடசாலைக்கும் புலம்பெயர் வாழும் அன்பர்கள் அபிவிருத்திப்பணிக்கு உதவிக்கரம் நீட்டி வருகின்றனர்.

சிவத்தமிழ் செல்வி அம்மையாரும் மாணவரான ஓய்வு பெற்ற இலங்கைவங்கி முகாமையாளர் திரு. சி.விக்கினராசா அவர்களின் பாடசாலை அபிவிருத்திப்பணிகளை எடுத்தியம்ப வார்த்தைகள் இல்லை. இதே போன்று பலர் உள்ளனர். இவர்களை பற்றிய விபரங்களை யான் இங்கு குறிப்பிட முடியாமைக்கு வருந்துகின்றேன். இப்பாடசாலையில் பரிசளிப்பு விழாவுக்கு ஸ்ரீ துர்க்கா தேவஸ்தானம் ஐந்து இலட்சம் ரூபா நிரந்தர வைப்பிலிட்டு அதன் வட்டியை பயன் படுத்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் முதலாம்தர, பாடசாலைக்கல்வி ஏற்பாடு:
## வளர்ச்சியும் குறைபாடுகளும்.

பேராசிரியர். மா. சின்னத்தம்பி.
**யாழ். பல்கலைக் கழகம்**

**அறிமுகம்: கல்விக்கட்டமைப்பு**

இலங்கையில் முதலாம்தரம் என்பது எமதுகல்வி ஏற்பாட்டின் முதற்கட்டமாகும். பாடசாலையில் இணைந்து கொள்ளுதல் என்பது "அறியாமையிலிருந்து விடுதலை பெறுதற்கான முதல் சுவர்க்கவாசலில் நுழைதல்" என்றே கருதவேண்டும்.

வருடாந்தம் மூன்று இலட்சம் பிள்ளைகள் இலங்கையில் பாடசாலைகளில் முதலாம்தரத்தில் அனுமதிக்கப்படுகின்றனர். சில வருடங்களில் இத்தொகை மூன்றரை இலட்சங்கள் வரை அதிகரிப்பதும் உண்டு. 2010ஆம் ஆண்டில் 344, 724 பிள்ளைகள் சேர்க்கப்பட்டதாக இலங்கையின் தேசிய திட்டமிடல் திணைக்களம் மதிப்பிட்டிருந்தது. ஆனால் பதின்மூன்று வருடக்கல்வி மற்றும் தொழில்நுட்ப மற்றும் உயர்கல்வி வாய்ப்புக்களை திருப்திகரமாக பெறமுடியாமல் எந்தவிதமான சரியான கல்வித் தகைமையும் பெறமுடியாமல் அவர்களில் 141,518 பிள்ளைகள் வெளியேறுகிறார்கள். நாட்டில் குற்றவாளிகள், தொழில் ஊக்கமற்றவர்கள், பிச்சைக்காரர்கள் போன்றோராக இத்தகைய தகுதி பெறமுடியாதவர்கள் மாறி விடுகின்றனரோ என்ற அச்சமூட்டும் உண்மையையும் இப்புள்ளிவிபரம் வெளிப்படுத்துகின்றது.

இலங்கையின் ஆரம்பப்பாடசாலைகளில் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளே கற்பித்தலுக்கு பயன்படுத்தப்படும் மொழிகளாகக் காணப்படுகின்றன. எனினும் தொடர்பாடல் மொழியாக ஆங்கிலமொழியை கற்பதற்குரிய வசதிகளை பலப்படுத்துவதிலும் இலங்கை அரசாங்கம் அக்கறை காட்டுகின்றது. மும்மொழித்திட்டத்தையும், முதலாம்தரத்திலிருந்து அறிமுகப்படுத்தும் இலக்குடனும் அரசாங்கம் செயற்படுகின்றது.

ஏறக்குறைய 250 சர்வதேசபாடசாலைகளினதும் அவற்றுடன் இணைக்கப்பட்ட முன்பிள்ளைப்பருவ பள்ளிகளினதும் ஆங்கிலமே கற்றல் கற்பித்தல் மொழியாக இருப்பதையும் கவனத்திற் கொள்ளவேண்டும். எதிர்காலத்தில் வலுவான ஆங்கிலமொழி மூலக்கற்கைகளைத் தொடரவும், வளர்ச்சிபெற்ற நாடுகளில் தொழில்வாய்ப்பும், குடியுரிமையும் பெறவும் ஆங்கிலமொழி மூல ஏற்பாடு உதவக்கூடும். முதலாம் வகுப்பிலிருந்தே ஆங்கிலமொழிமூலம் கற்கும் பிள்ளைகளிடம் அதீத தன்னம்பிக்கையும், மேலாதிக்க குணங்களும் சுலபமாக வளர்ந்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கையிலான வசதிகள்**

இலங்கையில் பாடசாலைகளின் பரம்பலும், மாணவர் எண்ணிக்கைக்குரிய ஆசிரிய பரம்பலும் திருப்தி தருவனவாகவே உள்ளதாக உலகவங்கி (20110 அறிக்கை குறிப்பிடுகின்றது. இலங்கையிலுள்ள ஒரு பாடசாலையில் சராசரியாக 406 மாணவர்கள் கல்விகற்கின்றனர்.

இலங்கையில் முதலாம்தரத்தில் பிள்ளைகளை இணைப்பதில் அதிக முன்னுரிமை காட்டும் தரம் 1 -5 வரை கொண்ட ஆரம்பப்பாடசாலைகள் 2720 (2010) காணப்பட்டன.

இலங்கையில் ஆரம்பநிலையில் தரம்ஒன்றில் சேரவேண்டிய வயதில் உள்ள ஆண், பெண் பிள்ளைகளில் 99சதவீதத்தினர் பாடசாலைகளில் அனுமதி பெற்று விடுகின்றனர். "அனைவருக்கும் கல்வி" என்ற கொள்கை சிறப்பாகவே அமுலாவதை இது காட்டுகின்றது.

முதலாம்தரத்தில் அதிக மாணவர் பாடசாலைகளில் சேரவேண்டும் என்பதற்காக பின்வரும் உதவிகளை இலங்கை அரசாங்கம் அதிகநிதிச் செலவில் வழங்கி வருகின்றது. அவை:

* படிப்புக்கட்டணம் எதுவுமின்றி தரம் 1-தரம்13வரை அரச பாடசாலைகள் எல்லாவற்றிலும் கற்க முடிதல்.

* எல்லாப்பிள்ளைகளுக்கும் இலவச பாடநூல்களும், இலவச பள்ளிச் சீருடைத்துணிகளும் வழங்கப்படுதல்.

* அனைத்துப் பள்ளிமாணவர்களினதும் பாடசாலைநாட்களில் புகையிரதம், மற்றும் பேருந்துகளில் பயணம் செய்வதற்கு அரசுமானியம் வழங்கி, கட்டணக் குறைப்பை உறுதிப்படுத்துதல்.

* பின்தங்கிய பிரதேசங்களில் வாழ்கின்ற மற்றும் வறியபிள்ளைகளுக்கு உதவும் நோக்குடன் பாடசாலைகளில் இலவச மதியஉணவு வழங்கப்படுதல்.

* ஆரம்பக்கல்வியை (தற்போது தரம் 11வரை) கட்டாயக்கல்வியாக வழங்குவதை சட்டபூர்வமானதாக்கியிருத்தல்.

* எல்லாப்பிள்ளைகளும் பாடசாலைக்கு ஒழுங்காக வருவதை உறுதிப்படுத்தும் பாடசாலை வரவுக்குழுக்களை உருவாக்கியிருத்தல்.

* பிள்ளைகளின் வதிவிடங்களிலிருந்து சராசரியாக இரண்டு கிலோமீற்றர் தூரத்துக்குள் ஒரு ஆரம்பப் பாடசாலை இருப்பதை உறுதிப்படுத்தல்.

இத்தகைய பலமான கல்வி உட்கட்டமைப்பும், அரச ஊக்கங்களும் தரம் ஒன்றில் அதிக மாணவர் கற்பதை உறுதிப்படுத்துகின்றன.

**தரம் ஒன்று அனுமதியில் மோசடிகள்**

அரசாங்கம் சமூகநீதியை நிலைநிறுத்தும் வகையில் பல்வேறு ஏற்பாடுகளைத் (மேலே விபரித்தவாறு) தொடர்ந்து மேற்கொள்கின்றது.

ஆனால் சில பாடசாலைகள் இலங்கைமுழுவதிலும் அரசபாடசாலைகளாக உள்ளபோதிலும் அரசவிதிமுறைகளுக்கு மாறாக தாம்விரும்பும் வகையில் சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியதிகளையும், துணைஅமைப்புக்களையும் ஏற்படுத்தி முதலாம் தரத்தில் பிள்ளைகள் இணைவதை தாம் விரும்பியவாறு வணிகமயப்படுத்தி வருகின்றனர்.

இதில் பல இடைத்தரகர்கள் பணம் சம்பாதிக்கின்றனர். அதிபர்கள் பல இலட்சங்களை இலஞ்சமாகத் திரட்டுகின்றனர். பல போலியான நியாயங்களை தாமே சட்டங்கள்போல் நடைமுறைப்படுத்துகின்றனர். புகழ்பெற்ற சில ஆரம்பப் பாடசாலைகள் மேட்டுக்குடியினர் பாடசாலைகளாக முகமூடிகளை அணிந்து கொண்டு ஆற்றலும் ஆர்வமும், அனுமதிபெறும் உரிமையும் கொண்ட சிறார்களை அவமானப்படுத்துகின்றனர். உளரீதியில் அவர்களை துன்புறுத்துகின்றனர். பெற்றோரை அசிங்கப்படுத்துகின்றனர்.

அனுமதி தொடர்பான ஊழல்கள்பற்றி "ரிரான்பரன்ஸி இன்ரநாசனல" நிறுவனம் விரிவான அறிக்கைகளைப் பிரசுரித்துள்ளது. இலங்கையில் பல நீதிமன்ற வழக்குகள் காணப்படுகின்றன.

இத்தகைய முதலாம்தர அனுமதி தொடர்பான துஷ்பிரயோகங்கள் பற்றி கல்விஅமைச்சின் சட்டங்களும் சுற்று நிருபங்களும் இருந்தாலும், பாடசாலைகளை கொள்ளையடிக்கும் மையங்களாக பல அதிபர்கள் மாற்றியுள்ளனர். தமது கொள்கைக்கு உதவியான குழுக்களையும் அமைத்துக் கொள்கின்றனர். இலங்கை முழுவதும் இதே பிரச்சினை வளர்ந்து விசாலித்துள்ளது.

இத்தகைய அனுமதி ஊழல்களுக்கு அதிபர்கள் பல நியாயங்களைக் கூறுகின்றனர். அவை:

* தாம் பணம் பெறுவதில்லை. பழைய மாணவர் அல்லது அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களே பெறுகின்றனர்.
* பெற்றோர் பாடசாலை வளர்ச்சிக்காக, தாராளமாக விரும்பி சில பொருட்களையே தருகின்றனர்
* மாணவர் எண்ணிக்கை அதிகரிக்கும்போது (அதிகரிப்புக்கு அதிபர்களே காரணமாயுள்ளனர்) தளபாட நெருக்கடி ஏற்படுகின்றது. அதைச் சீர்செய்ய உதவி தேவைப்படுகின்றது.
* பாடசாலைகளை அழகுபடுத்துவதும், சில மேலதிக வசதிகளை வழங்குவதும் அவசியம் என்பதால் இவ்வாறு பெற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது.
* தேவையான தளபாடங்களையும், ஆசிரியர்களையும் கூட உரிய காலத்தில் தாமதமின்றி திணைக்களத்திடமிருந்து பெற முடியாதுள்ளது. அவற்றுக்கான மாற்று ஏற்பாடுகளை நாம் செய்வதற்கு நிதி திரட்டுகிறோம்.
* பிள்ளைகளின் முன்பள்ளிக்கும், தனிப்பட்ட ரியூசனுக்கும் பெற்றோர் அதிக பணம் செலவிடும்போது, அவர்களது தெரிவுக்குரிய பாடசாலைக்கு உதவி செய்வதில் தவறு ஏதுமில்லை.

இத்தகைய நியாயங்கள் தெரிவிக்கப்பட்டாலும் பல தவறுகளும், குற்றங்களும் காணப்படுகின்றன. அவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அரச ஊழியர்களான அரசபாடசாலை அதிபர்கள் தமது தொழில்சார் விதிகளுக்கு எதிராக செயற்பட முடியாது.

* பணமுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்குவதை அதிபர்கள் விரும்பலாம். ஆனால் ஏழைகளுக்குரிய வாய்ப்புக்களையும், உரிமைகளையும் அதிபர் எவ்வாறு தடைசெய்ய முடியும?

* பெற்றோரிடம் திரட்டப்படும் நிதிக்கும் பாடசாலைக்கும் உண்மையில் செலவிடப்படும் நிதிக்குமிடையில் அதிக வேறுபாடுகள் இனங்காணப்படுகின்றன.

* பெற்றோர் - அதிபர் உறவுகளுக்கு அப்பால் பல இடைக்கால தரகர்கள் பலர் அதிக உற்சாகத்துடனும், அதிகாரதொனியுடனும் தொழிற்படுவதை அதிபர்கள் ஊக்குவிப்பது ஏன் என்று பெற்றோர் பரவலாக வினாவுகின்றனர்.

* செல்வந்தர்களிடமும், புலம்பெயர்ந்த உதவுநர்களிடமும் பெறுவது நியாயமாகலாம். ஏழைகளை அவர்களது அனுமதி விருப்பத்தைக் காட்டி கடனாளியாக்கும் உரிமையை அதிபர்களுக்கு வழங்கியது யார் என்று சமூகநிறுவனங்கள் கோபமடைகின்றன.

**பெற்றோரின் அர்த்தமற்ற அங்கலாய்ப்புகள்**

இன்று பெற்றோர்களினது எதிர்பார்ப்புக்களும், ஒப்பீட்டு தற்பெருமைகளும், போலித்தனமான பாடசாலை மைய கௌரவங்களுமே பெருமளவுக்கு அனுமதியை நியாயமற்ற செயல்முறைகளுக்குள் சிக்கவைத்துள்ளன என்பதும் கவனத்துக்குரிய உண்மை நிலைமையாகும்.பெற்றோரிலான மாறுதல்கள் சமூக, பொருளாதார ரீதியில் அதிகம் நிகழ்ந்து வருகின்றன.வடஇலங்கையிலும் இதனை அவதானிக்க முடிகிறது. அத்தகைய குறிப்பிடத்தக்க மாறுதல்கள்:

I) பெரும்பாலான குடும்பங்களில் குறைந்தது ஒரு அங்கத்தவராவது வெளிநாட்டிலிருப்பதால் நடுத்தரவருமான வகுப்பினர் கிராமங்களில் அதிகரித்திருத்தல். இதனால் நன்கொடை வழங்குவதற்குத் தயாராதல்.

II) நடுத்தரவயது தாய்மார்கள் "ஸ்கூட்டர்" போன்ற எளிய மோட்டார் வாகனங்களை செலுத்துவதற்கு கற்றுக் கொண்டுள்ளனர். இதனால் காலையும் மாலையும் சராசரியாக 10 -20 மைல்கள்வரை பிள்ளைகளை அழைத்துச் செல்ல தயாராயிருத்தல்.

III) பெரிய பெயர்பெற்ற பாடசாலைகளில் தமது பிள்ளைகள் கற்பது "புதிய சமுதாய அந்தஸ்து" என்ற போலி உணர்வினால் பெற்றோர் ஆக்கிரமிக்கப்பட்டிருத்தல்.

IV) தமது வாழிடத்திலிருந்து தொலைவில் கற்பதால் தமது சமூக தரநிலையை வெளிக்காட்ட வேண்டிய நிலையைத் தவிர்க்க முடியும் என்று நம்புதல்

V) நகரங்களில் உள்ள பள்ளிகளில் இணைவதால் தரம் 5, தரம்11, தரம் 13 மட்டங்களில் நல்ல ரியூசன் நிலையங்களுக்கு செல்ல முடியும் என்று நம்புதல்.

இத்தகைய சமூகவியல் மாறுதல்களினால் தமது வீட்டுக்கு அயலில் உள்ள பாடசாலைகளில் அனுமதி சுலபமாகக் கிடைக்கும் நிலையிலும் அதனைத் தவிர்த்து அதிக தொலைவில் உள்ள பாடசாலைக்கு தேவையற்ற "கிராக்கியை" உருவாக்கி ஊழலை ஊக்குவித்தல் இயல்பாகிவிட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய நகர்ப்புறம் நோக்கிய பெரியபாடசாலைகளை மையப்படுத்தி பெற்றோரின் அனுமதி வேட்கை பல தீமைகளை உருவாக்கியுள்ளது. அவை

* சுத்தமான கிராமியசூழலில் சிறுதொகை மாணவர்களுடன் கற்கும் வாய்ப்பைத் தட்டிப் பறித்து, நகரங்களில் "கொங்கிறீட் காடுகளில்" பாலகர்களை படிக்குமாறு பெற்றோர் நிர்ப்பந்தித்தல்.

* பண்பாட்டுப் பெருமையுடன் பலநூறு வருடங்கள் இயங்கிய பாடசாலைகள் மாணவர் எவரும் இல்லாமல் மூடப்படும் அபாயத்தை பெற்றோர் உருவாக்குதல்.

* சின்னஞ்சிறார்கள் கிராமங்களில் தமது நண்பர்களுடன் விளையாடுகின்ற குழந்தைப்பருவத்தை (பின்னாளில் ஒருபோதும் மீட்க முடியாத) விரயமாக்குதல். பயணத்திலே பகல் முழுவதையும் செலவிடுகின்ற வாழ்க்கையை சிறுவர்மீது பெற்றோர் திணித்தல்.

* பொருத்தக்கேடான நகர்ப்புற நவீனமய பண்பாட்டு அதிர்ச்சிகளுக்குள் தேவையில்லாமல் கிராமிய சிறுவர்களைப் பெற்றோர் தள்ளிவிடுதல்.

* புதிய வணிகமய அனுமதி நடைமுறைகளுக்குரிய நிலைமைகள் வளர்வதற்கும், வலிமை பெறுவதற்குமான சூழலை பெற்றோர் பலமான முறையில் வளர்த்து விடுதல்.

**புதிய அணுகுமுறைகளுக்கான தேவைகள்**

இத்தகைய புதிய நெருக்கடிகளைத் தவிர்த்து சிறுவர்கள் இயல்பாகவும் குதூகலமாகவும் வளர்வதற்க்கும், கற்பதற்கும் சமுதாய மற்றும் கல்விச் சூழலை உருவாக்க வேண்டும்.

பெற்றோரும், பாடசாலை அதிபர்களும், கல்விஅதிகாரிகளும் இணைந்து வெளிப்படையாகக் கலந்துரையாட வேண்டும்.

சமுதாயத்தலைவர்களும், ஊடகங்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும், கல்விமான்களும் ஒன்றிணைந்து இவை பற்றிய சமூக கருத்தாடல்களை மேற்கொள்ள வேண்டும். இணக்கப்பாடானதும், சாத்தியமானதுமான நடைமுறைகளை உருவாக்க முன்வருதல் வேண்டும்.

முதல் வகுப்பு அனுமதி,போட்டிச்சந்தை வியாபாரமாக வலிமைபெறும் சமூகதீங்கினை, குறைத்து சமூகநீதியை உறுதிப்படுத்துவதற்க்கான சமூக கண்காணிப்பு வலையமைப்பு ஒன்று உருவாக்கப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2012ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் தேர்ச்சியடைந்தோர்



ரவீந்திரன் துசாரா - 170



றமேஸ் டல்சிகர் - 156

## 2013ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் தேர்ச்சியடைந்தோர்



கஜேந்திரகுமார் கீர்த்திகன் - 176



யோகராசா யோகிதன் - 170



சகீந்திரன் அகிம்சன் - 169



நவறூபன் டேனுசா - 168



சிவகணேசன் சோவிகா - 168



தங்கராசா பிரிதா - 166



டனச்சன் தயாளஜெயன் யூயின் அரவிந்தன் - 159



றமேஸ்குமார் ருசானி - 159

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2014ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் தேர்ச்சியடைந்தோர்


ரவீந்திரன் கஜீபன் - 178


ஜெகதீஸ்வரன் சிவப்பிரியா - 174


நகுலன் யதீஷா - 173


தர்மதயாளன் டனுஸ்ரன் - 169


ரவீந்திரன் சஜீத் - 169


யுவராஜசிங்கம் யுவிஸ்ரன் - 169


செல்வேந்திரன் தேனுயன் - 168


ரவீந்திரன் சஜீனா - 168


ஜெயமனோான் சேர்ன்சச்சித் - 165


இராசகுமார் லக்கீர்த்தா - 165


ஜெயசங்கர் சாரங்கன் - 163

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2014ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் தேர்ச்சியடைந்தோர்



கிரிதரன் யன்சியா - 161



ஜெயானந்தகுமார் நிலவன் - 160



சிவகுமார் சஞ்சய் - 160



ஸ்ரீகுமார் சுபிதா - 159



சிவலிங்கம் சஞ்சய் - 159



ஆனந்தகுமார் சுபத்திரா - 158



தனபாலசிங்கம் சர்மினி - 157



சிவலோகநாதன் சிவானுஜன் - 156



தயாகரன் தர்சிகா - 154



ரவீந்திரன் துஷானன் - 152

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை அபிவிருத்திக்குழு

- தலைவர் :- திரு சி. சிவகுமாரன் (அதிபர்)
- செயலாளர்:- திரு பொ. சபீந்திரன் (பெற்றோர்)
- பொருளாளர்:- திருமதி பா. தவக்குமார் (ஆசிரியர்)

நிர்வாக சபை உறுப்பினர்கள் :-

ஆசிரியர்கள்

- திருமதி சி.பரமசிவம்
- செல்வி ந.சாரதா
- திருமதி சு.சிவலிங்கம்
- திருமதி ப.தவராணி (பெற்றோர்)
- திரு ஐ.சிவலோகநாதன்
- திரு அ.ஜெயக்குமார்
- திருமதி சி.மங்களம்
- திருமதி வ.தவரூபன்
- திருமதி யோ.யாழினி

பழையமாணவர் சங்கப் பிரதிநிதி

திரு செ.ஜெயானந்தகுமார்

திரு S.விக்னராஜா

திருமதி ஜெ.மயில்வாகனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

- தலைவர் :- திரு சி.சிவகுமாரன் (அதிபர்)
- செயலாளர்:- திருமதி க.கோகுலன் (பெற்றோர்)
- பொருளாளர்:- திருமதி சு.சிவலிங்கம் (ஆசிரியர்)

நிர்வாக சபை உறுப்பினர்கள் :-

- திருமதி பா.தவக்குமார்
- திருமதி சி.பரமசிவம்
- செல்வி ந.சாரதா
- திருமதி கா.சிவரூபன்
- திருமதி சு.சுகிதா
- திரு.இ.யோகராசா
- திரு.வ.பிரபாகரன்
- திரு ச.துரைசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழையமாணவர் சங்கம்

- தலைவர் :- திரு சி.சிவகுமாரன் (அதிபர்)
- செயலாளர்:- திருமதி. த.ஜெயானந்தகுமார் (பெற்றோர்)
- பொருளாளர்:- திருமதி சி.பரமசிவம் (ஆசிரியர்)

நிர்வாக சபை உறுப்பினர்கள் :-

- திரு அ.ரவீந்திரன்
- திரு சு.மஜிந்காந்
- திருமதி து.கயேந்திரகுமார்
- திருமதி கா.சிவரூபன்
- திருமதி நவஜீவன்
- திருமதி யோ.சூரியகுமார்
- திருமதி உ.சிவநாதன்
- திருமதி அ.அருந்தவநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2014 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுபெற்ற
பாடசாலையாக தினக்குரல் பத்திரிகையால் தெரிவுசெய்யப்பட்டமைக்கான
பரிசிலை கற்பித்த ஆசிரியர் பெற்றுக்கொள்கிறார். . .




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களின் நவீன வகிபங்குப் பரிமானமாக "உளவளத்துணையாளர்"

திரு.பா.தனபாலன்
**இணைப்பாளர்**
**யாழ்ப்பாணம் தேசியகல்வியற் கல்லூரி**

சமகால மாணவர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கு வடிகால் அமைத்துக் கொடுக்கும் மிகமுக்கிய நிறுவனமாக இன்று பாடசாலை உள்ளது. பாடசாலை உயிர்த்துடிப்பாளர்கள் ஆசிரியர்களே ஆவர் . சமூகத்திற்கும் இவர்கள் வகை கூற வேண்டியவர்களாகவுள்ளனர்.

"ஆசிரியர்கள் தான் உலகின் முதன்மை அங்கத்தவர்கள்
ஏனெனில் அவர்கள் பணி பூமியின் விதியைத் தீர்மானிக்கும்"

ஹெலன் கல்டிகொற்.

இவ்வாறு உலகிலேயே உயர்வாண்மையாகவுள்ள ஆசிரியத்தொழில் வகிபாகங்கள் பலவாகவுள்ளன. கற்பிப்பவர், வழிகாட்டி, நண்பர், குழுத்தலைவர், உதவுபவர், முன்மாதிரியாளர், சமூகத்தலைவர், கலைஞர் என இன்னும் பலவாகவுள்ளன. இவற்றுடன் இன்று உளவளத் துணையாளர் என்ற மிக முக்கிய பாத்திரத்தை உடனடியாகப் பெறவேண்டிய நிலையில் ஆசிரியர்கள் உள்ளார்கள். ஆசிரியர்கள் அனைவருமே உளவளத்துணையாளர் வகிபாகத்தை ஏற்று இன்றைய மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் பொருத்தமான ஆலோசனைகளை பொறுப்புடன் வழங்க வேண்டியுள்ளது.

யுத்தவிளைவுகள்,வறுமை,சமூகச்சீர்கேடுகள், சமூக வன்முறைகள், கலாச்சாரச்சீர்கேடுகள், குடும்பப்பிரச்சினைகள், சம வயதுக்குழுப்பிரச்சினைகள், கட்டிளமைப்பருவ பாலியல்சார் குழப்பங்கள் எனப் பலவிதமான நெருக்கீடுகளால் பாதிக்கப்பட்டு உளச்சக்தி தீய்ந்து போயிருக்கின்ற மாணவர்களைத் தயார் நிலைக்கு அழைத்து வரவேண்டிய பொறுப்பு இன்று ஆசிரியர்கள்மீது அவர்களை அறியாமலே சுமத்தப்பட்டுள்ளது. அதைப்புரிந்து தமது கற்பித்தல் கடமைகளுடன் உளவளத்துணையாளராக இருந்து வழிகாட்ட பல்வேறு திறன்களை இன்றைய ஆசிரியர்கள் பெற்றிருக்க வேண்டும்.

**உளவளத்துணை:**

ஒருவர் தனது உளவளங்களின் முழுமையான விருத்தியை நோக்கிச் செல்கின்ற பயணத்தில் அவர்தான் சந்திக்கின்ற தடைகளை வெற்றி கொள்ள அவருக்கு அளிக்கும் ஒரு உயிர்ப்பான தொடர் செயற்பாட்டு உதவியே உளவளத்துணையாகும். இன்றைய பாடசாலை மாணவர்கள் பல நெருக்கடிகள் மத்தியில் தமது பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது தவிக்கின்றார்கள். தற்கொலை செய்து கொள்கின்றார்கள். தகாத உறவுகளை மேற்கொள்கின்றார்கள், போதைப்பொருள் பாவனையில் ஈடுபடுகின்றார்கள், ஆசிரியரையோ, அதிபரையோ, பெற்றோரையோ, பெரியோரையோ மதிக்காமல் செயலாற்றுகின்றார்கள் எனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றம் சுமத்தப்படுகிறது. இதற்கு மேற்குறிப்பிட்டவர்களே முன்மாதியாகவும் உள்ளார்கள். இந்நிலையிலிருந்து மாணவர்களை மீட்க இனி ஒவ்வொரு ஆசிரியரும் உளவளத்துணையாளர்வகிபங்கைப் பிரயோகிக் வேண்டும்.

உளவளத்துணையில் உறவு அல்லது தொடர்பு என்பது முக்கியமானது. பிரச்சினைகளோடு வரும் மாணவரை "அவரை அவராக ஏற்று "மதித்து கசப்பான அனுபவங்களை பகிர ஒத்த உணர்வு ஆசிரியருக்குத் தேவை. மாணவரின் ஏக்கங்கள், தேவைகள், ஆசைகள் என்பவற்றை தெரிந்து உணர்ந்து, அவரது பிரச்சினையின் உண்மை நிலையை அவரையே அறியச்செய்து அவரையே தீர்வுக்கான உதவும் சேவையாக உளவளத்துணைச் சேவை அமைகின்றது.

உதவி நாடிவரும் மாணவர்களின் உளப்பிரச்சினைகளைத் தீர்ப்பதோடு உளவளத்துணைச்சேவை நின்றுவிடுவதில்லை.அதற்கு அப்பால் தேவை ஏற்படுகின்ற போது மாணவரின் நடத்தையில் நேரான மாற்றத்தை ஏற்படுத்தல், புதியதான நேரானஅகக்காட்சிகயைக் காணச் செய்தல், குடும்பம், பாடசாலை சமூகப்புறச்சூழலின் மாணவரில் பாதகமான முறையில் தொழிற்படுகின்றபோது அவரினைச் சாதகமான முறையில் மாற்றியமைத்தல், குடும்பமாகவைத்து குடும்பஉளவளத் துணை வழங்குதல், ஒத்தபிரச்சினையுள்ள துணைநாடி மாணவர்களைச் சேர்த்து குழுவாக உளவளத்துணைச்சேவை செய்தல், என்பவையும் முன்னுரிமை பெறுகின்றன.

**உளவளத்துணை ஆசிரிய வகிபங்குப் பண்புகள்**

ஆசிரியர்கள் உளவளத்துணையாளராக செயலாற்ற முன்வரும் போது அவரிற்கான உரிய பயில்வுகளை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் ஆசிரியர்கள் "வான்மைசாரா உளவளத்துணையாளர்" என்ற வகையில் மாணவர்களை அன்புடன் அணுகி, பாதுகாப்பை வழங்கி, அவர்கள் எவ்வாறான சூழ்நிலைகளில் இருந்து வருகின்றார்கள்? எத்தகைய உளப்பாதிப்புகளுக்கு உள்ளாகியிருக்கின்றார்கள்? அவற்றிற்குரிய காரணங்கள் எவை? அவற்றை இனம் காண்பது எவ்வாறு? தீர்வுகளை எவ்வாறு பெறலாம்? எவ்வாறான உதவிகளை வழங்கலாம்? ஆகிய விடயங்களுக்குத் தீர்வுகளைப் பெற பின்வரும் வகிபங்குகளை ஆசிரியர்கள் பெறவேண்டும்.

* சிறந்த செவிமடுப்பாளர் (As a Active Listerner)

* நண்பர் (As a Friend) *வசதியளிப்பவர் (As a Facilitation)

*வழிகாட்டுபவர் (As a Guider) *பயிற்றுவிப்பாளர் (As a Triner)

*நடுவர் (As a Mediator) *சிகிச்சையளிப்பவர் (As a Remediator)

*தலைமைத்துவம் வழங்குபவர் (As a Information)

*தகவல் வழங்குபவர் (As a Representation or Agent)

*பிரதிநிதி (As a Controller) *கட்டுப்பாட்டாளர் (As a Controller)

*முற்பாதுகாப்புடன் செயல்படுபவர் (As a Preventer)

*சமூகநிர்மாணி (Social Builder)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பரந்த ஆசிரியத்துவத்துக்கே உரித்தான வகிபங்குகளை உளவளத்துணையாசிரியர் கொண்டிருப்பதுடன் இரகசியம் காப்பவராக, நேர்மையானவராக, மனிதத்துவம் பொதிந்த முதல்தர நல்மனிதராக, நம்பிக்கைக்குரியவராகச் செயலாற்ற வேண்டும். எனவே உளவளத்துணை என்பது தகவல் கொடுப்பதல்ல, புத்திமதி கூறுவதல்ல, துணைநாடிவருபவரை மதிப்பீடு செய்வதல்ல, நம்பிக்கைகளை மாற்றுவதல்ல, எச்சரிக்கை பயமுறுத்தல் விடுவதல்ல, தன் உளச்சக்தி மூலம் துணைநாடியினுடைய உளச்சக்தியைப் பொருத்தமாக அமைப்பதன் மூலம் துணைநாடி தனது சக்திகளை இனம்கண்டு அவற்றைப் பயன்படுத்தி தன் பிரச்சினைகளைத் தீர்க்க துணைபுரிதலே உளவளத்துணை ஆசிரியரின் முக்கிய பணியாகும். நாடிவரும் மாணவர்களின் உளச்சக்தி அசையச் செய்வதற்கு:

| | |
|---|---|
| 1. உடனிருத்தல் | 5. குவியப்படுத்தல் |
| 2. உற்றுக்கேட்டல் | 6. எதிர்கொள்ளல் |
| 3. ஒத்துணர்வு | 7. பார்வைமாற்றம் செய்தல் |
| 4. துருவிஆராய்தல் | 8. இலக்கு நிர்ணயம் செய்தல் |

ஆகிய நுண்திறன்களை மேற்கொள்ள வேண்டும்.

பிரயோக ரீதியில் இத்திறன்கள் ஒன்றன்பின் ஒன்றாக ஒழுங்கு முறையில் வரவேண்டும் என்பதல்ல உளவளத்துணையாசிரியர் உன்னத ஆளுமைப் பண்புடையவர்களாகக் காணப்படவேண்டும்.

**உன்னத ஆளுமைப்பண்புகள்**

ஒருவரது ஆற்றல்கள், நம்பிக்கைகள், தனித்தன்மைகள், மனப்பாங்குகள், சமூக ஒற்றுமைத்தன்மைகள், கொள்கைகள், பழக்க வழக்கங்கள், உணர்ச்சித் தூண்டல்பேறுகள், மனப்பாங்குகள் ஆகியவற்றுடன் அவரிடம் காணப்படும் சக்திமட்டங்கள், எண்ணங்கள் , கனவுகள் ஆகிய அனைத்தையும் அவரது ஆளுமை உள்ளடக்கியிருக்கும். எல்லா மனிதர்களுமே தமக்கெனப் பிரத்தியேகமான ஆளுமைக் கூறுகளைக் கொண்டிருக்கின்றார்கள். எனினும் தமது ஆற்றல்களை முழுமையாகத் தொழிற்படுத்துகின்ற நிலையில் மனிதர்கள் இருப்பது குறைவு. ஆனால் உன்னத ஆளுமையுடையோர் நேர்நிலையில் முழுமையாகத் தொழிற்படுகின்ற ஆளுமை உள்ள மனிதர்களாக இருப்பர்.

இவர்கள் மிகக் குறைந்த அளவிலேயே தீர்ப்பிடுவர். அல்லது தீர்ப்பிடாமலே விடயங்களை நோக்குவர். இவர்கள் விடயங்களில் இருந்து மனிதர்களைப் பிரித்துப் பார்க்கக் கூடியவர்களாகவே இருப்பர். தம்மிலுள்ள குறைநிறைகளை முழுமையாக விளங்கிக் கொள்வதுடன் அவற்றை ஒரே தளத்தில் நின்று மனந்திறந்து பேசக்கூடியவர்களாக இருப்பர். தமது சுயத்தின் இருண்ட பக்கங்களை அல்லது தமது ஆலோசனை நாடியின் இருண்ட பக்கங்களைப் பார்க்ககூடிய ஆற்றல் உடையவர்களாக இருப்பர். உன்னத ஆளுமையாளர்களின் ஆளுமை கூறுகள் முரண்பாடோ அல்லது பிளவோ இருப்பதில்லை. இவர்கள் தமது மறைஎண்ணங்களை மற்றவர் மீது புறத்தோற்றம் செய்யமாட்டார்கள். அவர்களிடமிருந்து எப்போதும் நேரான எண்ணங்கள், உயர்வுகள், நடத்தைகளே வெளிப்படும். இதனால் உன்னத ஆளுமையாளர்களுக்கு அருகிலிருப்பவர்களும் மேலான ஒரு உணர்வை அனுபவிப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் மனிதத்துவத்தை நிறைவாக அனுபவிப்பார்கள். உலகம் முழுவதும் பரந்து காணப்படும் அன்பை அவர்களால் உணர்ந்து கொள்ளமுடியும். இவர்கள் மகிழ்வு, இன்பம் ஆகியவற்றுடன் மட்டும் தம் வாழ்வைச் சுருக்கிக் கொள்ளாது தம் எதிரான உணர்வுகளையும் பரிந்து செயற்படுவர். ஏனையவர்களின் எதிர்மறையான செயற்பாடுகள் இவர்களை ஒருபோதும் பாதிக்காது. இவ் உன்னத ஆளுமையுடையோர் சரி-பிழை, நல்லது - கெட்டது எனத்தீர்ப்பிடுவதில் காலத்தைச் செலவு செய்யாது ஆக்க ரீதியாக என்ன செய்யலாம் என்பதிலேயே கவனம் செலுத்துவர். தமது குறைகளைத் தொடர்ந்து திருத்திக் கொண்டே இருப்பர். இது ஏனையவர்களின் குறைகளைத் தீர்க்க முன்னுதாரணமாக அமையும். தமது செயல்களுக்குத் தாமே பொறுப்பேற்றுக் கொள்வர். தமது உள்ளத்தோடும் உடலோடும் உயிர்ப்பான தொடர்பு கொண்டிருப்பதால் தங்களைப்பற்றிய யாதார்த்தமான இலட்சியவாத விம்பங்களை வைத்திருப்பதில்லை.

உன்னத ஆளுமைப்பண்புடையவர்களின் பண்புகளில் பாரம்பரியக் கூறுகளும் தாக்கம் செலுத்த முடியாது. மற்றவர்களைக் குறைகூறுவதை இவர்கள் தவிர்த்துக் கொள்வர். தமக்கு ஏற்படுகின்ற துன்பங்களையும், கஸ்டங்களையும் கூட எப்படிப்பயனுள்ளதாக மாற்றலாம் என்பதில் ஆர்வம் காட்டுவர். மற்றவர்களால் ஏற்படுத்தப்படுகின்ற புண்படுத்தல், உதாசீனம் செய்தல். பயன்படுத்தல் போன்றவைகளில் இவர்கள் விழமாட்டார்கள். இதனால் இவர்களின் வாழ்வு இவர்கள் கட்டுப்பாட்டிலேயே இருக்கும். மேலும் இவர்கள் இன்னொருவர்போல் ஆகவேண்டும் என்ற விருப்பமின்றி தாமாகவே இருக்க விரும்புவர். இவர்கள் மற்றவர்களின் வளர்ச்சியிலும் சமூகத்தின் ஆரோக்கியத்திலும் அக்கறை கொண்டவர்களாக இருப்பர். இவ்வாறான பண்புகள் அனைத்தும் பாடசாலை ஆசிரியர்களுக்கு கிடைக்கும் போது அவர்கள் உளவளத்துணையாளர் என்ற உயர்ந்த வகிபங்கைப் பிரயோகிப்பவராகச் செயலாற்ற முடியும். இதற்கான பயிற்சிகளையும், எதிர்காலவியல் நோக்கிய திட்டங்களையும் செயலாற்றுகைகளையும் விரைவாக எமது மண்ணில் ஏற்படுத்த வேண்டியுள்ளது. இதன் மூலமே கல்விப் பிரச்சினைகள் பலவற்றை நாம் தீர்த்துக் கொள் ளமுடியும்.

"கல்விக்கூடங்களிலும், வாழ்க்கையிலும் ஆற்றப்படும்
பயணியின் உள்ளார்ந்த நோக்கம் அதன்வழி உளப்பூரிப்படைதலும்
ஆனந்தம் அனுபவித்தலும் மட்டுமன்றி அப்பணியின் பேரால்
சமூகம் அடையும் உன்னத நன்மைகள் பற்றிய அறிவுபெறுதலாகும்"

அல்பேட் ஐன்ஸ்ரைன்

என்ற வகையில் எமது பாடசாலைகளில் மாணவர்களின் கற்றல் இடர்பாடுகள் கருத்தூன்றி மனிதத்துவ நோக்கில் கவனிக்கப்பட வேண்டும். மாணவர்களின் உடல்உளப்பிரச்சினைகள் கல்விச் செயற்பாடுகளில் தடைகளையும், பின்னடைவுகளையும் ஏற்படுத்தும் அதே வேளை விரும்பத்தகாத செயற்பாடுகளால் மாணவர்களின் கல்வி, எதிர்கால வாழ்வு பாதிப்டைகின்றது. எனவே கல்வியை வழங்கும் உயர்சமூகநிறுவன பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் அனைவரும் கல்வியின் விளைவாக மாணவர்கள் உச்சப்பயனை மகிழ்ச்சியான சூழலில்பெற தம்மை அர்ப்பணிக்க வேண்டும். இதற்கு ஆசிரியர்களின் நவீன வகிபங்குப்பரிமானமான உளவளத்துணையாளர் என்ற உன்னத வகிபங்குச் செயன் முறை வழிகாட்டி நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 1 மாணவர்களின் வரவேற்பு










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பப் பிள்ளைகள்

திருமதி. ஜெ.மயில்வாகனம்
**சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்,**
**ஆரம்பக்கல்வி,**
**வலிகாமம் கல்வி வலயம்**

ஆரம்பக்கல்விப்புலம் மிகவும் அவசியமானதொன்றாகும் இதனைக் கல்விக்கான அத்திவாரம் என்றும் அறிஞர்கள் கூறுகின்றனர். மாறிவரும் உலகின் விந்தைக்கேற்ப புத்திஜீவிகளைப் படைப்பதில் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் பணி மிகவும் மகத்தானது. ஆசிரியர்களை அக்காலத்திலும்,இக்காலத்திலும் இறைவனுக்கு நிகராகக் கொண்டு போற்றும் மனிதர்கள் இருக்கத்தான் செய்கின்றார்கள். ஏனெனில் அப்படிப்பட்ட ஒரு புனிதமான சேவைதான் ஆசிரியப்பணி. பிள்ளைகளிடம் உள்ள கற்றல் இடர்பாடு என்றாலும் சரி, பழக்கவழக்கம் என்றாலும்சரி, ஆரம்பக்கல்வி ஆசிரியரால் சீராக்கப்பட்டு நன்னெறிமிக்க நற்பிரசையாக உருவாக்குவது அனைத்து ஆசிரியரதும் கடமையாகும்.

தற்பொழுது அறிவுப்புரட்சிக்கு முகம்கொடுக்க வேண்டியிருப்பதனால்அத்தகைய சவாலை எதிர்கொண்டு வெற்றிகரமாகப் பிள்ளைக்குப் பொருத்தமானவராகத் தம்மை தினமும் புதுப்பிக்க வேண்டியவராக ஆரம்பக் கல்வி ஆசிரியர் இருத்தல் வேண்டும். பாடத் திட்டமாயினும், இணைப்பாடவிதானம் எனினும் சளைக்காதவராகப் பிள்ளையின் முன்னே முகங்கொடுத்து நெறிப்படுத்தவல்லவராக மிளிர்வது தான் பெருமை. ஒவ்வொரு பிள்ளையையும் தனது அகக் கண்ணால் நோக்கி அப்பிள்ளையின் தனித்துவங்களை ஆய்வு செய்து சீர்தூக்கி மேலோங்க வைத்தலே மேலான பணியுமாகும். ஒவ்வொரு ஆரம்பக்கல்வி ஆசிரியர்களும் எமக்கான ஆரம்பப் பள்ளிப் பருவத்தினை மீட்டுப்பாரத்தால் இத்தத்துவம் விளங்கிவிடும். முன்னைய காலத்தில் மணல் மீதும், அரிசி, தானியயங்கள் மீதும் சுட்டுவிரலைப் பிடித்து எழுதியது, தசைநார்ப் பயிற்சிக்காக மண்ணிலே பலகாரம், பழம், பானை , யானை என பல்வேறு உருவங்களைப் பிசைந்து பிசைந்து ஆக்கியவர்களின் கையெழுத்தும், ஞாபகசக்தியும், மனவலிமையும் சிறப்பாகவே இருந்துள்ளது.

ஆசிரியர்கள் வகுப்பறையில் தத்தமது வகுப்புக்களுக்கு வாண்மையினராவார். இவர்களின் நடை, உடைபாவனை ஒவ்வொன்றும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்மாதிரியானவையே. ஆரம்பப் பிள்ளைக்குரிய பேச்சு வன்மைகூட ஆசிரியரிலேயே தங்கியுள்ளது. இப்பிள்ளைகள் தனது ஆசிரியரின் செயற்பாடுகளை மிகவும் உன்னிப்பாக அவதானிப்பார்கள். அவரைப் போலப் பாவனை செய்வதிலும், பேச்சாற்றலிலும் துலங்குவர்.

பிள்ளைப் பருவம் 5-12 வரையானது. இப்பருவத்தில் சிந்திக்கும் செயற்படும் ஆற்றல் மேம்பட்டு ஆக்கத்திறன், கற்பனைத்திறன், வங்கப படுத்தும்திறன் என்பன வலுப்பெறுகின்றன. பிள்ளைகளின் சூழல் விரிவடைவதால் பிள்ளைகள் கையாளும் பொருட்களும், காணும் காட்சிகளை உள்வாங்குந்திறனும் அதிகரிக்கின்றன. அதனால் அவர்கள் அது என்ன? இது என்ன? என்றவாறான வினாக்கள் அவர்களிடத்தில் தோன்றுகிறது. இப்பருவத்தினருக்கு அன்பு, கணிப்பு, காப்புத் தேவைகள் அவசியம் ஆகின்றன. அவை கிடைக்கப் பெறாத வேளை கோபம், பொறாமை, ஏமாற்றம் தோன்றுகின்றது.

பாடசாலையில் தனது தாய்க்கு அடுத்தபடியாக ஆசிரியரையே நம்புகிறான், நேசிக்கிறான், அங்கே அப்பிள்ள்ளக்கு கிடைக்க வேண்டிய எதிர்பார்ப்புக்கள் கிடைக்காதுவிடின் ஏமாற்றமடைந்து அதிருப்தியடைகிறான். 5 வயது முடிவடைய வருகின்ற பிள்ளைகளுக்கு அவனது எதிர்பார்ப்பை அறிந்து ஆர்வமூட்டி, ஆதரிப்பதனால் கற்றல் நாட்டமும் சிறந்த சமூகப் பொருத்தப்பாடுடையவனாக உருவாக்கம் பெறுகின்றான்.

எனவே ஆரம்பப் பிரிவு ஆசிரியர்கள் பிள்ளைப் பருவத்தினரைக் கண்ணாடிப்பொருள்போல பாதுகாத்து உரியவாறான நற்செயற்பாடுகள் மூலம் நற்பயன் பெறமுடியும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கல்விமுறையின் செயன்முறையினை வினைத்திறனுடன் வழிநடாத்துவதற்கான கலைத்திட்டதின் வகிபாகம்

திருமதி பா.தவக்குமார்
பிரதி அதிபர்,
யா/கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
கனிஷ்ட வித்தியாலயம்

சமுதாயத்தில் பிரிக்கமுடியாத ஒரு நிறுவனமாக பாடசாலை விளங்குகின்றது. இது சமுதாயத்தின் இயங்கு விசையை தீர்மானிக்கின்ற ஒரு நிறுவனமாகும் . பாடசாலையின் நிறுவன அமைப்பானது தொடக்க காலங்களில் மத அமைப்புகளால் நடாத்தப்பட்டு வந்தன. காலப்போக்கில் அரசுகள் அவற்றின் மீது கவனம் செலுத்த தொடங்கின. எனவே பொதுக் கல்வி முறையின் கூர்ப்பானது மதம் சார்ந்த கல்வி நிறுவனங்கள், அரசாங்க உதவி பெறும்பாடசாலைகள், அரசாங்கப் பாடசாலைகள், தனியார்துறையில் உள்ள சர்வதேசப் பாடசாலைகள் என அமைந்துள்ளன.

பாடசாலைக்கல்வியில் ஆசிரியர்கள், மாணவர்கள், அதிபர்கள், பெற்றோர்கள், மதத்தலைவர்கள், கல்விநிர்வாகிகள் எனப் பல அங்கத்தவர்கள் முக்கியத்தும் பெறுகின்றார்கள். இவர்களில் நேரடியாக கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் மாணவர்களும் ஆசிரியர்களும் பங்குகொள்கின்றனர். பாடசாலைக் கல்வி பிள்ளைகளின் இடத்தே அறிவு, திறன், மனப்பாங்கு, பயிற்சி என்பவற்றோடு சமூகத்திற்க்கு பொருத்தபாடுடைய விழுமியங்களையும் வளர்க்கின்றது.

பாடசாலைக்கல்வி முறைமையின் செயன்முறையினை வினைத்திறனுடைய தாக வழிநடாத்துவதற்கு கலைத்திட்டம் அவசியமாகும். கல்வியின் நோக்கங்களை அடைவதற்காக கல்வியை எவ்வாறு திட்டமிட்டு எந்தளவுக்கு கற்பிக்கலாமென அறிவியல், உளவியல் அடிப்படையில் கல்விச் சிந்தனையாளர்கள் காட்டிய ஒழுங்கு முறையே கலைத்திட்டமாகும். கலைத்திட்டம் என்ற சொல்லானது ஆங்கிலத்தில் (Curriculum) எனப்படுகிறது. இச் சொல்லானது urriere என்ற இலத்தின் சொல்லில் இருந்து உருவானதாகும். “ஓடும்பாதை” என்பது இதன் பொருளாகும் . தமிழ் மரபில் பாடஏற்பாடு, பாடவிதானம், கல்விக்கட்டுமானம், கல்விஓடுபாதை என்றவாறு வழங்கப்படுகிறது. எனவே கலைத்திட்டம் என்பது பாடசாலைகளில் மாணவர்கள் கற்க வேண்டிய துறைகளைக் கொண்ட வழிகாட்டும் பாதை என்று கொள்ளலாம்.

பிள்ளைகளுக்கு அறிவையும்,அனுபவத்தையும் அளிப்பதற்காக ஒழுங்கு படுத்தப்பட்டதே கலைத்திட்டமாகும். இது சமூகத்திலுள்ள மக்களின் நம்பிக்கை, தத்தவம்,சமூகஅறிவியல், விழுமியங்கள் என்பவற்றை கல்வியினூடாக பிரதி பலிக்கும் திட்டம் எனலாம். கலைத்திட்டம் பிள்ளைகளை முரண்பாடற்ற ஆளுமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடையவர்களாகவும் சூழலுக்கும், தனக்கும், சமூகத்திற்குமிடையே ஏற்படக்கூடிய மாற்ற வேறுபாடுகளுக்கு ஏற்ப தம்மை சீராக்கிக் கொள்ளக் கூடியவர்களாகவும் உள்ள குடிமக்களை உருவாக்குவதுமாகும். இது ஒருநாட்டின் கல்வி நிறுவனங்களின் தொழிற்பாடகளிற்கான அடிப்படை வழிகாட்டல் சட்டகமாகும்.

அத்துடன் ஒரு பாடசாலை அதன் கல்விக் குறிக்கோள்களை அடைவதற்காகப் பயன்படுத்தப்படும் அனுபவத்திரள்களின் சேர்க்கை கலைத் திட்டமாகும்.

ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட கற்றல் பேறுகளை அடைவதற்காக கற்கும் வகையில் மாணவரை வழிப்படுத்துவதற்காக யாதேனுமொரு பாடசாலை முன்கூட்டியே திட்டமிட்டுள்ள ஒட்டு மொத்தமான செய்முறையே கலைத்திட்டம் என இன்லோ என்ற அறிஞர் குறிப்பிடுகின்றார்.

பிள்ளையின் உளவியல், உயிரியல், உணர்வுகள் அறிக்கைசார் விருத்திகளை ஏற்படுத்துகின்ற முறைப்படி ஒழுங்கமைக்கப்பட்ட கற்றல் அனுபவங்களைக் கொண்டது கலைத்திட்டமாகும். பாடசாலையின் உயிர்ப்பான கலைத்திட்டத்தை வினைத்திறனுள்ள வகையில் விருத்தி செய்யலாம்.

கலைத்திட்டம் என்ற எண்ணக்கருவை வெறுமனே பாடம் என்ற வகையறைக்குள் சுருக்கி விடுதல் பொருத்தமற்றதாகும். பாடத்திட்டம், பாடஉள்ளடக்கம், கற்பித்தல் முறைகள், ஏனைய வெளிவிடயங்களை உள்ளடக்கிய சேர்க்கையாகும். எனவே கலைத்திட்டம் என்ற எண்ணக்கரு பரந்தவிடயங்களை உள்ளடக்கிய சேர்க்கையாகும். எனவே கலைத்திட்டம் என்ற எண்ணக்கரு பரந்த விடயங்களை உள்ளடக்கியுள்ளது.

பாடசாலையின் வினைத்திறனில் கலைத்திட்டத்தின் வகிபங்கு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. கலைத்திட்டமானது பல்வேறு வடிவங்களை கொண்டது. கல்வியியலில் ஏற்பட்டு வருகின்ற ஆய்வுகள், ஆராய்ச்சிகள் கல்வியியலாளர்களின் சிந்தனையின் காரணமாக கலைத்திட்ட வடிவங்களை பலவாக வகைப்படுத்த முனைந்துள்ளமையை காணலாம். இவ் வடிவமைப்பை

1) பாரம்பரிய வடிவமைப்பு கலைத்திட்டம்
2) நவீன வடிவமைப்பு கலைத்திட்டம்

என்றவாறாக காலஅடிப்படையிலும் வகைப்படுத்தியுள்ளனர்.

வடிவங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்

*. பாடக்கலைத்திட்டம்
*. செயன்முறைக் கலைத்திட்டம்
*. ஒன்றிணைந்த கலைத்திட்டம்
*. உள்ளீட்டுக் கலைத்திட்டம்
*. பரந்ததுறை உள்ளடங்கிய கலைத்திட்டம்.

புதிய கலைத்திட்டவடிவங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2013 – 2015 வரையான விளையாட்டு நிகழ்வுகள்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*. தரநிலை குறிக்காத கலைத்திட்டம்
*. சுவட்டுக் கலைத்திட்டம்
*. இருவழி முன்னேற்ற கலைத்திட்டம்
*. சுழல் ஏணிக்கலைத்திட்டம்

மேற்குறிப்பிட்ட கலைத்திட்டவகையில் இன்று பாடசாலக் கல்வி முறையில் செயன்முறையை வினைத்திறன் ஆக்குவதில் பாடக்கலைத்திட்டம், இணைக்கலைத்திட்டம், மறைக்கலைத்திட்டம் என்பன முக்கியத்துவம் பெறுகின்றன.

இதில் பாடக்கலைத்திட்டம் என்பது அறிவை பாடங்களினூடாக வழங்கு வதற்கான ஏற்பாடு பாடத்திட்ட கலைத்திட்டம் எனப்படுகிறது. ஒன்றினைந்த பாடத்திட்டத் தெரிவானது பாடங்கள் என்ற வகையிலே வகுத்து தேர்ந்தெடுத்து மாணவர்களுக்கு கற்பிப்பது பாடக்கலைத்திட்டமாகும்.

பாடக்கலைத்திட்டத்தின் வகிபங்கானது பாடசாலைக்கல்விச் செயன்முறையை வினைத்திறன் மிக்கதாக ஆக்குகின்றது. பிள்ளைகளினிடத்தே அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை வளர்க்க உதவுகின்றது. மாணவர்களை தர நிலைப்படுத்துவதற்கும், பாடசாலையின் ஆரம்பஇடைநிலை கல்விமட்டங்களில் தேர்ச்சி அடைந்து மூன்றாம்நிலை கல்விக்குள் பிரவேசிப்பதற்கும், உயர்கல்விக்குள் பிரவேசிப்பதற்கும் பாடக்கலைத்திட்டத்தின் வகிபங்கு முக்கியமானது. இலங்கையைப் பொறுத்தவரை பாடக்கலைத்திட்டத்தை வடிவமைக்கும் பணியினை தேசியகல்வி நிறுவனம் (NIE) மேற்கொள்கின்றது. இந்நிறுவனம் தயாரிக்கும் கலைத்திட்டம் மாணவரிடையே அறிவுத்திறன் மனப்போக்குகளில் விருத்தி செய்யும் நோக்குடன் தயாரிக்கப்படுகின்றது.

பாடக்கலைத்திட்டத்தினைவிட இணைக்கலைத்திட்டம் பாடசாலையின் கல்வி முறைமையின் செயன்முறையினை வினைத்திறனுடன் வழிநடாத்துவதற்கு பங்களிப்புச் செய்கின்றது. பாடக்கலைத்திட்டமானது அறிவை வளங்குகின்றனவாக இருக்கின்றது. எண்ணக்கருக்கள், கோட்பாடுகள், சூத்திரங்கள், தத்துவங்கள் என்பவற்றை வழங்குகின்றனவாகவே பாடக்கலைத்திட்டம் வடிவமைக்கப்படுகின்றன. ஆனால் இணைக்கலைப்பாடத்திட்டங்கள் பல்வேறு நோக்கங்கள், தேவைகளுக்காக அறிமுகப்படுத்தப்படுகின்றன. விளையாட்டுக்கள்,பொருட்காட்சிகள், கலை விழாக்கள். மாணவர்மன்றச் செயற்பாடுகள், சூழற்பராமரிப்புச் செயற்திட்டங்கள், சாரணியச் செயற்பாடுகள் போன்ற பலவற்றையும் இணைக்கலைத் திட்டச் செயற்பாடு களுக்குள் அடக்க முடியும். குறிப்பாக பாடசாலையில் வகுப்பறைக்கு வெளியில் பிள்ளைகளிடம் ஆளுமையையும், விழுமியங்களையும் வளர்க்க இணைக் கலைத் திட்ட செயற்பாடுகள் உதவுகின்றன. பாடசாலைக் கல்வி நிறைந்து பின்னர் சமூகமட்டத்தில் செயற்படுத்துவதற்கு தேவையான மென்திறன்களை முன்னேற்றுதல், தொடர்பாடல் மற்றும் கருத்து வெளியீட்டுத்திறன்கள் வளர்த்தல், தான் பெற்ற அறிவை சமூகத்திற்கும் நன்மை தரும் வகையில் உத்தமமான முறையில் பிரயோகிக்கும் ஆளுமையை இணைக்கலைத்திட்டம் வழங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைக்கலைத்திட்டத்தின் மூலம் மாணவர்களிடத்தே விழுமியங்களை வளர்க்கலாம். மனிதனிடத்தே நன்மை தீமை இரண்டையும் தீர்மானிப்பது விழுமியம் ஆகும். விழுமியம் என்பது ஒரு சம்பவத்தை அல்லது கருத்தை அடிப்படையாகக் கொண்டு அதற்கு சார்பாக அல்லது எதிராக எடுக்கப்பட்டுள்ள மனப்பாங்காகும். விழுமிய அடிப்படையில் வழங்கப்படும் கல்வி வாழ்க்கைக் கல்வியாக அமைகின்றது. இணைக்கலைத்திட்டங்களில் குறிப்பாக மாணவர் மன்றச்செயற்பாடுகள் விழுமியத்தை வளர்க்க உதவும். உடற்கல்வி, கலை, கலாச்சார நிகழ்வுகள் விழுமியங்களை வளர்க்கும்.

இணைக்கலைத்திட்டத்தை போல மறைக்கலைத்திட்டமும் பாடசாலையின் செயன்முறையினை வினைத்திறனுடையதாக மாற்ற உதவுகின்றது. பாடசாலைகளின் நிகழ்வுகளினூடாக பிள்ளைகளுக்கு எவ்வாறாக கற்பிக்க வேண்டும் என்பது மறைக் கல்வித்திட்டமாகும். பாடசாலைச் செயன்முறை, அங்கு பயன்படுத்தப்படும் பொருட்கள் அமைப்பு, ஆசிரியரின் நடத்தைகள், தொடர்பாடல் முறைகள். பழக்க வழக்கங்கள் முதலியவை மறைந்து நின்று மாணவரது அறிவியலிலும், நடத்தையிலும் ஆளுமையிலும் செல்வாக்குச் செலுத்துகின்றன.

பாடசாலைகளில் 13வருடங்களாக மாணவர்களின் நடத்தைக் கோலங்களை வடிவமைப்பது மறைக்கலைத்திட்டமாகும். பாடசாலை முகாமைத்துவம் மிகவும் பல மானவிதிகளையும், கட்டுப்பாடுகளையும் கொண்டிருந்தால் மாத்திரமே பாடசாலைக் கலாச்சாரத்தினை உன்னதமாக பேணமுடியும். இதனால் மறைக் காலத்திட்டம் உயர்நிலையில் விளங்கப் பாடசாலை சமூகம், பாடசாலையின் நோக்கு, பாடசாலைஒழுக்கம், போன்றவற்றை ஆசிரியர், மாணவர், பணியாளர் நன்கு விளங்கிக் கொள்ள வழிசெய்யவேண்டும். உடை, மொழி, செயற்பாடு, அணுகுமுறை மதிப்பீடு தொடர்பாக மிக நேரிய மனப்பாங்கையும், நடத்தையையும் கொண்டிருத்தல் வேண்டும். இத்தகைய முகாமைத்தவ செயற்பாடுகள் சிறந்த மறைக் கலைத்திட்டத்தை வினைத்திறன் மிக்கதாக செயற்படுத்த வழிசெய்கின்றது.

இவ்வாறு பாடசாலைக்கல்வி முறையின் செயன்முறையினை வினைத்திறன் மிக்கதாக ஆக்குவதற்கு கலைத்திட்டத்தின் வகிபங்கு குறிப்பிடத்தக்கதாய் இருக்கின்றது. ஆயினும் மேற்குறிப்பிட்ட கலைத்திட்டத்தில் சிலவற்றை பாடசாலை களில் வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்தும் போது பாடசாலை முகாமைத்துவம் சில சவால்களையும் எதிர்நோக்குகின்றது. மாணவர்கள், பெற்றோர்களின் பூரண ஒத்துழைப்பின்மை, வளப்பற்றாக்குறை, ஆளனிப் பற்றாக்குறை காரணமாகவும், புதிய புதிய உத்திமுறைகளில் தெளிவின்மை காரணமாகவும் மேற்குறிப்பிட்ட கலைத்திட்டங்கள் சிலவற்றை நடைமுறைப்படுத்துவதில் கடினமாய் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பக் கல்வியில் பெற்றோரின் பங்களிப்பு

திருமதி. தவராணி பிறேம்குமார்
ஆசிரியர்,
யா/கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
கனிஷ்ட வித்தியாலயம்

ஆரம்பக்கல்வி என்றும் பதம் குறிப்பது யாதெனில் ஐந்துவயது பூர்த்தி அடைந்த பிள்ளைகள் ஆண்டு ஒன்று தொடக்கம் ஆண்டு ஐந்துவரை பாடசாலையில் கற்கும் கல்வியாகும். அதாவது முன்பள்ளியிலிருந்து புதிய அழகான பாடசாலைக்கு வருகின்ற குழந்தை ஐந்து ஆண்டுகள் தொடர்ந்து தனது ஆரம்பக் கல்வியைக் கற்கின்றான். குழந்தையின் மனதில் கல்வி பற்றிய முதற்பதிவு ஆரம்பக் கல்வியிலேயே ஊட்டப்படுகின்றது. எனவே இவ்வேளையில் பெற்றோரின் பங்களிப்பு முக்கியமான தொன்றாகக் கருதப்படுகிறது.

"செல்வங்களுள் சிறந்த செல்வம் குழந்தைச் செல்வம்" இவ்வாறான குழந்தைகளைப்பெற்ற பெற்றோர்களாகிய உங்களது கைகளிலே இக் குழந்தையின் ஆரம்பக்கல்வியும் தங்கியுள்ளது. நீங்கள் உங்கள் குழந்தைகள் எவ்வாறு கற்க வேண்டும்? கற்றபின் எவ்வாறு வரவேண்டும் எனக் கனவு காண்பீர்கள். அவ்வாறான நிலையில் உங்கள் குழந்தைக்கு அடியெடுத்துக் கொடுக்கும் ஆரம்பக் கல்வியை நல்ல முறையில் பெற்றுக் கொடுக்க வேண்டிய பொறுப்பு உங்களுடையதே ஆகும்.

மீன்குஞ்சுக்கு நீந்த எவரும் கற்றுக் கொடுப்பதில்லை. ஆனால் அது தானாக நீந்தப்பழகிக் கொள்ளும். ஆனால் எங்கள் குழந்தைகளுக்கு அவ்வாறு அல்ல. கற்றலின் மூலமே இவர்கள் வாழக் கற்றுக் கொள்கின்றனர். இந்தக் குழந்தை சமுதாயத்தில் படித்து பேரறிவாளனாக வரவேண்டும் எனின் அவனுக்கு ஆரம்பக் கல்வி மிகவும் முக்கியமானது. இவ் ஆரம்பக்கல்வியை சரிவரப் பெற்றுக் கொள்ளாத ஒரு குழந்தை அவனது எதிர்காலத்தையே இழந்துவிட்டான் என ஒவ்வொரு பெற்றோரும் அறிந்து கொள்ள வேண்டும். இவ் ஆரம்பக் கல்வியை ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகளுக்கு சரிவரப் பெற்றுக் கொடுக்க வேண்டியது கட்டாயமானது.

ஒரு தாய் எப்போது மகிழ்வாள் என்றால் ஒரு குழந்தை பிறந்தவுடன் எனக் கூறுவர். இவ் மகிழ்வு எப்போ இரட்டிப்பாகின்றது என்றால் தனது குழந்தை பெரிய அறிவாளிஎன கற்றோர் நிறைந்த சபையிலே கூறும்போது. இவ்வாறு அவன் அறிவாளி ஆவதற்குக் களம் அமைத்துக் கொடுப்பது இவ் ஆரம்பக்கல்வியே எனின் மிகையாகாது.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்பது போன்று எண்ணையும் எழுத்தையும் புரியக் கற்றுக் கொடுக்கும்காலம் இவ் ஆரம்பக்கல்விப் பருவமே. இதனை ஒவ்வொரு பெற்றோரும் அறிந்திருத்தல் அவசியமானது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பிள்ளையின் ஆரம்பக் கல்விச் சூழல் என்பது அவனது வீடே ஆகும். அவர்களுக்கான ஆசிரியர்கள் பெற்றோர்களே எனின் மிகையாகாது. ஒரு குழந்தை அதிக நேரத்தை பெற்றோருடனேயே செலவிடுகின்றான். அதனால் அவர்களின் ஆரம்பக் கல்வி பெற்றோரிடமே ஆரம்பமாகின்றது. மேலும் குழந்தையின் ஆரம்பக் கல்வியானது நாணயத்தின் இருபக்கம் போன்றது. இதில் ஒருபக்கம் ஆரம்பக்கல்வி ஆசிரியரும் மறுபக்கம் பெற்றோருமே ஆகும்.

மேலும் பெற்றோர்களாகிய நீங்கள் தொலைக்காட்சி பார்ப்பதிலும், தொடர்நாடகங்களைப் பார்ப்பதிலும் உங்கள் நேரத்தை வீணாக்காது உங்கள் குழந்தைகளுக்காக நேரத்தை ஒதுக்குங்கள். அவர்களுக்கு புத்தகம், பயிற்சிக் கொப்பிகள் என்பவற்றை வாங்கிக் கொடுத்தால்மட்டும் போதாது அவற்றைப் பேணும்விதத்தையும் சொல்லிக் கொடுங்கள். பாடசாலையிலிருந்து வீட்டிற்கு வந்ததும் அவர்களின் அன்றாடக் கல்வி நடவடிக்கை தொடர்பாகக் கேட்டறிந்து கொள்ளுங்கள். அவர்களின் வீட்டுப் பாடங்களிற்கு உதவுங்கள். வாரத்தில் ஒருநாள் வகுப்பாசிரியரைச் சந்தித்து உங்கள் பிள்ளையின் நிலைபற்றி அறிந்து கொள்ளுங்கள். அதிபர், வகுப்பாசிரியருடன் நல்லுறவைப் பேணுங்கள். அவர்களுக்கு கல்வியின் முக்கியத்துவம் பற்றி எடுத்துக் கூறுங்கள். இவ்வாறு கூறி அவர்களுக்கு ஊக்கமளித்தால் அவர்கள் இயல்பாகவே கற்கத் தொடங்கி விடுவார்கள்.

ஆரம்பப் பாடசாலைகளில் இன்னுமொரு பிரச்சினையாக அமைவது சில மாணவர்கள் தொடர்ச்சியாக சமூகமளிக்காமையாகும். சில பெற்றோர்கள் கல்விப் பெறுமானத்தை உணராது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பத் தவறிவிடுகின்றனர். இவ்வாறான பெறோர்களின் ஆர்வமின்மையால் ஆரம்பக் கல்வியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

உங்கள் குழந்தைகள் உங்கள் கைகளில் கிடைத்த சிற்பங்கள் . அவர்களை நல்ல வகையில் செதுக்கி எடுக்க வேண்டிய பொறுப்பு பெற்றோர்களாகிய உங்களுடையதே ஆகும். சிறந்த ஆரம்பக்கல்வியே சிறந்த உயர்கல்விக்கும் உவப்பான வாழ்க்கைக்கும் உயரத்தும் ஏணியாக அமைகின்றது.

அந்த வகையில் உங்கள் குழந்தைகளை சமூகத்திற்கு பயனுள்ள சிறந்த பிரஜையாக மாற்றியமைக்க சிறந்த அத்திவாரமிட்டுக் கட்டியெழுப்புங்கள். அவ்வாறு ஊக்கமளிப்பதன்மூலம் அவர்களை சிறந்த அறிவாளர்களாக நாட்டிற்கு நற்பணியாற்றுவார்கள் எனக் கூறின் மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பாடசாலை பரிசளிப்பு விழா









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவும் சீடரும்

செல்வி. ந. சாரதா
**ஆசிரியர்,**
**யா/கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி**
**கனிஷ்ட வித்தியாலயம்**

மாதா, பிதா, குரு, தெய்வம் என ஆன்றோர் கூறுவர். இங்கே தெய்வத்தின் அடுத்த நிலையில் வைத்துப் போற்றப்படுபவர் "குரு" ஆவார். இருளை நீக்கி ஒளியை வழங்குபவரே குரு எனப்படுகின்றார்.

"குரு" என்பவர் அஞ்ஞானத்தைப் போக்கி இம்மையிலும், மறுமையிலும் இன்புற வழிகாட்டுகின்றார். இவரை "ஞானகுரு" எனபர். இவ்வுலகவாழ்வினை வாழ்வாங்கு வாழ வழிகாட்டுபவரும் குரு எனவும், ஆசிரியர் எனவும் பலவாறு அழைக்கப்படுகின்றார்.

"திருவின் திறலுடையதில்லை- ஒருவுற்கு
கற்றலில் வாய்த்த பிறவில்லை - ஏற்றுள்ளும்
இன்மையின் இன்னாத தில்லையில் லென்னாத
வன்மையின் வன்பாட்ட தில்"

எனும் நான்மணிக்கடிகைப் பாடலானது "கல்வியைவிட உலகில் துணையாக இருபபது வேறொன்றும் இல்லை" எனக் குறிப்பிடுகின்றது. வாழ்வில் உறுதுணையான கல்வியை குருவின் துணையுடன் தான் பெற்றுக் கொள்ள இயலும்.

கல்வியை பெறுகின்ற மாணவர் உண்மை பேசுபவனாக, பணிவிடைபுரிபவனாக, மனம்கோணாதவனாக, பொறுமையுடையவனாக, பணிவுடையவனாக இருக்கவேண்டும் என்பது பழந்தமிழ் நூல்களில் காணும் கருத்தாகும் . இது போன்று கல்வியைக் கற்று வருகின்ற குருவும், ஒழுக்கசீலராக, அன்புடையவராக இருக்க வேண்டியது மிகமிக அவசியம் என்பர்.

முன்னைய காலத்தே குருசீட முறையில் கல்வி கற்பிக்கப்பட்டது. குருவைத்தேடி நீண்ட தூரம் சீடன் நடந்து சென்று குருவைச் சார்ந்து அவருக்கு வேண்டும் பணிவிடை செய்து பொறுமையாக குருவுடனே தங்கியிருந்து அவரிடமிருந்து கல்வியைக் பெற்றிருக்கின்றான். குருவிடம் இருந்து நாடு திரும்புகையில், வீடுதிரும்புகையில் நற்பண்பும், ஒழுக்கமும் நிறைந்த நன்மாணாக்கனாக வருவான்.

ஆனால் இந்நிலை தற்போது மாறிவிட்டது. வசதிகளும் வாய்ப்புகளும் புற்றீசல் போல பல்கிப் பெருகிவிட்டன. மனிதர்கள் மிகவும் வேகமாக வளர்ந்து கொண்டு இருக்கிறார்கள். இந்நிலையில் குருசீட மகத்துவம் மறக்கப்பட்டும், மறைக்கப்பட்டும் வருகிறது. ஆசிரியர் மத்தியில் குறித்த சிலரிடம் மட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தமற்ற மாற்றத் தொடுகை காணப்படுகின்ற நிலையில் மாணவரிடம் அதிவேகமாக பண்பு நிலை மாற்றம் சிதைவுற்றதை, சிதைவுற்று விடுதலை அவதானிக்க முடிகிறது.

மாணவர் குடும்பச் சூழல் , சமூகச் சூழல், நண்பர்கள் சேர்க்கை, வறுமைதெரியாதவாழ்வு, தொடர்பு சாதனப்பயன்பாடு, பல்லிடக் கற்றல் முதலான இன்னோரன்ன காரணங்களால் மாணவர் மனநிலையிலும் பண்பு நிலையிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

சாதாரணமாக ஆசிரியர் வகுப்பறையுள் நுழையும் போதே அவரை வரவேற்க எழுந்து நிற்க, மாணவர் விரும்பாதநிலை பெரிதும் காணப்படுகிறது. இவ்வாறான மாணவர் தம் செயற்பாடுகளுக்கு காரணம் தேவையற்ற, பொருத்தமற்ற பழக்க வழக்கங்களுக்கு உட்படுத்தலாகும்.

"ஆமஸ்தம்பர்" எனும் பெரியார் கூறுகையில் பெரியோரை எழுந்து வரவேற்று ஆசனம்கொடுக்காது கதிரையில் உட்கார்ந்து இருப்பவரது ஆயுள்குறையும் என்கிறார். இவ்வாறான கருத்துக்கள் மாணவர் கற்றுணராமையும், மாணவர்தம் பொருத்தமற்ற மாற்றத்திற்கு காரணமாகும்.

மொத்தத்தில் ஆசிரியரை, குருவை மதிக்காத சில சமயங்களில் ஏளனம் செய்கின்ற மாணவர் தொகை அதிகரிப்பதைக் காண்பது கண்கூடு.

"நல்லாசானைப் பழித்தோர் நாயாய் பிறப்பர் " என்பது கருடபுராணவாக்கு. இவ்வாறான எத்தனையோ விடயங்களை மாணவர் அறியாது இருப்பதுவே மாணவர் தவறுகளுக்கு காரணமாகின்றன. ஒவ்வொரு செயலுக்கும் பதில் விளைவு உண்டு. நன்மை செய்யின் நன்மையும், தீமைபுரியின் தண்டனையும் தவிர்க்க இயலாது என்ற செய்தியை புரியவைக்க வேண்டியது ஆசிரியர்களது கடமை.

மாணவர்களை நல்வழிப்படுத்தி அவர்தம் பொருத்தமற்ற செயற்பாடுகளைக் களைய வேண்டியது ஆசிரியர்களது கடமை. அவ்வாறு செய்யும் போது மாணவர் தம்மைத்தாமே புரிந்து கொள்ள இயலும். ஆசானின் அருமை பெருமையை அறிந்து கொள்ள இயலும்.

இவ்வாறு ஆசிரிய மாணவர் குருசீடர் பண்புகள் மாற்றம் பெறும் போது இருவரிடத்தே நெருக்கமான பிணைப்பு ஏற்படும். அப்பிணைப்பே மாணவரை உயர்நிலைக்கு இட்டுச்செல்லும். கல்விக் கடலிலே நீச்சலடித்து வெளியேற இயலும்.

எனவே எது எவ்வாறு மாறினும், தமிழ்மொழி காட்டிய ஆசானுக்குரிய, குருவிற்குரிய பண்புகள் பேணப்படுவதோடு மாணவர்களுடைய பொருத்தமற்ற மாற்றத்தினை பொருத்தும் நல்லுரை மூலம், பொருத்தமுற அமைத்துக் கொள்ளலாம். இது நாளைய நற்பிரசைகளை உலகிற்கு வழங்கும் உன்னத பணியாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பப்பிரிவு மாணவர்களின் கற்றல் சூழலை ஒழுங்கமைத்தல்

திருமதி . சு.சிவலிங்கம்.
ஆசிரியர்,
யா/கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
கனிஷ்ட வித்தியாலயம்

பிள்ளைகளின் வாழ்வு கல்வியில் தான் தங்கியுள்ளது அதிலும் ஆரம்பக்கல்வியினூடாகத்தான் வாழ்க்கைக்கான உறுதியான அத்திவாரம் இடப்படுகின்றது. கற்றலினூடாகத்தான் பிள்ளையில் நிரந்தரமானதொரு நடத்தை மாற்றத்தினை கொண்டு வரலாம்.

அந்தவகையில் மாணவர்களின் கற்றலுக்குப் பல அடிப்படைக் காரணிகள் தடையாக அமைகின்றன. இதன் அடிப்படையில் பரம்பரை, சூழல் என்னும் இரு வகையான அடிப்படைக் காரணிகளை ஆராய வேண்டியது எமது கடமையாகவும், தேவையாவும் உள்ளது. பிள்ளையின் உடல்அமைப்பு, நுண்மதி என்பன பரம்பரையின் அடிப்படையில் கற்றலில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக அமைகின்றன. பிள்ளையின் பெற்றோர்கள் சிறந்த கல்விமான்களாக இருப்பின் பிள்ளையின் நுண்மதி உயர்வாக காணப்படும்.அதேவேளை பெற்றோருக்குப் பரம்பரையான நோய்கள் காணப்படின் அந்நோய் பிள்ளையையும் பாதிக்கும் . இதன் காரணமாகப் பிள்ளையால் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடமுடியாமற் போகும்.

இவை தவிர பிள்ளைகளுக்குப் பார்வைக்குறைபாடு, பேச்சுக் குறைபாடு, செவிப்புலக்குறைபாடுகளும் பிள்ளையின் கற்றற் செயற்பாட்டிற்கு சிரமமாக இருக்கும்.

இனி பிள்ளையின் சூழலை நோக்குவோமானால் பெற்றோர் கல்வி கற்றவர்களாக இருந்தால் தமது பிள்ளைக்கு கல்விகற்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் அதேவேளை கல்வி அறிவுமிகக் குறைந்தோர் தமது பிள்ளைக்குத் தேவையான கற்றல் சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதில் அக்கறை காட்டுவதில்லை.

மேலும் வீட்டின் பொருளாதார நிலையை நோக்கும் போது அதுவும் கற்றலில் செல்வாக்குச் செலுத்தும் ஒருகாரணியாகும். வீட்டின் வறுமைநிலை காரணமாக தொடர் கல்வி கற்பதற்கும், கல்வி கற்பதற்கு வேண்டிய பொருட்கள் பெறுவதற்கும் முடியாமற் போய் விடுகின்றது.

இவைதவிர பாடசாலை முகாமையாளர்களும், ஆசிரியர்களும் கொண்டுள்ள எதிர்மறையான மனப்பாங்குகள், ஆசிரியரின் வரவின்மை, மாணவர்வரவின்மை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைவிலகல், கற்பித்தல் செயற்பாடுகளில் குறைபாடு, பாடசாலையின் பௌதீகவளங்களை உரிய முறையில் பயன்படுத்தாமை, உச்சஅளவில் வளங்களைக் கையாளாமை, மாணவர்மீது காட்டும் அக்கறையீனம், மாணவர்களை ஏளனத்துக்கும், விரக்திக்கும், பின்தங்கலுக்கும் உள்ளாக்கக் கூடிய ஆசிரியர்களின் நடத்தை போன்றவையும் மாணவரின் கற்றலில் பாரியளவு செல்வாக்குச் செலுத்தும் காரணியாகும்.

மேலும் மாணவர்களின் புத்தகங்கள் செயற்பாடுகள் வீட்டுவேலைகள் போன்றவற்றில் ஆசிரியர்களின் கவலையீனம், ஆரம்ப வகுப்புக்கு ஒவ்வாத கற்பித்தல் முறைகளைக் கைக்கொள்ளல் போன்ற வாறாக பல பிரச்சினைகள் உள்ளன. எனவே பிள்ளைகளின் கற்றல் கற்பித்தல் சூழலை அமைத்துக் கொள்ள பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

அந்த வகையில் மாணவர்களின் பெற்றோர் குடும்பப்பின்னணி மாணவனின் விசேடதிறமை, நோய்கள் போன்ற தகவல்களைத் திரட்டி ஒருகோவையைத் தயாரித்தல். அங்கத்தவர்களின் அடிப்படையில் மாணவர்களின் பல்வகைத் தன்மைகளை இனங்காணல். அதன் அடிப்படையில் பணிகள் ஒப்படைக்கப்படுதல் என்பவற்றை மேற் கொள்ளலாம்.

அடுத்ததாக பிள்ளையின் விவேகம், சமூகமயமாக்கல், மனவெழுச்சி, உடல்சார்ந்த அபிவிருத்தி போன்ற சகல அம்சங்களிலும் கவனம் செலுத்துதல் மாணவன் புதிய அறிவினைத் தேடிச் செல்வதற்கான பல்வேறு வழிகள் மீது அவனை வழிப்படுத்தல், அதற்கான வசதிகளை அளித்தல், மாணவர் தேடும் புதிய அறிவினை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்தல் என்பவற்றைச் செயற்படுத்தலாம்.

அத்தோடு வகுப்புக்களில் உள்ள மாணவர்களுக்கு வாசிப்பதற்கான சந்தர்ப்பங்களை பெற்றுக் கொள்வதற்கான பல்வேறு வழிகளை மேற்கொள்ளல். வகுப்பறையினை மாணவர்களின் விருப்புக்குரிய இடமாக மாற்றுதல். அனைத்து மாணவர்கள் மீதும் தனிப்பட்ட கவனம் செலுத்துதல். மாணவர்களுக்கு போதியளவு சுதந்திரம் கிடைக்கப் பெறல்.

கற்றலில் பின்னடைவு காட்டும் மாணவனை அறிந்து அவனுக்கு பரிகாரக் கற்பித்தலை மேற்கொள்ள வேண்டும்.

தவறுகள் நடைபெறும் போது தகவல்கள், அவதானிப்புகள் வாயிலாகப் பிரச்சினைக்கு ஆளாகியுள்ள மாணவரை இனங்கண்டு கொள்ளல். ஆலோசனைகளை வழிகாட்டல்களை மேற்கொள்ளல் என்பன முக்கிய அம்சங்களாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழ்ச்சிகரமான கற்கை









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்கள் துஷ்பிரயோமும் பெற்றோர் பாடசாலைகளின் பங்களிப்பும்

திருமதி. சி.காஞ்சனா
ஆசிரியர்,
யா/கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
கனிஷ்ட வித்தியாலயம்

சிறுவர்கள் துஷ்பிரயோகமானது சமுதாயத்தில் ஒர்பிரச்சினையாகவே இருந்து வருகின்றது. இப்பிரச்சினையிலிருந்து அவர்களை பாதுகாப்பதும், துஷ்ப் பிரயோகம் செய்ப்பட்டிருப்பின் அவர்களுக்கு நம்பிக்கையினை ஏற்படுத்தி அவர்களின் மகிழ்ச்சிகரமான நல்வாழ்வுக்கு வித்திடும் பாரிய பொறுப்பும், கடமையும் பெற்றோர், பாடசாலைச் சமூகத்துக்கே உரியதாகின்றது.

சிறுவர்கள் துஷ்பிரயோமானது உடல்ரீதியாகவும், பாலியல்ரீதியாகவும், உணர்ச்சிரீதியாகவும் மற்றும் புறக்கணித்தல், கேலிசெய்தல் மூலம் இடம் பெறுகின்றது. துஷ்பிரயோகமானது பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கையை நாசமாக்கி விடுகின்றது.

சிறுவர் பாதுகாப்பு என்பது சிறுவர்கள் துஷ்பிரயோகத்துக்கு இலக்காதல், புறக்கணித்தல், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பதே சிறுவர் பாதுகாப்பு ஆகும்.

சிறுவர்கள் துஷ்பிரயோகத்திலிருந்து பாதுகாக்கும் வழிமுறைகள் என்ன என்பதையே நாம் யோசிக்க வேண்டும். அதிகமானோர் சட்டத்தின் மூலம் சிறுவர்களை துஷ்பிரயோகத்திலிருந்து பாதுகாக்கலாம் எனநம்புகினன்றனர். ஆனால் அப்படிகூறிவிட முடியாது. அதாவது பெற்றோர்கள், ஆசிரியர்கள், பாது காவலர்களும், சிறுவர் மீது அக்கறையுள்ளவர்களும் அவர்களின் பாதுகாப்பு பற்றி கருத்தில் கொள்ளல் வேண்டும்.

தமது பிள்ளைகளை துஷ்பிரயோகத்திலிருந்து எப்படி பாதுகாத்துக் கொள்வதுபற்றி அறிவூட்ட வேண்டியவர்களாக பெற்றோர்கள் உள்ளனர். சிறுவர்கள் எதிர்நோக்கிவரும் ஆபத்துக்களையும், அச்சுறுத்தல்களையும் எவ்வாறு எதிர் கொண்டு தம்மை பாதுகாத்துக கொள்ளும்வகையில் நடந்து கொள்ளவேண்டுமென கற்பிக்கப்பட்ட, அறிவுறுத்தல் வழங்கப்பட்ட பிள்ளைகள் துஷ்பிரயோகத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ளப்படுகின்றனர் என ஆய்வுகள் கூறுகின்றன.

பெற்றோர்கள் பிள்ளையின் வாழ்க்கையில்அக்கறை உடையவர்களாக இருத்தல் வேண்டும்.பிள்ளைகளுடன் மனம்விட்டுக்கதைப்பதற்கும், ஒன்றாக இருப்பதற்கும் நேரத்தை ஒதுக்கி கொள்ளுதல். மற்றும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அவர்களின் நலனில் அக்கறையுள்ளவராக உணரச்செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளின் மனதில் எழும் சந்தேகங்களையும் கேள்விகளையும், நேரடியாக கேட்க முடியும் என்பதை உணரச்செய்தல். அவர்கள் உரையாடவரும்போது புறக்கணிக்காது செவிசாய்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

பிள்ளைகளின் நடவடிக்கைகள் மற்றும் பழக்கவழக்கங்களை பற்றி கவனிக்க வேண்டும். அவர்கள் யாருடன் இருக்கிறார்கள், பாடசாலை பெற்றோர் கூட்டங்கள், விளையாட்டுப்போட்டி மற்றும் கலாசாரநிகழ்வுகளில் பங்குபற்றுவதுடன், வகுப்பு ஆசிரியர்களுடன் தொடர்பினை வைத்திருப்பதோடு அல்லது அதிபர் மூலமாக பிள்ளைகளின் விடயம் தொடர்பாக அறிந்திருக்க வேண்டும்.

பிள்ளைகளுக்கு ஒரு பொம்மையின் உதவியுடன்உடல் உறுப்புக்களை தெளிவு படுத்வேண்டும். ஆண், பெண் உடல்ரீதியான வேறுபாடுகள் உள்ளன எனவும், பிள்ளைகளை நிர்வாணமாக நிற்பதை அனுதிக்ககூடாது. மற்றும் நல்ல தொடுகை, கெட்டதொடுகைபற்றி கூறுங்கள். நலலதொடுகை என்பது பாதுகாப்பு உணர்வும், அரவணைப்பும் கொண்டவை. கெட்டதொடுகை என்பது பாதகாப்பற்ற உணர்வினையும், சிறுவர்களின் மர்மஸ்தானங்களைத் தொடுவதும் தொட்டபின் அவரிடம் கூறக்கூடாது எனக் கூறுவது கெட்ட தொடுகையாகும். எனவே இவை பற்றியும் சிறுவர்களுக்கு கூறுதல் வேண்டும்.

நல்லவர்களாக காணப்பட்டாலும் அவர்களிலும் ஆபத்தானவர்கள் இருக்கிறார்கள் என்பதை தெளிவுபடுத்திக் கூறுதல். பாடசாலை வளாகத்தில் அல்லது வீட்டுக்கருகில், விற்பனையாளர்கள் மற்றும் நன்கு அறிந்த யாராக இருந்தாலும் ஆபத்தானவர்கள் இருக்கக் கூடும் என கற்றுக் கொடுக்க வேண்டும்.

பிள்ளைகளின் சுயபாதுகாப்புபற்றி கற்றுக் கொடுத்தல். அதாவது அவர்களது பெயர்,வீட்டுத்தொலைபேசிஇலக்கம், பெற்றோர்களின் தொலைபேசிஇலக்கம் மற்றும் அதனை பாவிக்கும் முறையினை அறிந்திருக்கச் செய்தல். பெற்றோரின் அனுமதி பெறாது எந்த இடத்திற்கும் செல்லக் கூடாது. சம்பவங்களை தயங்காமல் வெளிப்படுத்த அறிவூட்டுதல். அவர்கள் செல்லுமிடங்களில் அவதானமாக இருத்தல், பாதுகாப்பான மற்றும் அவர்களின் வயதினையொத்ததவர்களுடன் விளையாடு தலில்அவதானமாக இருத்தல் வேண்டும். தனிமையாக இருத்தல், தெரியாத நபர்கள் கொடுக்கும் பொருட்களை வாங்க கூடாது என அறிவுறுத்தல் வேண்டும். வீதியில் அசௌகரியப்படுத்தும் வகையில் யாரும் நடந்து கொண்டால் அங்கிருக்கும் பெரியவர்களிடம் கூறல் போன்ற கருத்துக்களை பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு அறிவுறுத்தல் செய்ய வேண்டும்.

எனவே "சிறுவர்கள் நாளைய சமுதாயம்" அவர்களை துஷ்பிரயோகத்தில் இருந்து பாதுகாப்பது பெற்றோர்களினதும் பாடசாலையினதும் தலையாய கடமையாக உள்ளது. எனவே சிறுவர்களை துஷ்பிரயோகத்திலிருந்து பாதுகாத்து கொள்வது பெற்றோர், பாடசாலையின் கடமையாக இருப்பதோடு, அதனை தடுப்பதையே நோக்காகக் கொண்டு செயற்பட வேண்டும்.

"இன்றைய சிறுவரக்ள நாளைய தலைவர்கள்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பக்கல்விக்கான பிள்ளைநேய அணுகுமுறை

சௌ.பிரதர்சனா
ப.பாமினி
இ.சுயா
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
உள்ளகப் பயிற்சி ஆசிரியர்கள்(2014)

1972ம் ஆண்டு "பிள்ளை சூழலோடு இணைந்து கற்றல்" என்ற கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டதற்கு இணங்க. 2002ம் ஆண்டு கல்வி அமைச்சினதும் வடமேல் மாகாண கல்வித் திணைக்களத்தினதும் மேற்பார்வையில் **UNICEF** அனுசரணையில் வடமேல் மாகாணத்தில் 124 பாடசாலைகளில் பிள்ளைநேயப் பாடசாலைத்திட்டம் முன்னோடி வேலைத்திட்டமாக செயற்படுத்தப்பட்டது.

பின்னர் 2004ம் ஆண்டு பிள்ளைநேயப் பாடசாலைத்திட்டம் அனைத்து மாகாணங்களுக்கும் விரிவாக்கப்பட்டது. இத் திட்டம் இன்று 1400 பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கும். அதேவேளை நாட்டிலுள்ள அனைத்து ஆரம்பக்கல்விப் பாடசாலைகளும் இத்திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதாவது இவ் எண்ணைக் கருவை கல்வித் திட்டம் மூலம் தேசிய கல்வி ரீதியாக ஏற்று அனைத்து ஆரம்பக்கல்விப் பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிள்ளைநேயப் பாடசாலையின் பண்புகளாக ஆண்-பெண் வேறுபாடின்றி சம சந்தர்ப்பம் வழங்கப்படல், பிள்ளைகளின் செயற்பாட்டுக்கு வரவேற்பு, பாராட்டு வழங்குதல், பிள்ளைகளின் பாதுகாப்பினை அனைத்துத் தரப்பினரும் உறுதி செய்தல், தினசரி வரவு உயர்மட்டத்தில் காணப்படுதல், பாடசாலை பிள்ளை விருப்பத்துடன் உள் நுழைவதற்கான கவர்ச்சிகரமான இடமாக இருத்தல், பாடசாலை மட்டத்திலிருந்து இடை விலகுவோர் இல்லாமை, அனைவரையும் சமமாக மதித்தல், எல்லா செயற்பாடுகளிலும் பிள்ளைகளுக்கு சம வாய்ப்பளித்தல், பிள்ளைகளுக்கு மகிழ்ச்சிகரமானதும், சுதந்திரமானதுமான கற்றல் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல், சுகாதாரத்தினை மேம்படுத்தும் இடமாகப் பாடசாலையை உறுதிசெய்தல், பாடசாலை வளங்களை வினைத்திறனுடன், பயன்படுத்தல், சிறந்த வினைத்திறன் மிக்க தொடர்பாடல் பொறிமுறையை நடைமுறைப்படுத்தல் போன்றன காணப்படுகின்றன. இவை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். பிள்ளைநேயப் பாடசாலையில் 06 பரிமாணங்கள் இனங்காணப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

1. பிள்ளைகள் பாடசாலையிலிருந்து இடைவிலகலைத்தடுத்தல் எனும் நியமத்தை அடிப்படையாகக் கொண்டு முதலாவது பரிமாணத்தில்

1.1 உரிமைகளை அடிப்படையாகக் கொண்டு உயிரோட்டமாக உட்படுத்தும் சட்டத்தின் பிரகாரம் 1989ம் ஆண்டு ருமேுல் அடிப்படை உரிமைகளை ஏற்படுத்தும் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதனை இலங்கைஅரசாங்கம் 1991ம் ஏற்றுக்கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.2 இதனடிப்படையில் பாடசாலையில் காணப்படும் செயற்பாடுகளில் பிள்ளைகள் கலந்து கொள்ளவும் வளங்களைச் சமமாகப் பயன்படுத்தவும் பிள்ளைகளுக்கு சமமான வாய்ப்புக் காணப்படுகிறது.
1.3 மேலும் பிள்ளைகளிற்குப் பாதிப்பை ஏற்படுத்தும் உடல், உள தண்டனைகள் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. பிள்ளைகளைப் பயமுறுத்தல், தொந்தரவு செய்தல் போன்றவற்றைத் தடுத்தலும், துலங்கல் காட்டலும் காணப்படுகின்றது.
1.4 சிறுவர் உரிமை தொடர்பாக ஒட்டுமொத்தப் பாடசாலையை சமூகத்தினரும் அறிவூட்டப் பெற்றுள்ளனர். இவ் விளக்கத்துடனேயே பிள்ளை நேயப் பாடசாலையின் செயற்பாடுகள் இடம் பெறுகின்றன.

ஆனாலும் வறுமை, குடும்ப வன்முறை, வீடு இன்மை, கேலிக்கு உள்ளாதல், பாராமுகம், யுத்தநிலமை, விசேட தேவை பற்றிக் கவனம் செலுத்தாமை, தொழிலாளர்களாகப் பயன்படுத்தியமை போன்ற சிறுவர் உரிமை மீறப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றமை கவலைக்குரிய விடயமாகும்.

2. ஆண்-பெண் இயல்புகளில் கவனம் செலுத்துதல் எனும் நியமத்தின் கீழ்
2.1 ஆரம்பக்கல்வியைப் பூரணப்படுத்தவும், இடைநிலைக்கல்வியை அணுகவும் ஆண் பிள்ளைகளுக்கும், பெண்பிள்ளைகளுக்கும் சமவாய்ப்பு வழங்கப்படல்.
2.2 பாடசாலையின் சகல செயற்பாடுகளின் போதும் சமமான அடிப்படையில் பங்குபற்றல்.
2.3 பாடசாலையின் பௌதிகவளம் எல்லோருக்கும் சமமான விதத்திலும், பொருத்தமான விதத்திலும் காணப்படல்.

3. பிள்ளைகளின் கற்றல் பேறுகளை விருத்தி செய்தல் என்ற நியமத்தின் கீழ்
3.1 கற்றலுக்கு உதவும் முகமாக மனித வளமும் வகுப்பறை வசதிகளும் போதுமான அளவில் காணப்படுகின்றன.
3.2 வகுப்பறைச்சூழல் உட்படுத்தல் முறையில் அமைத்தல்.
3.3 தேசியசூழல், பண்பாடு பற்றிய அறிவைப் பெறக் கலைத்திட்டம் இசைவாக்கப்படல்.
3.4 சுய ஆர்வத்துடன் தமது திறன்களை தொடர்ச்சியாக விருத்தி செய்தல்.
3.5 மாணவர் மையக் கற்பித்தல் முறை.
3.6 அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகள் முறையாக கணிப்பீடு செய்யப்படுகின்றன.
என்ற பிரிவுகள் காணப்படுகின்றன.

4. பிள்ளைகளின் ஆரோக்கியம் கவனிப்புடன் பாதுகாப்புப் பெறல் என்ற நியமத்தின் கீழ்
4.1 சுகாதாரம், கவனிப்பு, பாதுகாப்பு தொடர்பாகப் பாடசாலை மட்டத்திலான கொள்கைகள் உள்ளன.
4.2 உணவு, நீர், கழிவகற்றல் வசதி உண்டு
4.3 பாடசாலைச் சூழல் பாதுகாப்பாகப் பேணப்படுகிறது.
4.4 பிள்ளைகளுக்கான சுகாதாரக் கல்வி காணப்படுகின்றது.
4.5 உள, சமூகநல சேவைகளில் ஈடுபடுதல்.
4.6 துன்புறுத்தல், துஷ்பிரயோகம், அழுத்தத்தில் இருந்து பாதுகாக்கப்படுதல்.
4.7 அனர்த்த முகாமைத்துவத்திற்கான திட்டமிட்ட முன்னாயத்தம் காணப்படல் போன்ற பிரிவுகள்காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை நிகழ்வுகள்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. குடும்பம், மற்றும், சமூகத்துடன் செயற்பாட்டு ரீதியில் தொடர்புபடுத்தல் என்ற நியமத்தின் கீழ்

5.1 மாணவர், குடும்பம், சமூகம் போன்றவற்றின் வினைத்திறன் மிக்க பங்களிப்புடன் சுயகணிப்பீடு செய்து பாடசாலை அபிவிருத்தித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படல்.

5.2 **SDP** நடைமுறைப்படுத்தப்படும் போது அதிபர், ஆசிரியர், மாணவர், குடும்பம், சமூகம் போன்றோர் செயல் ரீதியான பங்களிப்பு வழங்குகின்றனர்.

5.3 பாடசாலை அபிவிருத்தித்திட்டம் கண்காணிப்பின் போதும் இவர்களுடைய செயல்ரீதியான பங்களிப்பு காணப்படுகின்றது.

5.4 சிறுவர்நேயவ வீடு அல்லது சமூகசூழல் போன்றவற்றின் மேம்பாட்டிற்காக பாடசாலை உயிரோட்டமாகப் பங்களிப்புச் செய்கின்றது.

6. சிறுவர் நேய கொள்கை, விதிமுறை ஊடாக உதவிபெறல்,

6.1 அரசின் கொள்கைகளும், பிரமாணங்களும் அவற்றை நடைமுறைப்படுத்தும் சிறுவர் நேயப் பாடசாலை அபிவிருத்திக்கு உதவும்.

6.2 உரிய அனைத்து அரச நிறுவனங்களுக்கும் இடையில் சகல மட்டத்திலும் இணைப்பு காணப்படல்.

6.3 நிதிவளம் எல்லா மட்டத்திற்கும் வழங்கப்படல்

6.4 சகல நிலையிலும் தொழினுட்ப உதவி காணப்படும்.

6.5 கலைத்திட்டம், ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி, பாடப்புத்தகம் என்பவற்றில் சிறுவர் நேயக் கோட்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான 06 நியமங்களினடிப்படையிலும் பிள்ளைநேயப் பாடசாலை அம்சங்கள் அனைத்து ஆரம்பக்கல்விப் பாடசாலைகளிலும் முன்னெடுக்கப்படுகின்றன. வலிகாமம் வலயம் ஆரம்பக்கல்விப் பாடசாலைகளில் ஒன்றான யா/கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயம் ஒரு சிறந்த முன்னுதாரணப் பாடசாலையாக விளங்குகின்றது.

உயர் ஆற்றலும் பண்பும் கொண்ட எதிர்கால சமூகத்தை உருவாக்குவதில் பெரும் பங்கு வகிப்பது ஆரம்பக்கல்விச் செயற்பாடாகும். தரமான ஆரம்பக்கல்வி தரமான சமூகத்தின் அத்திவாரமாகும். தரமான கல்வி என்பது தகுந்த உயர் கற்பித்தல் செயன் முறையிலேயே தங்கியுள்ளது. தரமான கற்பித்தல் எனும் போது

*சிறுவர்நேய அணுகுமுறை

*செயற்பாடு சார் கற்பித்தல்

*சமூகப்பங்குபற்றல்

என்பவற்றை உள்ளடக்கியதாக அமைய வேண்டும். ஒன்றுடன் ஒன்று நெருக்கமான தொடர்பை இவை கொண்டுள்ளதால் அப் பண்புகள் தனித்தனியாக அமுல்ப்படுத்த முடியாதவை. எனவே சிறுவர்நேய அமுலாக்கம் தரமான கல்வியை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

சர்வதேச சிறுவர் உரிமைகள் பிரகடனத்தின் படி சகல பிள்ளைகளதும் சகல உரிமைகளையும் செயல் ரீதியாக நிறைவேற்றுவது சிறுவர் நேயப் பாடசாலை ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்நேயப் பாடசாலை என்பது.

*மகிழ்ச்சியானதும் ஆரோக்கியமான பிள்ளைகள் உள்ள

*அன்பு,ஆர்வத்துடன் கற்பிக்கும் ஆசிரியர்கள் உள்ள,

*பாடசாலை சமூகத்துடன் உதவி ஒத்தாசை பெறுகின்ற

*பிள்ளைகளை அவர்களின் உச்ச நிலைக்கு இட்டுச் செல்கின்ற

*பாதுகாப்பான, சுகாதாரமான சூழலைக் கொண்ட,....... இடமாகும்.

2016ம் ஆண்டளவில் இலங்கையின் சகல ஆரம்பப் பாடசாலைகளையும் சிறுவர் நேயப் பாடசாலைகளாக மீளுருவாக்கம் செய்யும் இலக்கினை அடையும் நோக்கில் ஜனாதிபதி செயலாளர் அலுவலகத்தின் சிறுவர் நேய பாடசாலைகள் கண்காணிப்பு அலகு செயற்படுகிறது. இவ் அலகு சிறுவர் நேயப் பாடசாலைகளை மதிப்பிடுவதற்கான ஐந்து அளவு கோல்களையும் அவற்றுள் அடங்கும் அம்சங்களையும் எடுத்துக் காட்டியுள்ளது.
அவற்றுள் சிலவற்றை நோக்குவோம்.

1.பாடசாலை மீது மாணவர்கள் கொண்டுள்ள விருப்பும் அன்பும்

*மாணவர்கள் தலைமையின் கீழ் பாடசாலையில் நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளினதும் செய்கின்ற சேவைகளினதும் எண்ணிக்கை.

*மாணவர்களுக்கு உள, உடல் தண்டனைகள் வழங்காமை.

*பக்கச் சார்பின்றி மாணவர்களை சமமாக கவனித்தல்.

2.அதிபரின் முயற்சி ஆற்றல் மற்றும் பாடசாலை மீது கொண்டுள்ள பற்று.

*காலையிலேயே பாடசாலைக்கு வருகை தரல், பாடசாலை நேரத்தில் பாடசாலையில் தங்கியிருத்தல், மேலதிகமான நேரத்தை பாடசாலையில் செலவு செய்தல்.

*வருடாந்த சொந்த லீவினை எடுப்பாமல் இருப்பதற்கான முயற்சி (ஆகக் கூடிய 5 நாட்கள்)

*அலுவலகத்தின் ஒழுங்கமைப்பு பேணப்படுதல்.

*வெளிநிறுவனங்கள், அயற்பாடசாலைகள், சமூகத்துடன் நல்லுறவு பேணுதல்.

*சகல ஆசிரியர்களையும் மாதத்திற்கு ஒருமுறையாவது உள்ளக மதிப்பீட்டிற்கு உட்படுத்தல்.ஆசிரியர்களிடம் வரவேற்பு இருப்பதற்கான சான்றுகள்.

*தீர்மானங்கள் மேற்கொள்ளும் போது பாடசாலை அபிவிருத்திச் சங்கம் கூட்டப்பட்ட தடவைகளும், சமூக பங்களிப்புடனான செயற்பாட்டுச் சந்தர்ப்பங்களின் எண்ணிக்கையும்.

3.ஆசிரியர் குழாத்தின் கலாசாரம்

* நேரம் பிந்தி வருகை தருதல் குறைந்துள்ளமை.

*பாடசாலை ஆசிரியர்களின் நாளாந்த லீவு பெறும் சதவீதம் குறைவாகவே இருத்தல்.

*லீவு எடுக்கும் நாட்களில் வேலைகளை ஒப்படைத்தல் மற்றும் விடுபட்ட பகுதிகளை முடித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இணைப்பாடவிதான செயற்பாடுகளில் உற்சாகத்துடன் பங்கு பற்றும் ஆசிரியர்களின் சதவீதம்.

*கற்றல் கற்பித்தல் தொடர்பாக சுய கணிப்பீடு.

* அதிபருக்கு வழங்கும் ஒத்துழைப்பு

4.மாணவரிடையே நிகழ்கின்ற சாதகமான பாடசாலைச் சூழல்

*பாடசாலையின் மரபினைப் பேணுவதற்கு, மாணவர்கள் எடுக்கும் செயற்பாடுகள்.

*மற்றவர்களுக்கு உதவுவதற்கும் நட்புறவினைப் பேணுவதற்கும் மாணவர்கள் முன்வருதல்.

*ஏனைய மதத்தவர்களையும் இனத்தவர்களையும் மதித்தல், பொது இடங்களில் நடத்தை மற்றும் பொதுச்சொத்துக்களை பாதுகாத்தல்.

*நற் சுகாதாரப் பழக்கவழக்கங்களை கடைப்பிடிப்பதில் காட்டும் அக்கறை.

5.மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்துவதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள்.

*உயிரோட்டமான கற்றல் சூழல் ஒன்றினை அமைத்தல்.

*நூலகப் பாவனைக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளமை.

*மாணவர்களின் ஆக்கங்களை வெளியிடுவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தல்.

*மாணவர்களின் கற்றல் சந்தர்ப்பங்களை முன்னேற்றுவதற்காக வெளிவாரியாக வள நபர்களின் உதவிகளைப் பெறுதல்.

இவ்வாறான இயல்புகளைக் கொண்டதாக பிள்ளை நேயப்பாடசாலை விளங்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

வலிகாமம் கல்வி வலயத்திலேயே முன்னனியான பிள்ளைநேயப் பாடசாலையாக எமது பாடசாலை விளங்குகிறது. இதற்கு பூரணமான ஓர் அத்திவாரமாக எமது பாடசாலையின் தற்போதைய அதிபர் திரு.சி.சிவகுமாரன் அவர்கள் திகழ்கின்றார். எங்கள் பாடசாலையினதும் மாணவர்களினதும் செயற்பாடுகளிலும் முன்னேற்றத்திலும் அக்கறை கொண்டு அர்ப்பணிப்புடன் எங்கள் அதிபர் செயற்படுகிறார்.

மேலும் பிள்ளைகளின் பலம், பலவீனங்களைக் கண்டறிந்து அதற்கு ஏற்றவகையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளிலோ இணைப்பாடவிதான செயற்பாடுகளிலோ அதிபருடன் ஒத்துழைத்து செயற்படும் நமது ஆசிரியகுழாம் பிள்ளைநேய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் பேருதவி அளிக்கின்றனர்.

அத்தோடு உற்சாகமும், அக்கறையும் கொண்ட எமது மாணவச் செல்வங்கள் கற்றலிலும் ஏனைய செயற்பாடுகளிலும் மிகவும் ஆர்வத்துடன் செயற்பட்டு வருகின்றனர்.

மரம் செழித்து வளர ஆணிவேர், இருந்தாலும் அதைத்தாங்கி பக்க வேர்கள் இருப்பது போன்று எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு பக்க வேராக நமது பெற்றோர்களும், சமூகத்தவர்களும் ஊக்கம், ஆக்கமும் அளிக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய சிறப்பான அம்சங்களோடு பயன்தரு விருட்சமாய் பரந்து வியாபித்து வலிகாமம் கல்வி வலயத்திலே சிறப்பான பிள்ளை நேய ஆரம்பப் பாடசாலையாக எமது பாடசாலை விளங்குகிறது என்பதில் எவ்வித ஐயமில்லை.

பிள்ளைநேயப் பாடசாலைகளில் காணப்படும் வகுப்பறைகள் பிள்ளைக்கு மகிழ்ச்சிகரமான கற்பித்தலை வழங்கக் கூடிய வகையில், தூய வளி, போதிய இடம், போதியளவு சூரியவெளிச்சம், சிறந்த கவின் நிலைப்படுத்தல், குழுமுறைக்கற்பித்தல், செயற்பாடுகள் மூலமான கற்பித்தல், உட்படுத்தல் கற்பித்தல், நீர் வசதி போன்றவற்றுடன் அரங்க மூலை, வழிபாட்டு மூலை, மணல் மூலை, ஒப்பனை மூலை, நீர் மூலை, வாசிப்பு மூலை போன்ற மூலைகளைக் கொண்டதாகவும் காணப்படல் வேண்டும்.

ஆனாலும் இலங்கையில் பௌதீக வசதிகள் தொடர்பான சில பிள்ளைநேயப் பாடசாலைகள்,

*கட்டடங்கள், வகுப்பறை, விளையாட்டு மைதானம் போன்ற பெதீக வளப் பற்றாக்குறை

*தனித்தனி வகுப்பறையாகப் பிரிக்கப்படாத வகுப்பறைகளில் இருந்து எழும் இரைச்சல்

*போதிய இடவசதியுள்ளவகுப்பறை இன்மையால் ஏற்படும் பிரச்சினை

*தூய்மையற்ற, ஒழுங்கமைக்கப்படாத பாடசாலைச் சூழல் கழிவறைப் பற்றாக்குறை

*ஒழுங்கான நீர் விநியோகம், மின்சாரம் கிடைக்காமை

*பாடசாலையினைச் சுற்றி வேலி அல்லது மதில் இல்லாமை

*கற்றல் - கற்பித்தல் செயன்முறைக்கு நவீன உபகரணப் பற்றாக்குறை போன்ற பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றன.

இத்தகைய சவால்களை முழுமையான தேவைப்பகுப்பாய்வு, **SWOT** பகுப்பாய்வு என்பன மேற்கொள்ளல், பாடசாலையின் பௌதீக தேவைகள் இனம் காணப்பட்டு பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நீண்டகால அடிப்படையிலான திட்டத்தைத் தயாரித்தல், பாடசாலைச் சூழலை அழகாகவும், சுத்தமாகவும் வைத்திருக்க ஆசிரியர், மாணவர் மற்றும் பெற்றோரது பங்களிப்பு நிகழ்ச்சித் திட்டங்களைத் திட்டமிடல், பாவனையற்ற தளபாடங்கள், தேவையற்ற உபகரணங்களைக் கழித்துவிடல், பயன்படுத்தாத போது உபகரணங்களையும், சாதனங்களையும் வைக்க களஞ்சியப்படுத்தும் வசதியை ஏற்படுத்தல்.

அரசாங்கம், பாடசாலை சமுதாயம், அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஏனைய தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களின் உதவியுடன் பாடசாலை பௌதீக வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் போன்ற தீர்வுகள் மூலம் வெற்றி கொள்ளலாம்.

ஆகவே "இளமையில் கல்வி சிலையில் எழுத்து" என்பதற்கிணங்க பெரியகனவுகளுடன் பாடசாலைச் சூழலில் தமது பிஞ்சுக் கால்களை எடுத்து வைக்கும் ஒவ்வொரு பிள்ளையினதும் தனியாள் வேறுபாடுகளை இனம் கண்டு மகிழ்ச்சிகரமான கற்றல் - கற்பித்தல் சூழலை பிள்ளைநேயப் பாடசாலை ஆசிரியர்கள் ஏற்படுத்திக் கொடுத்து பிஞ்சுப் பாலகர்கள் குன்றிலிட்ட தீபமாய் பிரகாசித்து நற்பிரஜைகளாக மிளிர கரம் கொடுப்போமாக............



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "வெற்றிகரமான பாடசாலைகள் வினைத்திறனுடனும் விளைதிறனுடனும் காணப்பட வேண்டும்."

செல்வி.சௌ.பிரதர்ஷனா
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
உள்ளகப் பயிற்சி ஆசிரியர்.(2014)

தீர்மானிக்கப்பட்ட இலக்குகளை பாடசாலை அடைந்து கொள்ளல் விளைதிறனாகும். எதிர்பார்த்த இலக்கை அடைந்து கொள்ளுமாயின் அப்பாடசாலை வினைத்திறன் மிக்க பாடசாலையாகும். வினைத்திறன் மிக்க பாடசாலையின் பௌதீக மானிட வளங்களை வினைத்திறனாகப் பயன்படுத்தல் முக்கியமானதாகும். பாடசாலையில் காணப்படும் வளங்களை சரியான முறையில் வினைத்திறனுள்ள முறையில் பயன்படுத்துவதன் மூலம் விளைதிறன் மிக்க பாடசாலையை கட்டியெழுப்ப முடியும்.

"கெலின்ஜர்" என்ற கல்வியியலாளர் விளைதிறன் மிக்க பாடசாலையொன்றிற்கு இருக்க வேண்டிய பண்புகளாக,

*பாடசாலையொன்றிற்குத் தெளிவான இலக்கு இருக்க வேண்டும்.

* நன்கு திட்டமிட்ட கலைத்திட்டம் மூலம் மாணவரின் திறன் விருத்தி செய்யப்பட வேண்டும்.

* ஆசிரியர் குழாமின் உயர்வான அர்ப்பணிப்பு நிலவுதல்.

* ஆசிரியர் குழாமின் உயர்ந்த எதிர்பார்க்கை நிலவுதல்.

*அனைத்துப் பிள்ளைகளும் பாடசாலைக்குச் செல்லத் தூண்டப்படக் கூடிய பாதுகாப்பான சூழலொன்று காணப்படுதல்.

* மக்களுடனான பாடசாலையின் தொடர்பு உயர் மட்டத்தில் காணப்படல்.

* பாடசாலையின் பிரச்சினைகள் உரிய முறையில் தீர்க்கப்படல்.

ஆகிய 07 பண்புகளை எடுத்துக் கூறியுள்ளார். மேலும் பெரிய பிரித்தானியாவின் பீற்றர் போற்றோ தமது ஆய்வின் வாயிலாக,

* பாடசாலை அதிபரின் நோக்கமும், தலைமைத்துவமும்.
* பிரதி அதிபர்கள் பாடசாலைக் கருமங்கள் தொடர்பாக வழங்கும் ஒத்துழைப்பு.
* ஆசிரியர்களின் பங்களிப்பு
* ஆசிரியர்களுக்கான இடைத் தொடர்பு.
* ஆசிரியர்-மாணவர்களுக்கிடையிலாக சிறந்த தொடர்பாடல்.
* அறிக்கையிடல்.

போன்றவற்றினூடாக விளைதிறன் மிக்க பாடசாலையை உருவாக்கலாம் எனக் கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை நிர்வாகமும், முகாமைத்துவமும் தொடர்பான வினைத்திறனை மேம்படுத்துவதன் மூலம் பாடசாலையின் கல்வித் தரத்தையும் தரமெம்பாட்டையும் விருத்தி செய்ய முடியும். இதன் மூலம் பாடசாலையின் குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டு மிக உயர் வினைத்திறனை அடைய முடியும். இவ்வாறு செயற்பட பாடசாலை நிர்வாகக் குழு ஆரோக்கியமான முறையில் செயற்படுவது முக்கியமானதாகும்.

பாடசாலைகள் வளப் பயன்பாட்டினைச் சரியான முறையிலும் உரிய முறையிலும் பயன்படுத்த வேண்டும். முக்கியமாக மனித வளம் சரியான முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். பாடசாலையில் பல்வேறு பதவி நிலையிலுள்ளவர்களிடத்தே காணப்படும் ஒற்றுமைத் தன்மையும், புரிந்துணர்வும், இணக்கமான போக்கும் மகிழ்ச்சிகரமான பாடசாலைச் சூழலை உருவாக்குவதுடன் வினைத்திறன் மிக்க பாடசாலையாக மாற்றி அப் பாடசாலை வெற்றிகரமாக இயங்க வழிவகுக்கிறது.

குறிக்கோள்களுக்கிடையில் முரண்பாடுகள் தோன்றாதவாறு எவ்வாறு தொடர்ந்து கொண்டு செல்லலாம் என நிறுவனத்தை திட்டமிடுவதன் மூலம் பாடசாலையை வெற்றிகரமானதாக மாற்றலாம். பௌதீக வளம், மனிதவளம், நிதிவளம், நேரவளம், தகவல்வளம் என்ற குறிக்கோள்களை நோக்கிச் சிக்கனமாகவும் வினைத்திறனுடனும் பயன்படுத்துவதன் மூலம் வளங்களை ஒழுங்கமைத்துப் பாடசாலையை வெற்றிகரமானதாகக் கொண்டு செல்ல முடியும்.

பாடசாலையில் ஆரம்ப வகுப்பு மட்டம், கனிஷ்ட வகுப்பு மட்டம்,சிரேஷ்ட வகுப்பு மட்டம், இடைநிலை வகுப்பு மட்டம், பாடசாலை மட்டம் போன்ற பல்வேறு மட்டங்களில் வெவ்வேறு நியமங்களைப் பேணுவதன் மூலம் விளைதிறன் மிக்க பாடசாலையாக மாற்றி வெற்றிகரமாகப் பாடசாலையைக் கொண்டு செல்ல முடியும். வருடாந்த திட்டங்களுக்கேற்ப பாடசாலைகள் செயற்படுகின்றனவா? எனக் கண்காணிப்பதன் மூலம் தவறுகள், பிழைகள் என்பவற்றைத் தவிர்த்து பாடசாலையை வெற்றிகரமானதாக்கலாம்.

பாடசாலையொன்று வெற்றிகரமானதாக இயங்குவதற்குப் பாடசாலை மட்டத்தில் சிறந்த திட்டமிடலை தயாரித்தல், செயற்றிட்டங்களைத் தயாரித்தல், ஒழுக்கக்கோவைகள் சட்டதிட்டங்களை நடைமுறைப்படுத்துதல், பாடசாலைக் கல்வித் தொழில் நுட்பம் என்பவற்றின் தரத்தை மேம்படுத்த தர உள்ளீடு தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபடுதல், எல்லா நிலைகளிலும் தரத்தை உறுதிப்படுத்தும் வகையில் முழுமைத் தர முகாமைத்துவத்தை நிலை நிறுத்துதல், பொருத்தமான செயற்றிட்டங்களில் தனியார் நிறுவனங்களின் உதவிளையும் ஒத்துழைப்புக்களையும் பெற்றுக் கொள்ளுதல் போன்ற பாடசாலை அதிபருக்குரிய பொறுப்புக்கள் சரியாக நிறைவேற்றப்படுமிடத்து பாடசாலை வெற்றிகரமாக இயங்கும்.

மற்றும் பாடசாலை மட்டத்திலான சிறு சண்டைகள், நெருக்கடிகள், பாடவேளைகளைப் பகிர்ந்தளித்தல், நேரசூசி ஒழுங்கான முறையில் தயாரித்தல், தரச்சுற்றுக்களை நிறுவுதல், கற்றல்-கற்பித்தலில் ஆசிரிய-மாணவர் இடைவினையுறவில் ஏற்படும் பிரச்சினைகளுக்கும் பாடசாலை மட்டத்தில் தீர்வு காணும் வகையில் செயல்நிலை ஆய்வுகளை மேற்கொள்வதன் மூலம் வெற்றிகரமானதாக பாடசாலையைக் கொண்டு செல்லலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையில் செயல்முறை ஒழுங்கொன்று காணப்படல் வேண்டும். அதாவது கற்றலுக்கான நேரம் விரயமாகாத வகையில் ஏனைய செயற்பாடுகளுக்கும் முன்னுரிமை வழங்கி கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுதல். வகுப்பறையில் பொருத்தமான கற்றல்-கற்பித்தல் உத்திகளைக் கையாண்டு மாணவரின் கற்றல் திறன் மேலும் விருத்தியடையும் வகையில் கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல். வீட்டு வேலைக்கான பயிற்சிகளை வழங்குதல். ஒவ்வொரு தவணையிலும் மாணவர்களிடையே அடைவ மட்டம் தொடர்பாகப் பெற்றோருடன் கலந்துரையாடல். பாடவேளைக்கு ஒதுக்கப்பட்ட நேரத்திற்கமைவாக பாடத்தை நிறைவு செய்தல். போன்ற ஆசிரியர்களின் பங்களிப்பு மூலம் வெற்றிகரமான பாடசாலையாக மாற்றியமைக்கலாம்.

வெற்றிகரமாக இயங்கும் பாடசாலை இணைப்பாடவிதான செயற்பாடுகளை மகிழ்ச்சிகரமான முறையில் செயற்படுத்தியிருக்கும். அதாவது மாணவரில் முழுமையான அபிவிருத்தியேற்படும் வண்ணம் இணைப்பாடவிதான செயற்பாடுகள் அமைய வேண்டும். முற்றும் விளைதிறன் பாடசாலையில் ஆசிரியர்களின் பங்களிப்பும் மிகமிக இன்றியமையாததாகின்றது.

பாடசாலையொன்று விளைதிறனுடனும், வினைத்திறனுடனும் செயற்பட்டு வெற்றிகரமாக இயங்குவதற்காக எதிர்கொள்ளும் உடன்பாடான,முரண்பாடான காரணிகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

SWOC - பகுப்பாய்வு

S Strength - பலம்

* பாடசாலையைத் திறம்பட முன்னகர்த்தக் கூடிய பௌதிக வளம் காணப்படல்.
* பொருத்தமான கேந்திர நிலையத்தில் பாடசாலை அமைந்திருத்தல் .
* வினைத்திறனும் அர்ப்பணிப்புள்ளதுமான அதிபர்,ஆசிரியர்களைக் கொண்டிருத்தல்.
* சிறந்த முகாமைத்துவக் கட்டமைப்பைக் கொண்டிருத்தல்.
* கற்றலில் ஆர்வமுள்ள மாணவர் குழாமைக் கொண்டிருத்தல்.
* பாடசாலை அபிவிருத்தி சங்கம், பழைய மாணவர் சங்கம் என்பன காணப்படல்.
* பாடவிதானம், இணைப்பாடவிதானம் ஆகியவற்றில் பாடசாலை உயர்வு நிலைகளைக் கொண்டிருத்தல்.

W-Weakness - பலவீனம

* பாடங்களுக்குப் பொருத்தமான ஆசிரியர்கள் காணப்படாமை அல்லது பற்றாக்குறை.
* வறிய மாணவர்களும் கல்வியறிவு குறைந்த பெற்றோர்களும். போதிய கட்டட வசதியின
* நகர்ப்புற பாடசாலையை நோக்கி மாணவர்கள் படையெடுத்தல்.

O - Opportunities - வாய்ப்புக்கள்.

* பிள்ளைகள் கற்க வேண்டுமென்ற உணர்வுள்ள பெற்றோர்கள் இருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* நிறுவனங்களின், பழைய மாணவர்களின் உதவி கிடைத்தல்

*நவீன தொழில் நுட்ப வசதிகளான தொலைபேசி,கணணித் தொகுதி போன்ற வசதிகள் காணப்படல்.

* விழுமியங்களையும்,ஒழுக்கங்களையும் கையாளும் மாணவர்கள்.

* சிறந்த விளையாட்டு மைதானம்,விளையாட்டு உபகரணங்களில் இருத்தல்.

C-Challenges - அறைகூவல்கள்.

* பெற்றோர்களின் குடும்பப் பின்னணி, கல்வியறிவு

*பொருட்கள்,உபகரணங்களைப் பாதுகாப்பதற்கான இடவசதி குறைவு100

*தனியார் கல்வி நிலையத்தின் மோகத்திலிருந்து மாணவர்களை விடுபடச் செய்தல்.

* கலாசார பழக்கவழக்கங்களின் அதிக நம்பிக்கையினால் நிகழ்வுகளுக்கு மாணவர்கள் செல்வதால் பாடசாலைக்கு ஒழுங்காக வர முடியாமலிருத்தல்

இவ்வாறான சவால்களை வெற்றி கொண்டு சிறந்த முகாமைத்துவக் குழுக்களை அமைப்பதனூடாக பாடசாலையை வெற்றிகரமானதாக மாற்றியமைக்கலாம்.

## *பொன்மொழிகள்*



* சொர்க்கம் எங்கே என்று தேடி அலையாதே
அது உன் தாயின் காலடியில் தான்

* பெருமைக்கும் சிறுமைக்கும் அவர் தம்
செயலே கட்டளைக் கல்

* அதிகம் கற்றவனாயிரு ஆனால்
பிடிவாதக் காரனாக இராதே

* தாயை எவருடனும் ஒப்பிடுதல் கூடாது
ஏனெனில் அவள் ஒப்புவமை அற்றவள்

* எண்ணிய கருமம் கைகூடும் வரை
அயராது உழைத்திடு

* பணிவு என்பது வாழ்வின் சின்னமல்ல
உயர்ந்த ஒழுக்கத்தின் அறிகுறி

* ஆசை இருப்பவனிடம் அன்பும் அற்றலும்
நீண்டநாள் தங்குவதில்லை

* அறியாமையுடன் நூற்றாண்டுகள் வாழ்வதை விட
அறிவுடன் ஒரு நாள் வாழ்வது மேலானது

* பாராட்டுக்கு நாவின் ஈரம் மட்டும் போதாது
இதயத்தின் ஈரமும் வேண்டும்

**க.ஆரூரன்**
தரம் 3B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தும் எம் உள்ளத்தில் மறையாத எமது ஆசிரியர் அமரர் செல்வி பகவதி நவரத்தினம்



வலிவடக்குப் பகுதியிலே சிறந்த பாடசாலையாக விளங்கும் எமது பாடசாலையில் 21.01.2013 தொடக்கம் 06.12.2012வரை மாணவர்களின் கல்விக்காகத் தம்மை ஈடுபடுத்தி கல்விப் பணியினை செம்மையாக தன்னடக்கத்துடனும், பண்புடனும்,வழிகாட்டலுடனும், அரும்பெருஞ் சேவையாற்றிவர் அமரர் செல்வி ந. பகவதி ஆசிரியர் அவர்கள். கல்விச் செயற்பாடுகளல் மட்டுமல்ல பாட இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் மாணவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கிச் சிறப்பாகச் செயற்பட்டவர்.

இப்பாடசாலையில் சிறப்பாகச் செயற்பட்டுவரும் வேளையில் விதியின் கொடுமையால் நோய்வாயப்பட்டு தொடர்ந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெறவேண்டிய நிலை ஏற்பட்டது. உடல்நிலை கடுமையாகப் பாதிப்படைந்து 2012ம் ஆண்டு மார்கழி மாதம் அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்தியைக் கேட்டு நாம் அனைவரும் கலங்கி நின்றோம். "பிறந்தோர் அனைவரும் ஒருநாள் இறப்பது நியதி" என்னும் கூற்றுக்கமைய , மனதைத் தேற்றிக்கொண்டோம்.

பகவதி ஆசிரியர் இவ்வுலகை விட்டு நீங்கினாலும் அவரின் விருப்பத்திற் கமைய அவரது சகோதரர்கள் இப்பாடசாலையின் ஆங்கிலதின விழாவுக்காக ரூபா 50000 ஐ நிலையான வைப்பில் இட்டுள்ளனர். வருடா வருடம் அப் பணத்தின் வட்டிப்பணத்தில் ஆங்கிலதினவிழா நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

என்றும் பகவதி ஆசிரியர் அவர்களின் நினைவுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதா பிதா குரு தெய்வம்



பத்துத் திங்கள் நம்மைச் சுமந்து தனது இரத்தத்தைப் பாலாக்கி சீராட்டி வளரப்பவள் எம் அம்மா. அம்மாவை நாம் மாதா, தாய், அன்னை எனப் பல பெயர்கள் கொண்டு அழைக் கின்றோம்.

பிதாஆனவர் நம்மை வளர்த் தெடுப்பதோடு எமக்குக்கல்வி கற்பித்து எம்மை நல்வழிக்கும் இட்டுச் செல்கிறார். அம்மா, அப்பா எங்கள் எல்லோரினதும் கண்கண்ட தெய்வங்களாவர். மாதா, பிதா என்போர் எம்மை சிறந்த அறிவாளிகளாகவும், புத்திஜீவிகளாகவும் சிறந்த பண்பாளர்களாகவும் உலகில் எடுத்துக் காட்டுகின்றனர்.

அடுத்து எம்வாழ்விலே நாம் தாய்தந்தையருக்கு அடுத்த ஸ்தானத்திலே எமக்கு அறிவைப் பெருக்கி சிறந்த பழக்க வழக்கங்களை எம்முள் புகுத்தி எம் எண்ணங்களை உயரத்தும் எம ஆசான்கள் எமக்கு எம்வாழ்விலே ஒளியூட்டுகிறார்கள். நாம் இறைவனை துன்பங்கள் துயரங்கள் எம்மைச் சூழும்போது மன்றாடி வேண்டுகிறோம். இறைவன் என்றும் எமக்குத் துணையாகிறான்.

எம் ஒவ்வொருவரினதும் முன்னேற்றத்தின் போதும் உயர்ச்சியின் போதும் தோளோடு தோளாகத் துணையாக நின்று எம்மை நெறிப்படுத்துவதற்கு மாத,பிதா,குரு,தெய்வம் என்போர் உதவுகின்றனர். எனவே நாம் ஒவ்வொருவரும் எம் வெற்றியின் பின்னால் இருக்கும் எம் செல்வங்களாகிய மாதா, பிதா, குரு, தெய்வம் எல்லோருக்கும் தினங்கள் எடுத்து கொண்டாடி அவர்களை என்றென்றும் போற்றுவோமாக

சா.சாம்பவி

தரம் 2B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மா

அகரம் என்பது உயிராகும்
அதுவே எழுத்தில் முதலாகும்
அம்மா என்பதும் அதுவாகும்
அன்பு என்பதும் அம்மாவே
இன்பம் என்பதும் அம்மாவே
ஈதல் என்பதும் அவள் குணமே
உண்மை என்பதும் அம்மாவே
ஊக்கம் தன்னைத் தந்திடுவாள்
எண்ணம் எல்லாம் அவள் நினைவே
ஏணியாக வாழ்ந்திருந்தாள்
ஐயம் என்றும் அவளுக்கில்லை
ஒன்றே தெய்வம் அவள் தானே
ஔடதமாக வாழ்ந்திடுவாள்
அகரம் என்பதும் உயிராகும்
ஆகவே எழுத்தில் முதலாகும்
அம்மா என்பதும் அதுவாகும்.

**யோ.யாழிதன்**
தரம் 2A

## ஆசான்



பாடம் சொல்லித் தந்திடுவார் -நல்ல
பழக்கம் சொல்லித் தருவார்!
ஆட ஓட எல்லாம் - அவர்
அழகாய் காட்டி தருவார்

உணவைப் போல பாடம் - தினம்
ஊட்டும் எங்கள் ஆசான்!
கணமும் அவரைமறவோம் - இரு
கண்ணைப்போல மதிப்போம்!

வகுப்பறைக்குள் வருவார் - நாம்
வணக்கம் சொல்ல வேண்டும்
சுகமாய் பாடம் எல்லாம் - அவர்
சுவையாய் சொல்லித் தருவாள்!

வீட்டுத் தீபம் போல - அவர்
வீற்றிருப்பார் வகுப்பில்!
காட்டும் அவர் வழியில் - நாம்
கவனமாகத் தொடர்வோம்

**சி.ரேனுயன்**
தரம் 2A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதியோரை மதித்தல்



*முதியோர்கள் எமது நாட்டின் சொத்துக்கள் எனப் போற்றப்படுகின்றனர்.

*அவர்கள் தமது வாழ்க்கையில் பல அனுபவங்களைப் பெற்று எம்மை வழிநடத்துகிறார்கள்.

*முதியோரின் அறிவுரையைக் கேட்டு நாம் நல்வழியில் நடந்து அவர்களை மகிழ்விக்க வேண்டும்.

*சிறியவர்களாகிய நாம் முதியோரைக் கனம் பண்ணுதல் வேண்டும்.

*நாமும் ஒருநாள் முதியவராவோம் என்ற எண்ணத்துடன் பண்பாகப் பழகுதல் வேண்டும்.

*முதியோரின் தேவைகள், விருப்புக்களை நிறைவேற்றி அவர்களின் ஆசிகளைப் பெற்று வாழ்வது சிறப்பாகும்

.* முதியோரை மதித்தல் ஒரு சிறந்த நற்பழக்கம் ஆகும்.

கோ.ரதுரிகா
தரம்3B

## விடுகதைகள்

* கண்ணுக்குத் தெரியாதவன் உயிருக்கு உகந்தவன் அவன் யார்?
காற்று

*தலையைச் சீவினால் தாளிலே மேய்வான் அவன் யார்?
பென்சில்

*சுற்றுவது தெரியாது ஆனால் சுற்றிக் கொண்டிருப்பான் அவன் யார்?
உலகம்

*வெள்ளை மாளிகைக்குள் மஞ்சள் புதையல் அது என்ன?
முட்டை

*கழற்றிய சட்டையைத் திரும்பப் போடமாட்டா ன் அவன் யார்?
பாம்பு



*தலையைச் சீவினால் தாகம் தீர்ப்பான்அவன் யார்?
இளநீர்

*உரசினாலேஉயிரை விடுவான் அவன்யார்?
தீக்குச்சி

*பச்சை வீட்டுக்கு சிவப்பு வாசல் அது என்ன?
கிளி

*பழகினால் மறக்காதவன் பயந்தோரை விடாதவன் அவன்யார்?
நாய்

இ.நிவேதிகா
தரம் 2B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது அறிவு



01. இறக்கையை மடக்க முடியாத பூச்சி எது?
தட்டாம்பூச்சி

02. குட்டிகளைத் தனது வயிற்றிலிருக்கும் பையில் வைத்திருக்கும் விலங்கு எது?
கங்காரு

03. பூச்சியின் வாழ்க்கை வட்டத்தைத் தருக?
முட்டை ⟶ குடம்பி ⟶ கூட்டுப்புழு ⟶ நிறையுடலி

04. நேராக மட்டும் பறக்கக் கூடிய பறவை எது?
காகம்

05. நாக்கில்லாத மிருகம் எது?
முதலை

06. பாலைவனக் கப்பல் என சிறப்பிக்கப்படும் விலங்கு எது?
ஒட்டகம்

07. மழை வருவதை முற் கூட்டியே அறியக்கூடிய பறவை எது?
மயில்

08. புயல் வருவதை முற்கூட்டியே அறியக்கூடிய பிராணி எது?
யானை

09. மீன்களின் சுவாச உறுப்பு எது?
பூக்கள்

10. நான்கு முழங்கால்களைக் கொண்ட மிருகம் எது?
யானை.

**து.திஸ்னுகா**
5B



## எனது குடும்பம்

எனது குடும்பம் ஒரு
சந்தோசமான குடும்பம்.
எனது குடும்பத்தில்
நானும், அம்மாவும்,
அப்பாவும், தங்கையும்
இருக்கின்றோம். நான்
எனது குடும்பத்தை
நேசிக்கிறேன்.

**து.திலக்ஷினா**
தரம் 1A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது செல்லப்பிராணி



நான் அன்போடு வளர்க்கும் பிராணி சிராணி. அதுவே என் செல்லப்பிராணி. பால் போன்ற வெள்ளை நிறம். பஞ்சு போன்ற மெல்லிய உடல், பார்க்க ஆனந்தம் அளிக்கும் வண்ணத் தோற்றம். என்னைக் கண்டதும் சுற்றி ஓடிவரும் என் அன்புப் பூனைக்குட்டி.

எனக்கு இதன்மேல் கொள்ளை ஆசை. பெரிய கண்களை உருட்டிஅது என்னைப் பார்க்கும். நான் அதற்குப் பாலும் சோறும் உண்ணக் கொடுப்பேன். நான் உணவு உண்ணும் போதுஎன்னோடு அதுவும் அருகில் இருந்து சாப்பிடும். சாப்பிட்டு முடிந்ததும் என் மடியில் பச்சிளங்குழந்தை போல அது படுத்து உறங்கும்.

நான் பாடசாலை சென்று விட்டு வீடு வந்து வாசற்படியில் ஏறும் போது என்னை வரவேற்க அம்மாவுடன் என் சிராணியும் வந்து நிற்கும். மாலை வேளைகளில் நானும் சிராணியும் தோட்டத்திற்குச் செல்வோம். பந்தை உருட்டி விளையாடுவோம். சிராணி கட்டையான தனது கால்களினால் பந்தை உருட்டி விளையாடுவது பாரக்க ஆனந்தமாயிருக்கும்.

சிராணி தன் கால்நகங்களை மரத்திலே தேய்த்து மரத்திலே பாய்ந்து பாய்ந்து ஏறும். பின் துள்ளி துள்ளி என்னிடம் ஓடிவரும். அதன் செய்கைகளைப் பார்ப்பதில் என்னால் என்றுமே மறக்க முடியாது

**ப.நர்மதன்**
தரம் :5B

## மழை

இயற்கையின் கொடை மழை.
மழை பெய்வதால் மண் குளிரும்.
தாவரங்கள் செழிப்பாக வளரும்.
மழை பெய்வதால் விவசாயம் செய்கிறார்கள்.
மரங்கள் நடுவோம். நல்ல மழையைப் பெறுவோம்.

**சி.சிருஸ்ரிகா,**
தரம் :1A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறுமுகநாவலர்



இவர் 1822ம் ஆண்டு மார்கழிமாதம் 18ம் திகதி கந்தப்பிள்ளை சிவகாமி தம்பதிகளுக்கு மகனாக அவதரித்தார். இவரின் இளமைப் பெயர் ஆறுமுகம் ஆகும். சைவத்தமிழ் மக்களிடையே விழிப்புணர்ச்சியையும், மறுமலர்ச்சியையும் ஏற்படுத்தியவர் இவர். பல்வேறு மொழிகளிலும் தேர்ச்சி உடையவராக விளங்கிய நாவலர் பெருமான் பலவகையான நூல்களை ஆக்கியுள்ளார். தனது ஆத்மீக பலத்தினால் சைவத்தையும் தமிழையும் வளர்த்து சைவத்தமிழ் உலகை நன்னனிலைப்படுத்தினார்

1847ம் ஆண்டு மார்கழி மாதம் 18ம் திகதி வண்ணார் பண்ணை வைத்தீஸ்வரர் ஆலயத்தில் தனது சைவப்பிரசங்கப் பணியை ஆரம்பித்தார். 1848ம் ஆண்டு சைவப்பிள்ளைகள் கல்விகற்பதற்க்காக வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலையைத் தோற்றுவித்தார். இவரது பணிகளின் சிறப்பை உணர்ந்த திருவாடுதுறை ஆதீனம் இவருக்கு நாவலர் என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்தது.

இதனைவிட சென்னையிலும் யாழ்ப்பாணத்திலும் அச்சுக்கூடம் நிறுவி பலநூல்களை வெளியிட்டார். இவர் 52 நூல்களை எழுதியும் பதிப்பித்தும் வெளியிட்டார்

இவ்வாறு நாவலரின் பணிகள் பன்முகப்பட்டவை. சைவத்தமிழ் மக்களுக்கு வழிகாட்டியாக விளங்கிய நாவலர்பெருமான் 1879ம் ஆண்டு கார்த்திகை மாதம் 2ம் திகதி இறைவனடி அடைந்தார்.

செல்வி சஹானா சிவகுமார்
தரம் 4B

## டெங்குக் காய்ச்சலை தவிர்த்துக் கொள்வோம்



*டெங்குக்காய்ச்சலைப் பரப்பும் நுளம்புகளை பரவாமல் தடுக்க வேண்டும்.

* அதற்காக அவை பரவும் இடங்களைக் கண்டறிய வேண்டும்.

* வெற்றுப் பாத்திரங்களில் நீர் தேங்காமல் குழிதோண்டிப் புதைக்க வேண்டும்.

* வீட்டுச்சூழலை தினமும் சுத்தம் செய்தல் அவசியமாகும்.

* பொதுச்சுகாதாரப் பரிசோதகருக்கு அறிவித்து நுளம்பு அழிப்பு மருந்துகள் விசுறுதல் சாலச் சிறந்தது.

* உயிர் அபத்தை விளைவிக்கும் டெங்கை ஒழிக்க உழைப்பது மாணவர்களாகிய எமது கடமையாகும்.

* டெங்கை ஒழிப்போம் டெங்குக்காய்ச்சலை தவிர்ப்போம்

சு.தர்னிஸ்
தரம் 3A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழமொழிகள்



01. அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சை
02. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
03.அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம்
04. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு
05. ஆழமறியாது காலைவிடாதே
06. ஆலயம் தொழுவது சாலவும் நன்று
07. ஆத்திரக்காரனுக்குப் புத்தி மத்திமம்
08. ஆசை வெட்கம் அறியாது
09. ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு
10. ஆனைக்கும் அடிசறுக்கும்
11. ஆனை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே
12. இக்கரை மாட்டிற்கு அக்கரை பச்சை
13. இடுவது பிச்சை பெறுவது மோட்சம்
14. இரக்கப் போனாலும் சிறக்கப் போ
15. இளங்கன்று பயமறியாது.
16. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து
17. இரத்தபாசம் விடாது
18. ஈயார் தேட்டை தீயார் கொள்வார்
19. ஈர நாவிற்கு எலும்பில்லை
20. உண்மை சொல்லிக் கெட்டவரில்லை
21. உப்பிட்டவரை உள்ளளவும் நினை
22. உண்டால் தீரும் பசி கண்டால் தீருமா?
23. உருவு கண்டு எள்ளாதே
24. உலை வாயை மூடினாலும் ஊர் வாயை மூடலாமா?
25. ஊண் அற்ற போது உடலற்றது
26. எலி அழுதால் பூனை விடுமா
27. எலிக்குத் திண்டாட்டம் பூனைக்குக் கொண்டாட்டம்
28. எழுத்து இல்லாதவர் கழுத்து இல்லாதவர்
29. எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆவான்
30. எழுதாக் கடன் அழுதால் தீருமா?
31. எடுப்பது பிச்சை ஏறுவது பல்லக்கு
32. எறும்பு ஊரக் கல்லுந்தேயும்
33. ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது
34. ஏற்றம் உண்டானால் இறக்கம் உண்டு
35. ஒரு காசு பேணின் இரு காசு தேறும்
36. ஒரு கை தட்டினால் ஓசை எழும்புமா?

அமிர்தினி அகிலேஸ்வரக்குருக்கள்
தரம் 4B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழைப்படி



தமிழைப் படி - பாப்பா
தமிழைப் படி
தமிழ் என்பது
அமிழ் துண்பது
அடுத்த படி - நீ
ஆங்கிலம் படி
படித்தபடி - நல்ல
பாதை பிடி
இன்னும் படி - நீ
இங்கும் படி
மின்னும் படி - நீ
மேலே படி
மொழிப் படியில் - தமிழ்
முதற் படியாம்
வழிப்படியே - நீ
வைப்பாய் அடி

**சி. டன்சிகன்**
1A

## எனது ஆசானே



ஆசானே ஆசானே
அன்பான ஆசானே
கணினியொரு விளையாட்டு
கற்றுத் தந்த ஆசானே
பண்போடு பாடல் பல
பாங்காய் கற்றுத் தந்த
ஆசானே ஆசானே
போட்டிகள் பல கண்டு
கழிப்புடனே வென்றிட
அறிவு தனை ஊட்டி
தந்த எங்கள் ஆசானே!
வாழிய வாழிய ஆசானே!
என்றும் என்றும் வாழியவே

**நா.ஜனனிகா**
*தரம் 5B*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய்

தாய் நல்லவள் - எமக்கு
அன்பு காட்டுபவள் - நல்லதை
கெட்டதை பிரித்தறிய சொல்லித் தருபவள்
தாங்கள் தாயின் உயிரைப்
போன்றவர்கள் அம்மா பாடுவார்
முழு உலகமும் அருகே இருக்கிறது
தாய் அது அருகில் இருப்பதனால்!

**ற.லனுசியா**
5B

## பழங்களின் மருத்துவ குணங்கள்

01. செவ்வாழைப்பழம்:
கல்லீரல் வீக்கம், மூத்திரவியாதியை குணமாக்கும்.
02. பச்சை வாழைப்பழம்:
குளிர்ச்சியைக் கொடுக்கும். கண்ணிற்கும், உடல் வலுவிற்கும் நல்லது.
03. நேத்திரவாழைப்பழம்:
இரும்புச் சத்தினை உடலுக்குக் கொடுக்கும்.
04. அப்பிள்பழம்:
வயிற்றுப்போக்கு, குன்மம், சீதபேதி, இதயநோய்கள், இரத்த அழுத்தம் ஆகியவைகளுக்கு நல்லது.
05. நாவல்பழம்:
நீரிழிவை நீக்கும், வாய்புண், வயிற்றுப்புண் நீக்கும்.
06. மாம்பழம்:
இரத்தஅழுத்தம் சீராகும்
07. கொய்யாப்பழம்:
உடல் வளர்ச்சியும், எலும்புகள் பலம்பெறும்.
08. பப்பாளிப்பழம்:
மூலநோய், சர்க்கரை நோய் போன்றவற்றுக்கு சிறந்தது.
09. திராட்சைப்பழம்:
ஒருவயது குழந்தைகளின் மலக்கட்டு, சளி, காய்ச்சல் குணமாக திராட்சை பழங்களை பிழிந்து சாறெடுத்து ஒருதேக்கரண்டி அளவு எடுத்து தினம் இருவேளை கொடுத்தால் இவ்நோய்கள் குணமாகும்.

**கே. வேணி**
தரம் 2B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தெய்வங்கள்

அன்னையும் பிதாவும் கண்கண்ட தெய்வங்கள்
ஆண்டவன் தந்த அருங்கொடைகள்
இன்பம் தரும் நற்சுடர்கள்
ஈன்றெடுத்த எம் உயிர்கள்



உத்தமனாய் நான் வாழ
ஊக்கமூட்டிடும் உந்தல்கள்
எப்போதும் அன்பைப் பொழியும்
ஏற்றமிகு எம் சுடர்கள்

ஐயம் திரிபற வாழவழிகாட்டும்
ஒன்றித்த வாழ்வுக்கு உயர்வளித்து
ஓயாது உழைக்கும் உத்தமர்கள்
ஔவையின் அறிவுரையில்
வாழவைக்கும் தெய்வங்கள்

க.ரக்ஷிதன்
தரம் 1A

### "பிராணிகளிடம் காணப்படக் கூடிய நற்பண்புகள்"



- ❖ அதிகாலையில் எழுந்திருத்தல் -சேவல், காகம்
- ❖ சுயசுத்தம் பேணுதல் - பூனை, காகம்
- ❖ தலைவனை பின்பற்றுதல் - மாடு, யானை
- ❖ குழுவாகச்செயற்படுதல் - தேனீ, எறும்பு, குளவி, கறையான்
- ❖ தேவையானதை சேமித்தல் - தேனீ, எறும்பு
- ❖ தாய்ப்பாசம் கொண்டது - மாடு, ஆடு, கோழி, காகம்
- ❖ கட்டளைக்கு பணிதல் - மாடு, ஆடு, குதிரை, யானை
- ❖ அமைதியான சுபாவம் - புறா
- ❖ சுறுசுறுப்பு, ஒற்றுமையுடையவை - தேனீ, எறும்பு

டு.அபிநயா
தரம் - 1A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு

01. உலகில் முதன்முதலாக சுப்பர்மார்க்கெட் எனும் வியாபாரமுறை நடைபெற்றநாடு
    பிரான்ஸ்



02. சூரியன் நடுஇரவில் உதிக்கும்நாடு
    நோர்வே
03. அரிசியை முதன்முதலில் பயிரிட்ட நாடு
    இந்தியா
04. மூளை இல்லாத ஒரே உயிரினம்
    நட்சத்திரமீன்
05. உலகில் தட்டையான நாடு
    மாலைதீவு
06. பப்பாளிப்பழத்தைத் தேசிய சின்னமாகக் கொண்ட நாடு
    மலேசியா
07. பகவத்கீதை நூலுக்கு தடை விதித்த நாடு
    பாகிஸ்தான்
08. புகைபிடிக்காதவர்களை அமைச்சர்களாக ஏற்கும் நாடு
    வித்துவேனியா
09. 88 நாட்களுக்குத் தொடர்ந்தும் பகலாக இருக்கும் நாடு
    நோர்வே
10. ஆணும் பெண்ணும் ஒரே அலுவலகத்தில் வேலைசெய்ய அனுமதிக்காத நாடு
    சவுதிஅரேபியா
11. இந்தியாவின் தங்கநதி எனப்போற்றப்படும் நதி
    காவிரிநதி
12. பொதுவழங்கி என்று அழைக்கப்படும் குருதிவகை
    "O"வகை குருதி
13. வாலிபர் தினம் கொண்டாடப்படும் நாடு
    ஜப்பான்
14. அதிக அளவில் சர்வதேச நேரம் கொண்டாடப்படும் நாடு
    ரஷ்யா
15. தமிழில் முதன் முதலில் தோன்றிய குழந்தைகள் பத்திரிகை
    பாலதீபிகை (1840)

சுந்தரராஜ் மாதுளன்
தரம்4B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Our class Teacher



* Miss Saratha is our class Teacher.

* She is very simple in her dress.

* She is very kind and patient.

* But she is strict in discipline.

* She is regular and punctual

* She makes are love the lesson.

* she is never canes us.

* We love my class teacher.

***K.Shanuja***
Grade -5B

## MY FLOWER GARDEN



I have a flower garden. It is in front of my house. It is small and beautiful. I have roses, lilies, jasmine, and sunflower in my garden. My garden is very colourful.

The colours smile at me. The sweet smell greets me.I water my garden in the morning and evening.

I pick flower and take them to the temple. My mother and grandmother pick flower for parties and weddings. I work in my garden every day. It is a good hobby.

***T. Mathumila***
Grade 5B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நிரந்தர ஆசிரியர்கள்.

*. திரு.சி.சிவகுமாரன்
B.A .Spc Tr (Tamil),Dip.in Edu (MERIT) M.Ed,SLPS-3
*. திருமதி. பா.தவக்குமார் (பிரதிஅதிபர்)
பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி SLTS-2-1
*. திருமதி. யோ சூரியகுமார்
பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி SLTS-2-1
*. திருமதி .சி.பரமசிவம்
B.A. பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி SLTS-2-1
*. திருமதி. உ.சிவநாதன்
B.A .Dip.in.Edu SLTS -2-II
*. செல்வி. ந.சாரதா
பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி SLTS-2-II
*. திருமதி. சு.சிவலிங்கம்
பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி SLTS-2-II
*. திருமதி. அ. அருந்தவநாதன்
பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி SLTS-2-II
*. திருமதி. கா.சிவரூபன்
பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி SLTS-2-II
*. திருமதி.த. பிறேம்குமார்.
பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி SLTS-2-II
*. திருமதி.ய.சத்தியமூர்த்தி.
தொழில் நிர்வாகமானி B.B.A

### கல்விசாரா ஊழியர்

*.திரு.ச.மதனமோகன்

### கல்வியல் கல்லூரி ஆசிரியர்கள்

*. செல்வி.சௌ.பிரதர்சனா
*.செல்வி.பா. பாமினி
*. செல்வி. இ.சுஜா

### எமது பாடசாலைக்கு உதவும்கல்வியல் கல்லூரி ஆசிரியர்கள்

*.திரு.சதீஸ்
*.செல்வி.கு.சிந்துஜா

### பழைய மாணவர்சங்க நிதியில் உதவும் ஆசிரியர்கள்

*.திரு.க.இந்திரசிங்கம் ( தரம் 1,2 ஆங்கில ஆசிரியர்)
*. செல்வி. தி. அன்சலா (கணினி ஆசிரியர்)
*. செல்வி. இ.சங்கீதா (அலுவலக உதவியாளர்)

### 2014ல் ஏழு வருட இடமாற்றத்தில் சென்ற ஆசிரியர்கள

*.திருமதி. ச. நகுலேஸ்வரன்
*. செல்வி. நா. திபாஜினி
*. திருமதி.த.சிவகுமார்
*. திருமதி. யோ.வ. தயாளன்
*. திருமதி. த. ஜெயரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தில் அன்று தொடக்கம் இன்று வரை புகழ்பூத்த சிற்பிகளாக விளங்கிய அதிபர்களின் சேவைக்கால விபரம் (1832 - 2015)

| இல | அதிபர்களின் பெயர்கள் | தொடக்கம் - வரை | சேவைக் காலம் | | |
|---|---|---|---|---|---|
| | | | ஆண்டு | மாதம் | நாள் |
| 01 | திரு.நா.தில்லையம்பலம் | | 94 | | |
| 02 | திரு.எஸ்.அம்பலவாணர் | | | | |
| 03 | திரு.என்.அமிர்தவாசகம் | 13.12.26 - 31.10.35 | 08 | 10 | 18 |
| 04 | திரு.அ.த.வைத்திலிங்கம் | 01.11.35 - 31.12.45 | 10 | 01 | 30 |
| 05 | திரு.ஜே.தேவசகாஜன் | 01.01.46 - 31.12.70 | 25 | 00 | 00 |
| 06 | திரு.த.இராஜரட்ணம் | 01.01.71 - 31.12.71 | 01 | 00 | 00 |
| 07 | திரு.சிசுப்பிரமணியம் | 01.01.72 - 31.12.78 | 07 | 00 | 00 |
| 08 | திரு.ச.வேலாயுதபுள்ளை | 01.01.79 - 20.01.86 | 07 | 00 | 19 |
| 09 | திரு.மு.அருளையா | 21.01.86 - 31.01.96 | 10 | 00 | 19 |
| 10 | திருமதி.அ.ஸ்ரீபுஸ்பநாதன் | - | - | 01 | - |
| 11 | செல்வி.சி.கெங்காமலர்தேவி | 01.03.96 - 13.12.04 | 08 | 09 | 12 |
| 12 | திரு.த.சிவானந்தராசா | 14.12.04 - 15.08.05 | - | 08 | 01 |
| 13 | திருமதி.பா.தவக்குமார் (பிரதி அதிபர்) | 16.08.05 - 31.08.05 | - | - | 15 |
| 14 | திரு.மா.ஆனந்தக்குமார் | 01.09.05 - 17.11.11 | 06 | 02 | 16 |
| 15 | திருமதி.பா.தவக்குமார் | 18.11.11 - 26.01.12 | - | 02 | 08 |
| 17 | திரு சி.சிவகுமாரன் | 27.01.12 - | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

### 2008

| | |
|---|---|
| 01. சி.உதர்ஷன் | 147 |
| 02. மு.ஜெனீபராஜ் | 142 |
| 03. ச.கிஸ்ணுஜன் | 134 |
| 04. சி.மதுவினா | 133 |
| 05. ர.நக்ஸலா | 131 |
| 06. மோ.ஆரபி | 130 |
| 07. சி.பிரியங்கன் | 125 |
| 08. வி.துஷாங்கன் | 125 |
| 09. பா.வரகுணன் | 125 |
| 10. ர.மதுஷா | 125 |
| 11. ச.சதூஷன் | 120 |
| 12. பொ.உசாந்தினி | 116 |

### 2009

| | |
|---|---|
| 01. வி.யனுசன் | 162 |
| 02. க.கயவரன் | 162 |
| 03. ர.மாதங்கி | 143 |
| 04. மு.வானதி | 140 |

### 2010

| | |
|---|---|
| 01. தே.யூபீரதன் | 177 |
| 02. க.சஜிவரன் | 169 |
| 03. ஆ.இலாவிண்யா | 160 |
| 04. ர.சங்கவி | 152 |
| 05. மு.நினுஜன் | 147 |
| 06. ஜெ.சாகித்யா | 147 |

### 2011

| | |
|---|---|
| 01. தே.யூபீரதன் | 177 |
| 02. த.சங்கவி | 175 |
| 03. சா.கார்த்திகா | 175 |
| 04. ப.நிவேதன் | 174 |
| 05. த.சங்கீதன் | 168 |
| 06. ஆ.கம்சவர்த்தனி | 164 |
| 07. யோ.தீபிகா | 157 |
| 08. சி.சிவசங்கர் | 153 |
| 09. ஆ.வர்னுஜா | 151 |

### 2012

| | |
|---|---|
| 01. ர.துஷாரா | 170 |
| 02. ற.டல்சிகா | 156 |

### 2013

| | |
|---|---|
| 01. க.கீர்த்திகன் | 176 |
| 02. யோ.யோகிதன் | 170 |
| 03. ச.அகிம்சன் | 169 |
| 04. த.டேனசா | 168 |
| 05. சி.சோவிகா | 168 |
| 06. த.பிரிதா | 166 |
| 07. ட.யூயின்அரவிந்தன் | 159 |
| 08. ற.ருசானி | 159 |

### 2014

| | |
|---|---|
| 01. ர.கஜீபன் | 178 |
| 02. ஜெ.சிவப்பிரியா | 174 |
| 03. ந.யதீஷா | 173 |
| 04. த.டனுஸ்ரன் | 169 |
| 05. ர.சஜீந் | 169 |
| 06. யு.யுவிஷ்ரன் | 169 |
| 07. செ.தேனுயன் | 168 |
| 08. ர.சஜீனா | 168 |
| 09. ஜெ.சேர்ன்சச்சித் | 165 |
| 10. இ.லக்கீர்த்தா | 165 |
| 11. ஜெ.சாரங்கன் | 163 |
| 12. கி.யன்சியா | 161 |
| 13. ஜெ.நிலவன் | 160 |
| 14. சி.சஞ்சய் | 160 |
| 15. ஶ்ரீ.சுபிஷா | 159 |
| 16. சி.சஞ்சய் | 159 |
| 17. ஆ. கபத்திரா | 158 |
| 18. த. சர்மினி | 157 |
| 19. சி.விவானுஜன் | 156 |
| 20. த.தர்சிகா | 154 |
| 21. ர.துஷாணன் | 152 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறு 1997 -2014

| ஆண்டு | தோற்றிய மாணவர் தொகை | சித்தியடைந்த மாணவர் தொகை | அதிகூடிய புள்ளி | சித்தியடைந்த வீதம் | 70 புள்ளிக்கு மேல் பெற்றோர் | 100க்கு மேல் பெற்றோர் | 100 க்கு மேல் பெறறோர் வீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1987 | 17 | 01 | 102 | 6% | - | - | 6% |
| 1998 | 31 | 01 | 121 | 3% | - | 02 | 6% |
| 1999 | 25 | 03 | 160 | 12% | - | 02 | 16% |
| 2000 | 21 | 04 | 162 | 19% | - | 04 | 24% |
| 2001 | 23 | 02 | 124 | 09% | - | 02 | 9% |
| 2002 | 30 | 02 | 120 | 07% | - | 06 | 20% |
| 2003 | 48 | 04 | 134 | 08% | - | 07 | 14% |
| 2004 | 35 | - | - | - | - | 03 | 9% |
| 2005 | 45 | 03 | 140 | 07% | - | 08 | 18% |
| 2006 | 47 | 05 | 158 | 11% | - | 16 | 34% |
| 2007 | 47 | 06 | 167 | 13% | - | 16 | 34% |
| 2008 | 42 | 12 | 147 | 28.5% | - | 17 | 40% |
| 2009 | 38 | 04 | 162 | 10.5% | - | 20 | 52.6% |
| 20020 | 50 | 06 | 177 | 12% | - | 21 | 42% |
| 2011 | 52 | 09 | 183 | 17.3% | 03 | 29 | 55% |
| 2012 | 49 | 02 | 170 | 4% | 10 | 25 | 51% |
| 2013 | 49 | 08 | 176 | 16.32% | 10 | 34 | 70% |
| 2014 | 69 | 21 | 178 | 24.63% | 14 | 53 | 59.42% |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தினப் போட்டி

| | கோட்ட | வலய | | கோட்ட | வலய |
|---|---|---|---|---|---|
| 2008<br>பேச்சு<br>எ.சாருஜன் | 1 | 2 | 2013<br>இசையும் அசைவும்<br>ர.ருஷானி | 1 | - |
| ஆக்கத்திறன் வெளிப்பாடு<br>ச.கிஸ்னுஜன் | 1 | 2 | பாவேதல்<br>சி.சிவானுஸன் | 3 | - |
| பாவோதல்<br>சி.மதுஷனா | 2 | - | பேச்சு<br>பிரிதா | 2 | - |
| 2010<br>பாவோதல்<br>யோ.கயல்விழி | 2 | - | 2014<br>பாவோதல்<br>தரணிகா | 3 | - |
| கட்டுரை - எழுத்தாக்கம்<br>க.சஜிவரன் | 1 | - | பேச்சு<br>ஜெ.சிவப்பிரியா | 2 | - |
| 2011<br>எழுத்தாக்கம்<br>த.சங்கீதன் | 2 | - | ஆக்கத்திறன் வெளிப்பாடு<br>த.டனிஸ்ரன் | 2 | 3 |
| வாசிப்பு<br>த.சங்கவி | 3 | - | | | |
| பாவோதல்<br>ஜெ.லிதுர்ஷிகா | 2 | - | | | |
| 2012<br>இசையும் அசைவும்<br>கி. டண்சிகா | 2 | - | | | |
| பாவோதல்<br>இ.துஷாரா | 3 | - | | | |
| பேச்சு<br>ஜெ.லிதுர்ஷிகா | 3 | - | | | |
| கதைகூறல் (ஆ.தி.வெ)<br>த.டேனுஷா | | | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | கோட்ட | வலய | | கோட்ட | வலய |
|---|---|---|---|---|---|
| 2012 | | | சொல்வதெழுதல் | | |
| உறுப்பெழுத்து | | | தரம் 3 | | |
| தரம் 3 | | | ஜெ.நிலவன் | 1 | - |
| த.சர்மினி | 1 | - | சி.சஞ்சாய் | 4 | 3 |
| த.தரணிகா | 2 | 2 | தரம் 4 | | |
| தரம் 4 | | | சி.சோபிகா | 5 | - |
| சி.சோபிகா | 2 | 2 | | | |
| தரம் 5 | 3 | - | 2013 | | |
| | | | உறுப்பெழுத்து | | |
| கவிதை | | | தரம் 4 | | |
| தரம் 3 | | | தரணிகா | 1 | 1 |
| ஜெ.சேர்ன் சச்சித் | 1 | - | தரம் 5 | | |
| தரம் 5 | | | சி.சோபிகா | 1 | 3 |
| ர.துஷாரா | 3 | - | | | |
| | | | கவிதை | | |
| வாசிப்பு | | | தரம் 4 | | |
| தரம் 3 | | | ஜெ.சேர்ன் சச்சித் | 3 | - |
| ஜெ.நிலவன் | 2 | - | தரம் 5 | | |
| ஜெ.சேர்ன் சச்சித் | 3 | - | த.டேனுஷா | 1 | - |
| | | | | | |
| தரம் 4 | | | வாசிப்பு | | |
| ட.த.யூ.அரவிந்தன் | 1 | - | தரம் 3 | | |
| | | | கி.சானுஜா | 2 | - |
| குழுப்பாடல் | | | தரம் 5 | | |
| தரம் 1-2 | 2 | - | க.கீர்த்திகன் | 2 | - |
| தரம் 3-5 | 1 | - | | | |
| | | | குழுப்பாடல் | | |
| நாடகம் | | | தரம் 1-2 | 3 | |
| தரம் 3-5 | 1 | 3 | | | |
| | | | நாடகம் | | |
| குழுப்பாடல் | | | தரம் | 1 | 2 |
| தரம் 2 | 2 | 3 | | | |
| தரம் 3 | 2 | - | குழுப்பாடல் | | |
| தரம் 4 | 2 | - | தரம் 2 | 2 | 2 |
| | | | தரம் 3 | 2 | - |
| தனிப்பாடல் | | | தரம் 4 | 3 | - |
| தரம் 2 | | | | | |
| ஜெ.எழிலினி | 3 | - | சொல்வதெழுதல் | | |
| தரம் 4 | | | தரம் 4 | | |
| ச.தருணிகா | | | ஜெ.நிலவன் | 1 | - |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | கோட்ட | வலய | | கோட்ட | வலய |
|---|---|---|---|---|---|
| ர.கஜீபன் | 4 | - | சொல்வதெழுதல் | | |
| சி.சஞ்சய் | 5 | - | தரம் 3 | | |
| தரம் 5 | | | மாதுளன் | 1 | - |
| சி.சோபிகா | | | சந்தோஸ் | 3 | - |
| நாடகம் | 1 | 2 | நாடகம் | 1 | - |
| | | | குழுப்பாடல் | | |
| 2014 | | | தரம் 2 | 1 | - |
| உறுப்பெழுத்து | | | தரம் 3 | 3 | - |
| தரம் 5 | | | தரம் 4 | 3 | - |
| த.தரணிகா | 1 | - | | | |

## ஆங்கில தினப் போட்டிகள்

| | கோட்ட | வலய | | கோட்ட | வலய |
|---|---|---|---|---|---|
| 2008 | | | தனிப்பாடல் | | |
| தனிப்பாடல் | | | தரம் 2 | | |
| தரம் | | | ஜெ.விதுர்ஷிகா | 3 | - |
| த. சங்கவி | 1 | 2 | தரம் 3 | | |
| | | | த.சங்கவி | 1 | 1 |
| குழுப்பாடல் | | | குழுப்பாடல் | | |
| தரம் 2 | 3 | - | தரம் 2 | 2 | 2 |
| தரம் 3 | 3 | - | தரம் 3 | 3 | - |
| தனிப்பாடல் | | | தரம் 4 | 3 | - |
| தரம் | | | ஆங். சொல்வதெழுதல் | | |
| ஜெ.ஜெனார்த்தனி | 3 | - | தரம் 3 | | |
| கவிதை | | | த.சங்கவி | 1 | - |
| ர.மாதங்கி | 1 | 3 | மோ.கயல்விழி | 4 | - |
| கு.ஆகாஸ் | 3 | - | தரம் 4 | | |
| மோ.ஆரபி | 3 | - | ஆ.இலாவன்யா | 2 | - |
| சொல்வதெழுதல் | | | ஜெ.சாகித்யா | 4 | - |
| ஆ.இலாவன்யா | 1 | | தரம் 5 | 1 | - |
| | | | க.கஜவரன் | 1 | - |
| 2009 | | | 2010 | | |
| ஆங்கிலம் உறுப்பெழுத்து | | | உறுப்பெழுத்து | | |
| தரம் 3 | | | தரம் 3 | | |
| த.சங்கவி | 2 | 1 | ற.டல்சிகா | 2 | 3 |
| தரம் 5 | | | தரம் 4 | | |
| மு.வானதி | 3 | - | த.சங்கவி | 1 | 2 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | கோட்ட | வலய | | கோட்ட | வலய |
|---|---|---|---|---|---|
| கவிதை | | | தரம் 5 | | |
| தரம் 4 | | | த.சங்கவி | 2 | - |
| மோ.கயல்விழி | 3 | - | மோ.கயல்விழி | 3 | - |
| வாசிப்பு | | | உறுப்பெழுத்து | | |
| தரம் 4 | | | தரம் 3 | | |
| மோ.கயல்விழி | 1 | - | த.டேனுஜா | 1 | - |
| த.சங்கீதன் | 3 | - | தரம் 5 | | |
| தரம் 5 | | | த.சங்கவி | 2 | |
| ஜெ.சாகித்தியா | 2 | - | | | |
| | | | வாசிப்பு | | |
| குழுப்பாடல் | | | தரம் 3 | | |
| தரம் 1-2 | 1 | 3 | இ.கார்த்தாயினி | 1 | - |
| தரம் 3-5 | 2 | - | க.கீர்த்திகன் | 3 | - |
| | | | தரம் 5 | | |
| வாய்மொழி ஆங்கி.போட்டி | | | மோ.கயல்விழி | 1 | - |
| தனிப்பாடல் | | | த.சங்கீதன் | 2 | - |
| தரம் 2 | | | | | |
| இ.கார்த்திகாயினி | 2 | - | அபிநயப்பாடல் | | |
| குழுப்பாடல் | | | தரம் 1-2 | 3 | - |
| தரம் 2 | 1 | - | தரம் 3-5 | 1 | - |
| தரம் 3 | 2 | - | | | |
| தரம் 4 | 1 | - | சொல்வதெழுதல் | | |
| | | | தரம் 3 | | |
| சோல்வதெழுதல் | | | சி.சோபிகா | 3 | 3 |
| தரம் 3 | | | தரம் 5 | | |
| தே.அபிஷாயினி | 2 | - | ஆ.கம்ஷவர்த்தனி | 1 | 2 |
| ற.டல்சிகா | 3 | - | த.சங்கவி | 2 | - |
| தரம் 4 | | | த.சங்கீதன் | 3 | - |
| த.சங்கவி | 1 | - | | | |
| மோ.கயல்விழி | 2 | - | பாடல் - குழு | | |
| தரம் 5 | | | தரம் 2 | 2 | - |
| தே.யுபீதரன் | 5 | - | தரம் 3 | 1 | - |
| ர.சங்கவி | 5 | - | | | |
| | | | தனிப்பாடல் | | |
| 2011 | | | தரம் 4 | | |
| | | | கி.டன்சிகா | 2 | 2 |
| கவிதை | | | | | |
| தரம் 3 | | | | | |
| த.டேனுஷா | 1 | 3 | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | கோட்ட | வலய |
|---|---|---|
| *சஞ்சிகைப் போட்டி* | | |
| 2008 | | |
| தரம் 2 | | |
| த.சங்கீதன் | 1 | - |
| தரம் 5 | | |
| சி.உதர்சன் | 1 | - |
| லக்ஷனா | 3 | - |
| *திருக்குறள் மனனம்* | | |
| 2008 | | |
| டெ.லிதுர்சிஷா | 2 | - |
| த.சங்கவி | 1 | - |
| ஆ.இலாவன்யா | 1 | - |
| மோ.ஆரபி | 1 | 3 |
| த.சங்கீதன் | 4 | 2 |
| 2009 | | |
| இ.கார்த்தியாயினி | 2 | - |
| த.சங்கீதன் | 2 | 2 |
| மு.வானதி | 2 | - |
| 2010 | | |
| ஜெ.லிதுர்ஷிகா | 3 | - |
| த.சங்கவி | 1 | |
| 2011 | | |
| இ.தாரங்கி | 2 | - |
| சி.கோபிகா | 3 | - |
| மோ.கயல்விழி | 3 | - |
| 2012 | | |
| ஆ.பிறிஸ்டிகன் | 3 | - |
| 2013 | | |
| பி.சாமந்தி | 3 | - |
| த.சந்தோஸ் | 1 | - |
| சி.கேமலோஜினி | 3 | - |
| சி.சிவானுஜன் | 1 | 2 |
| ற.ருஷானி | 3 | - |
| *சித்திரப் போட்டி* | | |
| 2008 | | |
| ர.துஷாரா | 2 | - |

| | கோட்ட | வலய |
|---|---|---|
| 2011 | | |
| ஜெ.ஜெனீஷா | 3 | - |
| த.டனுஸ்ரன் | 1 | - |
| த.சங்கீதன் | 2 | - |
| 2012 | | |
| ரா.பவித்தன் | 2 | - |
| த.டனுஸ்ரன் | 3 | - |
| 2013 | | |
| சு.லக்சியன் | 2 | - |
| 2014 | | |
| ஜானுயன் | | |
| கோ.ரதுசிகா | 1 | - |
| *பண்ணிசைப் போட்டி* | | |
| 2011 | | |
| வி.டிலக்சனா | 2 | - |
| சி.தருணிகா | 3 | - |
| 2012 | | |
| சி.பங்கயா | 3 | - |
| சி.தருணிகா | 3 | - |
| அ.அமிர்தினி | 3 | - |
| சி.ஹேமலோஜினி | 3 | - |
| செ.துஷாந்தினி | 3 | - |
| 2014 | | |
| குழு | | |
| தரம் 2 | 1 | 1 |
| *சிறுவர் நாடகம்* | | |
| 2014 | 1 | - |
| 2009 | 3 | - |
| 2012 | 3 | - |
| *சிங்கள மொழி தினம்* | | |
| பேச்சு | | |
| சி.ஹேமலோஜினி | 3 | - |
| ஜெ.சேர்ன் சச்கித் | 4 | - |
| குழுப்பாடல் | 2 | - |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | கோட்ட | வலய | | கோட்ட | வலய |
|---|---|---|---|---|---|
| *சிங்கள விநாடி வினா* | | | 2011 | | |
| 2011 | | | ஜெ.சிவப்பிரியா | 1 | - |
| த.டனுஸ்ரன் | 2 | - | ஜெ.ஜெக்ரோன் | 3 | - |
| த.சங்கவி | 2 | 3 | சி.சோவிகா | 4 | - |
| த.மதுமிலா | 1 | - | யோ.டினோஜா **(மாகாணம் 2ம் இடம்)** | 1 | 1 |
| 2013 | | | ற.டல்சிகா | 4 | 2 |
| கோ.ரதுஷிகா | 1 | 1 | வி.நிசாந் | 2 | 4 |
| சி.சஹானா | 2 | - | த.சங்கீதன் | 1 | - |
| த.மதுமிலா | 1 | - | மோ.கயல்விழி | 3 | - |
| 2014 | | | | | |
| குழு | | | 2012 | | |
| தரம் 1 | 2 | | யோ.டினோயா | 1 | - |
| தரம் 2 | 1 | | று.டல்சிகா | 2 | - |
| தரம் 3 | 2 | | | | |
| தரம் 5 | 1 | | 2013 | | |
| | | | றா.ஜனனிகா | 4 | - |
| *கோலப் போட்டி* | | | | | |
| 2009 | | | 2014 | | |
| ர.துஷாரா | 2 | 3 | கோ.ரதுசிகா | 1 | 3 |
| த.சங்கவி | 2 | 3 | சி.ஆரபி | 4 | 4 |
| | | | நா.சிந்தூரி | 3 | 3 |
| 2010 | | | நா.ஜனனிகா | 3 | - |
| த.டனுஸ்ரன் | 2 | 4 | த.டனுஸ்ரன் | 5 | - |
| சு.டானியா | 3 | | | | |
| *100 சதுரத்திறன் போட்டி* | | | | | |
| 2009 | | | | | |
| வி.நிசாந் | 1 | 5 | | | |
| நே.இராஜினி | 5 | 3 | | | |
| த.சங்கீதன் | 1 | | | | |
| ர.துவாரகன் | 3 | 5 | | | |
| 2010 | | | | | |
| வி.நிசாந் | 2 | 4 | | | |
| ர.துஷான் | 3 | - | | | |
| த.சங்கீதன் | 1 | 3 | | | |
| தே.யுபீரதன் | 6 | - | | | |
| மு.நிதுஜன் | 4 | - | | | |
| த.சங்கவி | 2 | - | | | |
| த.டேனுஷா | 2 | - | | | |
| க.விதுஜா | 4 | - | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுப் போட்டி

| விளையாட்டு | பெயர் | கோட்டம் | வலயம் | மாகாண |
|---|---|---|---|---|
| 2008 | | | | |
| 100 மீ ஓட்டம் | ர.மதுஷா | 1 | 3 | - |
| 75மீ ஓட்டம் | ர.மதுஷா | 1 | 3 | - |
| உயரம் பாய்தல் | ர.மதுஷா | 2 | 1 | 3 |
| நீளம் பாய்தல் | சி.அபிநயா | 1 | 3 | - |
| பந்து எறிதல் | சி.அபிநயா | 3 | - | - |
| உயரம் பாய்தல் | சி.டிலக்ஷனா | 1 | 3 | - |
| பந்து எறிதல் | சு.கோவர்த்தினி | 1 | 2 | - |
| பெரிய பந்தெறிதல் | நீல் ஜோன்சன் | 2 | - | - |
| உயரம் பாய்தல் | ர.மதுஷா | 2 | 1 | - |
| 75மீ ஓட்டம் | ர.மதுஷா | 1 | 2 | - |
| 100மீ ஓட்டம் | ர.மதுஷா | 1 | - | - |
| முப்பாச்சல் | டில்றுக்ஷி | 2 | - | - |
| 2009 | | | | |
| 50மீ ஓட்டம் | ஜெ.லிதுர்சிஹா | 3 | - | - |
| 75மீ ஓட்டம் | ஜெ.லிதுர்சிஹா | 3 | - | - |
| 4x50மீ அஞ்சல் | 8 வயதின் கீழ் பெண் | 2 | - | - |
| குறிபார்த்து எறிதல் | சி.தர்சன் | 2 | - | - |
| 4x50மீ அஞ்சல் | 10 வயதின் கீழ் ஆண் | 3 | - | - |
| பெரிய பந்தெறிதல் | ஜெ.ஜெனார்த்தனி | 2 | - | - |
| 4x50மீ அஞ்சல் | 10 வயதின் கீழ் பெண் | | | |
| 100 மீ ஓட்டம் | ம.அபிலாஷ் | 1 | - | - |
| பெரிய பந்தெறிதல் | த.சியானஸ் | 3 | - | - |
| உயரம் பாய்தல் | த.சியானஸ் | 3 | - | - |
| 2010 | | | | |
| குறிபார்த்து எறிதல் | இ.பிரியங்கா | 2 | - | - |
| 2010 | | | | |
| பெரிய பந்தெறிதல் | மா.நிதுஷன் | 2 | - | - |
| 100 மீ ஓட்டம் | ஜெ.சேர்ன்சச்சித் | 3 | - | - |
| 4x50 மீ அஞ்சல் | குழு | 3 | - | - |
| 2013 | | | | |
| உயரம் பாய்தல் | லோ.அபூர்வன் | 3 | - | - |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# School learning Improvement Grant to Schools (SLIG)

| ஆண்டு | வலயத்தால் ஒதுக்கபட்ட நிதி | வரவு | செயற்பாடு | செலவு |
|---|---|---|---|---|
| 2014 | 70,000.00<br>மூலதனப் பொருட்கள் கொள்வனவு | 35,000.00 | பிளனல் போட் - 1<br>பிலிப் சார்ட் போட் - 1<br>மெகா போன் - 1<br>மிருதங்கம் - 1<br>} கொள்வனவு | 35,000.00 |
| | PSI தொடர்பான விழிப்புணர்வு | 7000.00 | PSI விழிப்புணர்வு தொடர்பான 2 பொதுக் கூட்டங்களும் 2 நிர்வாக சபைக் கூட்டங்களும் நடாத்தப்பெற்றன. | 7000.00 |
| | SDP செயற்றிட்டம் தயாரித்தல் | 35,00.00 | ஐந்தாண்டுத் திட்டம், ஓராண்டுத் திட்டம் தயாரித்தல் | 3500.00 |
| | பாடசாலை அபிவிருத்தித் திட்டம் தயாரித்தல் | 2,4500.00 | தரம் 3 மாணவர்களின் பற்சுகாதாரச் செயற்றிட்டம், ஆசிரியர்களுக்கான செயல்நிலை ஆய்வு<br>தரம் 5 மாணவர்களுக்கான சுற்றாடல் முகாம்<br>வகுப்பறைகளுக்கான செருகல் அட்டைகள்<br>தரம் 4 மாணவர்களுக்கான சுற்றாடல் முகாம் | 2,4500.00 |
| | | 70,000.00 | | 70;000.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# School learning Improvement Grant to Schools (SLIG)


| ஆண்டு | வலயத்தால் ஒதுக்கபட்ட நிதி | வரவு | செயற்பாடு | செலவு |
|---|---|---|---|---|
| 2015 | 72,000.00<br>மூலதனப் பொருட்கள் கொள்வனவு | 36,250.00 | டொல்கி<br>சுருதிப்பெட்டி<br>CD பிளேயர்<br>தாளம்<br>பின் போர்ட்(5x4)<br>சதங்கை 1 சோடி | 36,250.00 |
| | PSI தொடர்பான விழிப்புணர்வு | 7250.00 | PSI விழிப்புணர்வுச் செயற்பாட்டுக் கூட்டம் நடாத்துதல்<br>2 பொதுக் கூட்டங்களும் 3 நிர்வாக சபைக் கூட்டங்களும் நடாத்தப்பெற்றன.<br>போட்டோ பிரதி செலவினம் | 7,250.00 |
| | SDP செயற்றிட்டம் தயாரித்தல் | 3,625.00 | ஐந்தாண்டுத் திட்டம், ஓராண்டுத் திட்டம் தயாரித்தல். ஸ்ரீனு கூட்டம் நடாத்தப்பெற்றமை மீளாய்வுக் கூட்டம் நடாத்தப் பெற்றமை போட்டோபிரதி, உபசாரச் செலவு | 3,625.00 |
| | பாடசாலை அபிவிருத்தித் திட்டம் தயாரித்தல் | 25,375.00 | மாணவர்களுக்கான செயற்பட்டு மகிழ்வோம் உடற்பயிற்சிச் செயலமர்வு | 25,375.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆண்டு | வலயத்தால் ஒதுக்கபட்ட நிதி | வரவு | செயற்பாடு | செலவு |
|---|---|---|---|---|
| | | | ஆசிரியர்களுக்கான செயல்நிலை ஆய்வு<br><br>தரம் 5 மாணவர்களுக்கான சுற்றாடல் முகாம்<br><br>தரம் 4 மாணவர்களுக்கான கணித முகாம்<br><br>தரம் 3 மாணவர்களுக்கான கணித முகாம்<br><br>தரம் 3 மாணவர்களுக்கான ஆங்கில வாசிப்பு முகாம்<br><br>தரம் 4 மாணவர்களுக்கான ஆங்கில வாசிப்பு முகாம்<br><br>2ம் மொழிச் செயற்றிட்டம் | |
| | | 72,000.00 | | 72,000.00 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை நில வரைபடம்

## SCHOOL LAND PLAN






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றிக்குரியவர்கள் வரிசையில்...

எமது பாடசாலையின் தங்கமலர் சிறப்புற வெளிவருவதற்கு உளப்பூர்வமாக உதவி நல்கியவர்கள் பலர். இந்த வகையில் இம்மலருக்கு ஆசிச்செய்திகளை வழங்கி ஊக்கம் தந்த வலயக்கல்விப்பணிப்பாளர், கோட்டக் கல்விப்பணிப்பாளர், ஸ்ரீதுர்க்கா தேவஸ்தானத் தலைவர், பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளர், பழைய மாணவர் சங்கச் செயலாளர் ஆகியோருக்கு நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளோம்.

தங்கமலர் உருவாக்கத்திற்குரிய ஆலோசனைகளை வழங்கி எம்மை யெல்லாம் ஆற்றுப்படுத்தி உதவிபுரிந்த எமது பாடசாலையின் முதல்வர், உதவி முதல்வர், ஆசியரியர்கள், கல்விசாரா் ஊழியர்கள், மலருக்கான ஆக்கங்கதைத் தந்து உதவிய படைப்பாளிகள், கணனியில் வடிவமைத்துத் தந்த ஆசிரியர்கள், நிதிஉதவி புரிந்தவர்கள், விளம்பரதார்கள், சஞ்சிகை அழகுற வடிவமைத்துத்ததந்த நீற் நிறுவனத்தினர், படங்களை எடுத்து உதவி புரிந்து சோதி கலர் லாப் நிறுவனத் தினருக்கும், மற்றும் சஞ்சிகையின் ஆக்கத்திற்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் அனைத்து வழிகளிலும் துணைநின்ற அனைத்து நல்லிதயம் கொண்டவர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

- *மலர்க் குழு*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லாகம், யா/ கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயத்தின் "தங்க மலர்" சிறப்புற மலர வாழ்த்துகின்றோம்.

# ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

**இல. 212, கே. கே. எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்.**



**மாணவர்களுக்குத் தேவையான பாடப்புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், அனைத்தையும் ஒரே கூரையின் கீழ்ப் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய இடம்**



# ALL CEYLON DISTRIBUTORS

**No.212, K. K. S. Road,**
**Jaffna.**
**T. P. No.: 021 222 5542, 021 222 567 1527**
**Fax: 021 222 7983**
**e-mail: acdil@ymail.com**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org